ஓம்.

தத்ஸத்.

ஸ்ரீ சற்குரூப்யோ நம:

தோத்திரத்திரட்டு.

இஃது

இயாழ்ப்பாணம்,

பிரம்மஸ்ரீ, கடையற்சுவாமிகளின் மரபு

பிரம்மஸ்ரீ, சற்குருநாத சுவாமிகளின்

பூங்கழற் பூசகர்

ஸ்ரீமத், நித்தியானந்த சுவாமிகள்

இயற்றித்தர

திருநெல்வேலி, குளத்துத்தெரு,

திருவாளர்,

அணைந்தபெருமாள் பூசாரியவர்கள் குமாரர்

திருவளர் செல்வர்

அற்புதம் பிள்ளையவர்களால்

திருநெல்வேலி,

ஹிலால் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

ஸ்ரீமுகவரு தைமீ

இதன் விலை] 1934 [அணை 8

ஓம்
கதஸ்தத்
ஸ்ரீ சற்குரூப்யோ நம:

விஷய சூசிகை

எண்			பக்கம்
க	முகவுரை	....	iii
உ	சிறப்புப்பாயிரம்	....	vii
ங	பாயிரம்	....	xviii
ச	ஸ்ரீ அப்பரானந்த ஞானதேசிக சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்	....	i
ஞ	மேற்படியார் திருவிளையாடற்பேறு	....	க
ட	மேற்படியார் தோத்திரப்பாமாலை	....	உட
ண	ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள் தோத்திரப்பா மாலை	....	ஙக
அ	ஸ்ரீ முப்பிடாரியம்மைபதிகம்	...	சள
க	ஸ்ரீ சற்குருநாதசுவாமிகள் திருவடிப்பேறு	....	ஞச
ஔ	மேற்படியார் தோத்திரப்பாமாலை	....	ஞக
ஔக	ஸ்ரீ அகத்தீசுரர் பதிகம்	....	கக
ஔஉ	ஸ்ரீ பராசத்தி தோத்திரப்பாமாலை	...	எட
ஔங	ஸ்ரீ ராஜராஜேஸ்வரியம்பிகை பதிகம்	....	கஉ
ஔச	ஸ்ரீ மீனுன்மணிக்கண்ணி	...	கஅ
ஔஞ	நெஞ்சோடிரங்கல்	....	கஐ
	ஊத்துமலை வித்வான் திருவாளர் S. கிருஷ்ணஆச்சாரியவர்கள் இயற்றிய		
ஔட	திருப்பொன்னூசற் பதிகம்	....	ககஞ
ஔண	சைவசமய விளக்கம்	....	ககங
ஔஅ	பிழை திருத்தம்	....	கங

ஓம்

தத்ஸத்

ஸ்ரீ சற்குரூப்யோ நமஃ

முகவுரை

திருவருட் பிரகாச வள்ளலாராகிய பிரம்மஸ்ரீ அப்பரானந்த ஞானதேசிகப் பெருந்தகையார் கிருபா வீக்ஷண்யத்தால் இயாழ்ப் பாணம் பிரம்மஸ்ரீ கடையற் சுவாமிகளின் சீரடிக்குடியாயலங்கும் ஸ்ரீமத், நித்தியானந்த சுவாமிகளியற்றித் தந்த தோத்திரத்திரட் டென்னு மிந்நூலினை அச்சுவாகன மெழுவித்தஞான்று ஊத்துமலை வித்வான் திருவாளர் S. கிருஷ்ண ஆச்சாரியவர்களியற்றிய ஸ்ரீ அப்பரானந்த ஞானதேசிக சுவாமிகள் திருப்போன்னூசற் பதிகமும் மற்றும் பல அரும்பெரு நூற்களி நின்றும்திரட்டியுள்ளன வாய சைவசமய விளக்கம் என்னும் பனுவல்களையும் சிவஞானச் செல்வமல்கும் பல பேரன்பர்களின் வேண்டுகோளுக் கிணங்கி இந் நூலினிறுதியின்கண் ணமைக்கப் பெற்றுளேன்.

ஆகையா லிப்பிரபந்தத்திலிலங்கும் பாசுரங்களைத் திருக்கண் சாத்தியும், உளக்கண்ணேர்ந்தும், செவிப்புலன் மாந்தியும், அன்போ டோதி யுணர்ந்து முள்ள பேரறிஞர்களாதிய பல்லுயிர்த்திரள் களுமொருங்கே ஜனன மரணப் பிணியினின்று விடுபட்டு எல்லாஞ் செய்யவல்ல சிவானந்த நிலையமாயிலங்கும் பேரின்ப வாழ்வினைப் பெற்றுய்யு வண்ணம் கருணையங்கடலா மெம் மிறைவன் பொன்னடி போற்றி அன்புடனிறைஞ்சா நின்றனன்.

இவ்வரிய பிரபந்தத்தினைப் புதுக்கியும் திருத்தியும் விளக்கியு முள்ள சிந்துபூந்துறை வாசியும், ரிட்டையர்ட் போலீஸ் இன்ஸ் பெக்டரும், நெட்டூர்ஸ்தல புராணசிரியரும், கவிச்சக்கரவர்த்தியு மாகிய, திருவாளர், B. B. நாராயணசுவாமி நாயுடு அவர்களின் பேருதவியை அன்பர்களெஞ்ஞான்றும் போற்றற் பாலதே.

இங்ஙனம்

அடியார்க்கடியன்


அ. அற்புதம் பிள்ளை

குளத்துத்தெரு, திருநெல்வேலி.

ஓம்

தத்ஸத்

ஸ்ரீ சற்குரூப்யோ நமஃ



ஜோதிலிங்க சொரூபரா யெழுந்தருளிய

பிரம்மஸ்ரீ

அப்பரானந்த ஞானதேசிக

யோகீசுரர்.

ஓம்

கதஸ்தத்

ஸ்ரீ சற்குருப்யோ நம:

சிறப்புப்பாயிரம்.

திருச்செந்தூர் அட்டாவதானி

பிரம்மஸ்ரீ

கட்டியம், மகாதேவஐயரவர்கள் இயற்றியது

வெண்பா.

பத்தியா னந்தப் பராசத்தி யாதியரை
நித்தியா னந்தப்பேர் நின்மலன்—உத்தியாற்
பாமாலை சொற்றுன் படிப்போர்க் குலகமெனு
மாமாலை நீக்கும் வழி.

திருநெல்வேலி மணிவாசக மன்றத்தலைவரும், தாகூர் சட்டப் பேராசிரியரும், திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் தர்மகர்த்தருமாகிய

திருவாளர்:- கா. சுப்பிரமணிய பிள்ளை, M. A., M. L.,

அவர்கள் நல்கியது.

திருவருட் பொலிவிலங்கும் பழைய பாவநாசம் அகத்திய முனிவர் கோயிலருகே தவமியற்றும் பிரம்மஸ்ரீ நித்தியானந்த சுவாமிகள் இயற்றியருளிய ஸ்ரீ அப்பரானந்த சுவாமிகள் திருவிளையாடற்பேறு, தோத்திரப்பாமாலை, முருகக்கடவுள் தோத்திரப்பாமாலை, முதலிய பிரபந்தங்கள் திருவருள்பெற்ற பெரியாரது அருஞ்செயற்றிறன்களையும் முருகக்கடவுள் சிவசத்தி முதலிய கடவுள் மூர்த்தங்களின் பேரருட் பெருமையும் செவ்விதின் விளக்கும் இனிய எளிய செந்தமிழ்ப்பா நயத்தோடு இலங்குகின்றன.

மேலும் அவை மலதத்துவக் கருத்துக்களையும் நன்கு எடுத்தியம்புந் தன்மையன ஆதலால் கடவுட் பத்தியுடைய தமிழன்பர் யாவரும் மேற்கண்ட சுவாமிகளின் அரிய பிரபந்தங்களைக் கற்று பெரும்பயன் எய்தவும் அவற்றைப் போற்றவுங் கடமைப்பட்டுள்ளார்கள்.

சிறப்புப்பாயிரம்


சிந்துபூந்துறை வாசரும், நெட்டூர்ஸ்தலபுராணமுதலான நூல்களின்
ஆசிரியரும், ரிட்டையர்ட் போலீஸ் இன்ஸ்பெக்டருமான
கவிசக்கரவர்த்தியாகிய

திருவாளர் B. B.

நாராயணசுவாமி நாயுடு அவர்களியற்றிய

பஞ்சரத்தின சித்திரக் கவிகள்.

இரதபந்தம்




(1) கம்=அறிவு
(2) சீர்=செல்வம்
(3) கனம்=பெருமை
(4) மன=பொருந்த

சீர்வேய்தேர் மெய்யோர்க்கந்(1) தேனைவெல்சொற் சீர்த்ததன்மை
சீர்(2)மாண்சேர்ந் தெண்கவி தேர்ச்(3)சிகன—மார்வுறு
நித்தியா னந்த நியதி மன(4)சுத்த
நித்தியா னந்தனே யே நேர்

சிறப்புப்பாயிரம்

இரட்டைநாகபந்தம்



மாநித்தி யானந்த மாதவ (1) மன் சித்தர் (2) மனே
(3) மாநத்தா னந்தமொன்றி மண்ணெடின
(4) வானத்தி
கானமிழைபா கவின வெண்ணெடித
(5) மீனவமா நேருமுனியே


உ

(1) மன்=நிலைபெற்ற (2) மனே=இறையே (3) மா+நத்து
(4) வான்+நத்தி=இச்சித்து+கானம்=இசை (5) ஈன+அம்மா=அழகாக

X

சிறப்புப்பாயிரம்

அட்டநாகபந்தம்



வெண்பா

நித்தியா னந்த நிமல னிசைகவி
யெத்தி சையுநி லவியெழு—பத்தி
மிகைக மழுமையா மேவுறுந் தாவி
லகமுத்தி யீயு மறி. ஈ

சிறப்புப்பாயிரம்

விசித்திர அகவல்.

மேற்கண்ட அட்டநாகபந்த வெண்பாவிலுள்ள ஒவ்வோரொழுத்தையும் இவ்விசித்திர வகவலின் ஒவ்வோரடியின் இரண்டாவதெழுத்தாக அமைத்திருக்கிறது.

பூநிரை தேன்சொரி காநிறை யாழ்ப்பா
ணத்துண் ணுவலர் நன்குறை வண்ணியம்
பதியி லவதரி பண்ணவன் பாத
தாயா நின்ற கடையன்மா மரபின்
மனங்கொண் மாணவன் மண்பேண் நித்தியா நு
நந்த முனிவன் (1) நாருற நல்கிய
சதமக ணுதியர் சதிருடன் பேணும்
புநிதமார் நெட்டூர்ப் புரியிற்போந் தன்பி
ணமர்ந்த வப்பரா நந்த வடிகளி
னலகில் சரித்திரச் சுருக்கமு மன்னவ கo
(2) னனியமிற் றிருவிளை யாடற் பேறும்
திசைநனி யேத்துதோத் திரப்பா மாலையும்
குகபிரான் தோத்திர மாலையுங் கோல
மவிரு மும்முக வம்மை பதிகமும்
தேயென் றேசிகன் றிருவடிப் பேறுடன் கரு
தோத்திர மாலையுந் தொன்மைகொள் டொதிகை
வதிதரு குறுமுனி பதிகமும் வானவர்
நசையுடன் பேணு நாரிமேற் றோத்திரம்
வேயு மாலையும் விமலை ராஜேஸ்வரி
புநிதைமேற் பதிகமும் புன்மைசேர் மூன்று உo

சிறப்புப்பாயிரம்

மலமறு மேனென்மணிக் கண்ணியும் மாட்சி
யவிரு நெஞ்சோ டிரங்கலா தி
நேயெழு நூல்களை நேரில்யான் பார்த்துள்
ளெழுந்த மகிழ்வினை யென்னென் றுரைப்பேன்
சுபமுறக் கம்பனிந் நாளிற் றோன்றில் உரு
சித்தமொ டாகஞ் சோரத் தழீஇநா
ரதிகங் கொண்டுதன் னகமகிழ் வாஞல்.
பாமிகப் பணிகச்சி யப்பனும் பார்க்கில்
தகையுட னுகந் தழீஇமகிழ் சார்வனுல்.
வாகம ரிந்நூல் மகிமையைச் சாற்றில் ஈ0
(3) கமமுறு காணங் கணத்திற் காடுறும்
வழுவுறு காமக் களங்கம் மாயும்
சுமையுறு தேகப் பிறவி தொலையும்
(4) வயாவளி மாயை நொடியின் மறையும்
நாமேவி கல்வி நலமுற வமையும் ஈரு
மாவுறு மெவ்விதச் செல்வமும் வந்துறும்
அறுகணி புனைந்த வானைமா முகன்முதல்
அந்தமார் கடவுளர் பாலன்பை யாற்றும்
சதாவுமத் வைதச் சார்பை யளிக்கும்
தாவி லடியார் சந்தே டத்தொடு சo
பலபகற் காறும் பத்தி செய்து
வாக தமர மன்னி வாட்டமில்
(5) லமுத மடைந்துய வாற்றுமால் மெய்யினே.
சித்தமோ டிவ்வி சித்திர வகவலில்
விதியுட னுரையொவொ ரடிகளின் மேவுறு சரு
நேயீ னிரண்டா மெழுத்தை நிரப்பிற்பூ
வாயுமே னுரையட்ட நாக பந்த
மமருவெண் பாவரு மதனை
யறிஞரேற் றகமகிழ் வடைவ ரன்பினே. (சு) சக

(1) நார்=அன்பு
(2) அனியம்=அன்னியம்
(3) கமம்+உறு=நிறைந்த
(4) வயா=வருத்தம்
(5) அழுதம்=முத்தி

சிறப்புப்பாயிரம்

நடுவெழுத்தலங்காரம்.


வெண்பா.

பெண்வாள் புதியனெய் பீடுதோ னூறுமின்னல்
எண்பிரிதி போர்நடுப்பே ரீய்ந்துமற்ற—வொண்ணெழுத்தை
கொத்திநல்கி காத்தழித்து கூட்டியிட்டு நோர்ந்திணைக்கும்
நித்தியா னந்தன்பா நோர்ந்து. (நு)

பெண் = வநிதை—வதை—கொத்தி
வாள் = கத்தி —கதி —நல்கி
புதியன் = அதிதி —அதி —காத்து
நோய் = வியாதி—வீதி —அழித்து
பீடு = கனம் —கம் —கூட்டி
தோல் = தந்தி —ததி —இட்டு
நூறு = சதம் —சம் —நோர்ந்து
மின்னல் = சம்பை—சபை—இணைக்கும்

நடுவெழுத்து.

நித்தியானந்தம்.



நெட்டூர் பிரம்மஸ்ரீ அப்பரானந்த ஞானதேசிக மூர்த்தியின்
திருவடி சேகரரான வித்துவான்
திருவளர்செல்வர்
மு. சங்கரபாண்டியம் பிள்ளையவர்கள்
இயற்றியவை.

கலிமகண்மன் யாழ்ப்பாண மிலங்கு வண்ணைக்
கண்ணிலகு சற்குருபூந் தாட்கொண் டோழாம்
நிலைநிலவு நித்தியா னந்த னென்னும்
நோர்தவ னிராலம்ப நிபுண னெண்ணெண்

சிறப்புப்பாயிரம்

பலகலையு மோங்குகுரு கடாக்ஷ முற்றோன்
பரமான்ப வநுபூதி பதிந்த சீல
னலகுலவு முலகெலாம் போற்று மன்பன்
அ ணுருவி னெழுத்தொன்றி லவிர்ந்த தூயோன் க

திருவளரு நெடியநகர் தலத்து ளோங்குஞ்
சிற்பரனெ னப்பரா னந்தன் பேரி
லரியதிரு விளையாட லகவல் தோத்திர
மனவர த மன்பிலக வருளிச் செய்தே
நிருமலி பராசத்தி முப்பி டாரி
நிர்க்குணிமென் மலரடிக்க ணலங்கல் வேய்ந்தும்
(1) நிருவாண நிலைநிறுவ நேர்மை கொண்டு
நெஞ்சறி வுறுத்தலை நிகழ்த்தி மேலும் உ

விசையரெங்க பூபால நகரின் மேய
விரிகதிர்வேற் செவ்வேளின் தோத்ர மாலை
திசைகடந்த வெண்டோண்முக் கண்ணி யம்மை
தேவிரா ஜேஸ்வரிபொற் பதிக மோடு
இசையிலங்கு சற்குருப்பூந் திருவ டிப்பே
றெழின்மாலை மலையமுனி பதிகத் தோடு
மிசையின்மகிழ் மனோன்மணியாட் கண்ணி நெஞ்சோ
டிரங்கலையு முலகமுய விசைத்தா னம்மா ங

கல்லிடைக்குறிச்சி கனகரத்தின புராதன திருச்
செங்க மலேந்திரபீடம் ஜகத்குருபிரம்மஶ்ரீ, அறிவா
னந்த யோகீசுரர் திருவடி சேகரரான சிங்கிகுளஞ்சரகம்
திடியூர் ஶ்ரீமத், சுப்பிரமணியசுவாமிகளியற்றியது

திருவளரி லங்கைதனின் யாழ்ப்பாண நகரின்மிசை
திகழ்வண்ணைப் பதிகொண் மேலாந்
திவ்யகுண ஞானசம் பன்னஞ் தெய்வீக
சிவராஜ யோகி யென்னும்

---

(1) முத்திநிலை

சிறப்புப்பாயிரம்

பெருமையொளிர் கடையற்பி ரான்மரபில் வளர்தூய
பெட்பிலகு சற்குரு வருள்
பெற்றுயரு நித்தியா னந்ததவ முனிவனேர்
பிர்மமென வோங்கு விமல
னருமைமிகு ராஜரா ஜேஸ்பரி பராசத்தி
யப்பரா னந்தர் குகவே
ளருண்மிகுஞ் சற்குரு வகத்தீச ராதிமீ
தருளின னலங்க லம்மா
வொருமையொடு பேரருள் பிறங்கிபல வுலகுயிர்க
ளுலவாத பேரின்ப மோ
டுயர்முத்தி சார்ந்துபிற விப்பிணி யொழிப்பவா
னும்பர்க ளிறைஞ்ச மாதே

நெட்டூரென்னும் விஜயரெங்க பூபாலநகரின் கண் திருக்கோவில் கொண்டருளிய பிரம்மஸ்ரீ அப்பரானந்தப் பெருந்தகையாரின் தாய்வழியி லொன்பதாவது தலை முறையினரும், மேற்கண்ட பெருமானின் திருப்பூந்தளிப் பூசகரும், இலஞ்சி பிரம்மஸ்ரீ அம்பலவாண முநிவரின் சற்சீடருமாகிய சீர்குடிச்செல்வராம்

திருவளர் மகிபர் க. அருணாசலம்பூசாரியவர்களியற்றிய

இருபத்தோரு சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சீர்பூத்த யாழ்ப்பாண வன்னியம் பதியோங்கி
நிரதிசய வானந்த மன்
நிமலனுங் கடையற் பிரான்மரபின் மிளிர்தூய
நித்தியா னந்த னென்னும்
நிராலம்ப மேவுசு காரம்ப வெளியொளிரு
நிர்க்குண னந்த மணியோன்

சிறப்புப்பாயிரம்


சீர்பூத்த நெடியநக ரப்பரா னந்தராந்
தேவர்கதை யொன்றி யற்றி
சிற்பரன் மீதுதிரு விளையாட லெனவருட்
சேர்ந்ததுதி மாலை யுடனே
செவ்வனே செவ்வேவட்கு தோத்திர மியற்றியே
சிவைமுப்பி டாரி மீது

பார்பூத்த பதிகமிக வேய்ந்துமேழ் பிறவியாம்
பற்றொழிய வன்பு கொண்டு
பண்பொடு கடாகூத்த சற்குருவி னருளோங்கு
பாதமலர்ப் பேற்றி னோடு
பரமகரு ணைநிதி யவன்மீது தோத்திரம்
பாமாலை சூடி பொருநைக்
கார்பூத்த பொதிகைவாழ் கும்பமுனி பதிகமொடு
கருணைவளர் குண்ட லிநிபாற்
கனமா மலங்கலொடு ராஜரா ஜேசுவரி
கௌரியாள் பதிக முடனே.
கவின்மதேனுன் மணிகண்ணி நெஞ்சுட னிரங்கலிவை
கழறிறு னுலக முயவே

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

சர்வம் சிவமயம்.

இரதபந்தம்.



வெண்பா.

வீடுயவெண் கல்வியறன் மெய்வினைநல் கெச்சமத்தஞ்
சேடுறுஞ்சொற் றேர்ந்துசொல்லுந் தேர்ச்சினைய
ணைடிடி
லப்பரா பேணை மரன்பணி யோ (1) மொப்பை
யப்பரா னந்தனை யண்டு

(1) ஓம்+ஒப்பு+ஐ=இறை

ஓம்
தத்ஸத்
ஸ்ரீ சற்குரூப்யோ நம:

பாயிரம்.

விநாயகர் வணக்கம்.

அப்பரா னந்த னடிமலரைப் போற்றிசைப்ப
அப்பரா வேணி யரனருளால்—அப்பரா
சத்தி வணங்கத் தனிப்பிரண வத்தொளிரும்
அத்திமுகன் பொற்கழலிற் காம்.

ஸ்ரீ சற்குரு வணக்கம்.

கலைகடந்துங் கற்பனையாங் காமாதி யாறி
னிலைகடந்தும் நிற்குணமாய் நின்றே—யலைகடந்த
வாரிதிபோன் றென்னுண் மனமாதிக் கப்பாலா
ராரியன்பூந் தாண்முடிக்கொள் வாம்.


கலாவல்லி வணக்கம்.

வெண்டாளி வெண்டுகிலி வேரிக் கமலத்தி
தண்டமிழென் னுவிற் றழைக்கவே—தொண்டர்ப்பணி
யன்னே யனத்தி யயனுளத்தி யன்புமிக
யின்னே யளித்தருள்வை யே.

(1) ஆடம் பரிரங்கி யையமறைக் (2) கன் னுமேவிப்
பாடெம் பிராமி பணிமொழியே—நாடொன்றிக்
கம்பர்க்கு நூபுரமீ கற்பகமே யென்னுளமா
மம்பொற் றளியி லமர்.

---

(1) ஆடு+அம்பு=நீர்+அவிர்+அங்கி (2) கல்=மலை+நா



இயாழ்ப்பாணம்,

ஸ்ரீமத்: நித்தியானந்த சுவாமிகள்.

பாயிரம்

ஓங்காரத் துள்ளோ ரொளிகாட் டருள்காட்டி
நீங்கார மேவி யிருப்பவளே—நீங்காத
நித்தியா னந்த நிருவிகற்பந் தந்துபரா
சத்தியாய் நின்றருளைத் தா.

நூற்பயன்.

காணம்போம் காமக் களங்கம்போம் காய
மாணம்போம் மாயைபோம் மாயாப்—பூணந்தோ
யின்னூற் பரிந்துணர்ந்தோ ரின்புருவா யோங்கிமகிழ்ந்
தென்னூலுந் தோர்ந்தவரா வெண்.

அவையடக்கம்.

நிற்குணமாய் நீங்கா நிரஞ்சனமாம் நின்மலத்தை
நற்குணனேன் மேய்ந்துளறிச் சொற்றதனை—
நற்குணரா
மான்மேர்ர் பொருத்தருள்க வாய தமிழ்ச்சுவையோர்
சான்மேர்ர் பொருத்தருள்க சார்ந்து

பாயிரம் முற்றிற்று.

சர்வம் சிற்மயம்.

ஓம்

தத்ஸத்

ஸ்ரீ சற்குரூப்யோ நம:

நேட்டூரம்பதியின்கண் கோவில் கொண்டோங்குந்
திருவருட் பிரகாச வள்ளலாராகிய

பிரம்மஸ்ரீ

அப்பரானந்த
ஞானதேசிக சுவாமிகள்

சரித்திரச் சுருக்கம்.

1. அகண்ட பரிபூரண சச்சிதானந்தப் பழம்பொருளாயும் அனுதிமலமுக்த சித்துருவாயும் ஆதிமத்யாந்தரகிதராயும் ஜோதி சொரூபலிங்கராயு மெழுந்தருளியிராநின்ற சாட்சாத் சிவபெருமான் (1) தேவியார் தடாதகைப்பிராட்டியம்மையார் (2) திருக்குமாரர் சிவசுப்பிரமணியக் கடவுள் (3) ஆக இம்மூவரும் அரசு செலுத்திவந்த பாண்டிய நாட்டின்கண் கடலுடையுடுத்த திருமந்திரநகரமென்னும் தூத்துக்குடிக்குச் சமீபத்தில் முனிசிரேஷ்டர்கள் நிறைந்துள்ள பட்டினமருதூரில் சீர்குடி வேளாளர் மரபின்கண் சிவருத்திரகோத்திரத்தில் சகல பாண்டித்தியங்களும் வாய்ந்துள்ள மகாராஜப் புலவரென்பார் மதுரவல்லியம்மையாரென்னும் மனைவியாரோடு வாழ்ந்துவந்தார்; அவர்கட்கு ஆதிமூலப்புலவர், அருணாசலப்புலவர், கந்தசாமிப்புலவர், நல்ல குமாரப்புலவர், சங்கிலிவீரப்புலவர்,

முத்தம்மாள், ஐயம்பெருமாள் புலவரென்னு மிமுழுவர்களும் பிறந்தனர். இவர்களுள் ஐபம்பெருமாள் புலவருக்குத் தங்கள் குலதெய்வமாகிய சாத்தாவின் திருநாமம் புனைந் தனர்.

2. திரிவிக்கிரமனை மகா விஷ்ணுவி னுத்தரீயம் போன்று வெள்ளிய அருவிகள் ஒல்லென வொலித்துப் பிரவாகிக்குந் திருக்குற்றாலமென்னுந் திவ்விய கேஷத்தி ரத்தைத் தாரகமாகக்கொண்டுள்ளனவும் சத்ஜன சமூகங்கள் குழீஇயதுமாகிய ஆரிய நாட்டிற் கணித்தாகிய முனிபுங்க வர்கள் நிட்டைசெய்தோங்கும் நிட்டைமாபுரியென்னும் நேட்டூரம்பதியின்கண் ணுயர்வுற்றோங்கிய வேலுமயிலுப் பண்டிதருக்குக் கற்பிற்கரசியாம் உத்தமியாயிலங்கும் முத் தம்மையாரைத் திருமணமுடித்துக் கொடுக்கப்பெற்றனர்.

3. மேற்கண்ட ஐயம்பெருமாள் புலவ ரிளமைப் பருவத்திலேயே சகல சாஸ்திரவிற்பன்ன சற்குண சம்பன் னராய் விளங்கினர். அப்போதவருக்குப் பூர்வ தபோபல மேலீட்டால், சுரண்டையென்னுந் தலத்துண் மிளிர்ந் தோங்கிய தவத்தின் மிகுத்தாளிநங் குழந்தை முத்தா னந்தப்பெருந்தகையாரென்னும் வள்ளலார் பட்டினமருது ருக்கெழுந்தருளியங்கு வீதியின்கண் சிறுவர்களுடன் விளை யாடிக்கொண்டிருந்த ஞானசொரூபராயிலங்கும் ஐபம்பெரு மாள் புலவரைக் கிருபாநோக்காற் கடாக்ஷித்து இவர் முன் சமதமாதி சம்பத்துகளைப் பயின்றுவிட்டகுறையினரெனத் தெரிந்து இவருக்குத் தத்துவார்த்தங்களையுணர்த்துதற் கியன்ற பக்குவமுடையாரெனத் திருவுள்ளங்கருதி அவ ரைத் தனியே யவ்வூர் விநாயகர் கோவிலுக்கு அழைத்துப் போந்து ஞானோபதேசம் செய்தனர், அக்கணமே ஞானப்

பிரகாசம் பொலிந்தோங்கிய வாற்றல் ஐயம்பெருமாள் புல வரும் தம்பெருமான் குழந்தை முத்தானந்த வள்ளலாரைப் பிரிவாற்றாது சாயைபோற்றொடர்ந்து மதுரையம்பதியின் கண்ணெழுந்தருளி யாங்கு தமது சற்குருவின் சதுர்விதப் பணிவிடைகளையும் முறையே குறைவரச் செய்து வந்தனர். அப்பாலன்னதந்தையர் குழந்தையின் பிரிவாற்றுமைக்கு அகங்குழைந்துருகியஞான்று தமது குல தெய்வமாகிய சாத்தா சுவாமி கனவின்கண் தோன்றிக் கூடலம்பதியில் ஞானசிரியரிடம் பணிவிடை செய்துகொண்டிருப்பதாகத் திருவாய் மலர்ந்தருளி மறைந்துள்ளார். அப்பால் ஆனந் தப்பரவசராகித் தந்தையார் கூடலம்பதிக்குச்சென்று குழந்தை முத்தானந்தப் பெருமானைத் தரிசித்துத் தமது புதல்வரையுங்கண்டின்பெய்தி திருமுன் குறையிரந்து நிற் றலைக் கிருபாநோக்கம் புரிந்து தந்தையாரினுள்ளக்கிடை யுணர்ந்தோராகிப் புதல்வரையழைத்து முன்னை வினை யறிந்து அப்பனே உனக்கு ஞானமானது இல்லறத்தினி ருந்தாற் பின் கிட்டுமெனத் திருவாய்மலர்ந்தருளி இவருக்கு இன்று முதல் ஞானி என்னும் திருநாமம் உலகமெங்கணும் வழங்குகவென அநுக்கிரகித்து அப்பால் தந்தையாருடன் புதல்வரையும் தம் நகரினுக்குச் செல விடுத்துத் தாமும் நிர் விகற்ப சமாதிபின்கண் திகழ்ந்துள்ளார். நிற்க, புதல் வருடன் தந்தையாரும் தம் நகரையடையப்பெற்று அன்று தொடங்கி புதல்வரை ஞானியாரென்னுந் திருநாமத்தா லெங்கணுமழைத்து வந்தனர்.

4. இவ்வாறுக தாய்தந்தையர்களுக்கிணங்கி ஞானி யார் புராதன நகரமாகிய களந்தையென்னுங் களக்காட்டில் ஞானபூரணியாகிய, இருளகற்றியம்மையாரென்னும் மாது சிரோமணியை விவாகோத்சவம் நிகழ்த்தியுள்ளார். இவ் வாறு நிகழாநிற்க இவரிருந்த மணவரையிலிருந்தவாறே

மறைந்து விட்டனர். ஆங்கமைந்த பல்லோருமுளங்கலங் கிப் பேதுற்றுழன்ற வளவி லிதனையுணர்ந்த கமைக்கையா ரான முத்தம்மையார் வேண்டுகோளுக்கிணங்கித் திரு வுள்ளங்கொண்டு மீளவுந் தமது திருமேனியை வெளிப் படுத்தலாயினர். இத் திருவிளையாடலைக் கண்ணுற்ற யாவர் களும் பேரானந்த சாகரத்துண் மூழ்கினவராய்ப் பின்பு தம்பதிகள் முதலாயினோர் பட்டினமருதூர் வந்து சேர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கும்போது ஞானியார் இதற்கு முன்னரே உலக வாழ்வு நிலையன்றென வுபேட்சித்தனராத லின் இதனை வெறுத்துத் தனியே நெட்டுரென்னுங் கலத் தின்கண்ணெழுந்தருளி தமக்கையாரில்லினின்றும் வாழ் நாள் கழித்துக்கொண்டு வந்தனர். அவை கண்ணுற்ற ஈன்றோர் கற்புக்கரசியாம் இருளகற்றியம்மையாரையும் நெட்டோரம்பதியின்கண் தமக்கையார் மாளிகையிற் கொண ர்ந்த ஞான்றே ஞானியாரின் றிருவுளம் அகப்புறப் பற் றின்றி மிளிர்ந்தமையா னுலகப் போருக் கஞ்சினவராய் தமைக்கையாரில்லினின்றும் நீங்கி அன்னகரின் தெற்றிணை பாகத்தின் முச்சந்தியாக விளங்கும் மறுகிலுப்பண், பனி, வெயில், காற்று, மழை, யாதிகளையோராது ஏகாக்கிரசித்தராய் நிருவிகற்பமெய்தி நிட்டாபரரா யெழுந் தருளப் பெற்றனர். அவ்வுழி உம்பர்களுவந்தே கறையான் களாக வந்து புற்றுயுயர்ந்து ஞானியாரின் றிருமேனியை மறைத்து வந்தனர். மேற்கண்ட இருளகற்றி யம்மையாரும் தமக்கையார் முத்தம்மையாரும் தபக்கோலங்கொண் டெழுந்தருளியிரானின்ற ஞானியாரின் றிருமேனியின் கண் பகலில் ஆதவன் கொடுமையையாற்றுவான் தம் முன்றூனை களான் மறைத்து வந்தார்கள். இங்ஙனம், இரண்டரை வருடங்களானவாறே புற்றுனது தமது திருமேனி முழு வதும் மூடிவிடவும் மேற்கண்ட இரண்டு அம்மையாரும்

எல்லாம்வல்ல முழுமுதற்கடவுளாகிய பிரணவசொரூபியாம் விநாயகப் பெருமானே, பக்தி பூர்வமாக தியானித்து ஒரு மண்டலம்வரை யுபாசனை புரிந்து வந்தனர். அதற்கவ் விநாயகப் பெருமான் அவர்கள்பால் திருவுளமிரங்கி யன் னகரின் காவலாம் முப்பிடாரியம்மையாரை ஞானியார்பால் விடுத்து வழுவின்றி இல்லறம் நடாத்திவரும்படி யாக்யாபி யென்றருள அவ்வம்மையாரும் அவ்வாக்ஞைக்கிணங்கி யவ்வாறுரைப்ப ஞானியார் செவிகொடாதசைவின்றி ஆனந் தாநுபூதியின்கண் மிளிர அதைத் தெரிந்துள்ள பிரண வாகாரரான விநாயகப் பெருமான் தனது துதிக்கை யால் தபோநிதியாகிய ஞானியாரைப் புற்றுடனெடுத்துச் சித்திரநதியிடை விடுத்தனர். ஆற்றின் பிரவாகத்தால் புற்றுமண் கரைந்து சீதளந்தோன்ற ஞானப்பிரகாச மெழுந்து பசு மந்தைகள் குழுமிய வவ்வுளி குத்துக்கல்லின் கண் விளக்கமெய்தினர். இத் திருவிளையாடலை அம்மை யாரிருவருக்கும் முப்பிடாரியம்மையாரால் விளக்கப்பட்டு ஆடையொன்றளித்து அத்தபோவள்ளலையாங்குள்ள சர்வ மதஸ்தர்களும் யேகோபித்து எதிர்கொண்டு அழைத்து வந்து சகோதரியின் மாளிகையின்கணிருத்தி சோடசவுப சாரங்களை செய்வித்தும் அவரினனுக்கிரகப் பிரசாதங்களை யேனையோர்களும்பெற்று கிருதார்த்தராய்த் திகழும் நாளை யில் இவ் விஷயங்களைக் கேள்வியுற்ற ஞானியாரை யின்ற அம்மையாரும் அப்பதியின்கணுற்று நம் பெருமானையுந் திருக்கண்ணுல் நோக்கப்பெற்று முன்னோர் முறைப்படி இல்லறம் நடாத்திவரும்படி திருவாய் மலர்ந்தருளியும் ஓர் இருப்பு வேலாயுதத்தையும் தம் திருக்கரத்தால் அளித்துப் பூஜித்து வரும்படி மொழிந்துள்ளார். அதற்கவருமியைந்து இல்லறத்தின்கண் ணிருந்தே அப்பதியின்கண் வேலா யுதத்தை ஸ்தாபித்துப் பிச்சையன்னமேற்று நிவேதித்தும் வரும் அடியார்களுக்கு அன்போடளித்தும் வந்தனர்.

5. அங்ஙான்று கருணையே திருமேனியாக் கொண்ட ஸ்ரீ அப்பரானந்த முனிவர் தவநிலையி லுறும்போழ்து நெட் டூர் நகரின் பாங்கருள்ள இலுப்பைமிச்சுத் திடரென்ற சிற் றூரிலுள்ள அந்தணர் குழாம் பொறுமை கொண்டனராய் முனிவர்மீது கற்களை யெடுத்து வீச அவை அம்முனிவர் ஆகத்திற் படாதொழிந்தமை கண்டும் அவர் பேரருட்டி றனையறியாராய்மேலும் மேலும் அவ்வணமியற்ற அவ்வேதி யர்கள் உலகமறிய பற்பல இடர்களுட் சிக்குண்டு மீள்விற் கிடமின்றி இறுதியிற் பதியை யிழந்து பல இடங்களுக்கு ஏகலுற்றனர். ஞானமே வடிவாயிலங்கும் தவசீலர் ஐய மேற்றுள அன்னத்தை நோயுற்றவர்களுக்கருத்தி சரீரப் பிணியும் பிறவிப் பிணியும் ஒழித்து வந்தனர். அடியார் களின் பொருட்டு அவ்வன்னத்திற்கு அகத்திக்கீரையும் வேற்றிலையும் கொடுத்துவந்த சேனையர்கள் அனைவரை நிறுத்திவிட அவர்களின் கொடிக்கால்களில் பயிராதிய விளையாதொழிய மீண்டும் அவர்களின் வேண்டுதலுக் கிரங்கி கிருபாகரரான தபோவள்ளல் வேறு நிலங்களில் பயிர் செய்யுமாறு திருவாய் மலர்ந்தருளிய வண்ணம் மற்ற நிலங்களில் பயிர்செய்ய விளைவதிகரித்ததினின்றும் ஞானி யாரை யாவர்களும் மிகவும் கொண்டாடப்பெற்றனர். இங் ஙான்றும் முன் கொடிக்கால் பயிர் செய்த நிலங்களில் பயிர் கள் பொலிவிழந்து விளங்குகின்றன. ஞானியாரின் பூரண சமாதிக்கு தெஷிண பாகத்தில் ஓர் அற்புதக் கூவமியற்ற அதில் கங்காதேவி பிரசன்னமாகி காட்சி தந்தருள அதிற் பல்லுலகங்களினு மிலங்கு உயிற்றிறள்கள் கும்பல் கும்ப லாக வந்து அத்தீர்த்தத்திற் படிந்து ஜனன மரணப் பிணி யொழியப்பெற்றுப் பேரின்பவாழ்வை யெய்திவருகின்றனர். இவ்வாறுக ஏழுநாள் அவரது பத்தினியாரோடு கூடியிருக்க

அவ்வம்மையார் கர்ப்பமாகி ஓர் பெண்மகவை யீன்றனர். மகவிற்கு ஞானியாரின் தாயாரின் திருநாமமிட்டு வழங்கி வந்தனர். பின்னும் ஓர் பெண்மக வுதிக்க வம்மகவிற்கு என்னைக்காத்த அம்மாள் எனத் திருநாமம் புனைந்தனர். இவர்களுள் சிரேஷ்டமகவை களக்காட்டு நகரின்கண் திருமணமுடித்துக் கொடுத்தனர். பின்னர் ஞானியார் தம் மனைவியாரை யழைத்து சந்நியாசஞ் செய்துகொள்ளும்படி ஆக்ஞாபித்து யதாப்பிரகாரம்—" சர்வதயா பரிபூரண பாத பங்கஜம் அநாதி பிச்சை ஏழையம்மா." யென்று சொல்லி பிச்சையேற்று வேலாயுதத்திற்கு நிவேதித்து வரும் அதிதி களுக்குதவி சேஷித்த அன்னத்தைப் புசித்து வரும்படி திருவாய்மலர்ந்தருளி கனிஷ்ட மகவைத் தமது சகோதரி முத்தம்மையார் குமாரருக்குத் திருமணமுடித்துக் கொடுக் கும்படி உத்திரவு செய்து துறவறமெய்தி பிரம்மானந்த ஸ்வானுபவ அநுபூதியுற்றிருளிரும் ஞான்று.

6. ஞானியார் தமது சற்குருநாதரான குழந்தை முத்தானந்த ஞானதேசிக சுவாமிகளின் பரிபூரண தசையை விளங்கினவராய் மன்னர்கோவிலென்னும் நகரத் திற்கேகி அச்சிவபாஞ் சுடராம் சற்குருநாதன் திருமுன் அஷ்டாங்க நமஸ்காரம் செய்து அஞ்சலியஸ்தராக நிற் புழி, குருநாதன் அநுக்கிரகித்து அப்பரானந்தரென்னுந் திருநாமம் புனையப்பெற்று அப்பால் சற்குருநாதன் பரி பூரண தசையைத் தெரிசித்து வேண்டும் சம்ஸ்காரங்களைப் பரக்க நடத்தினர். அக்காலம் கொல்லம் ஆண்டு தொள்ளா யிரத்துப் பத்தாம் வருடம் சித்திரை மாதம் பதினெட் டாந் திகதி குருவாரம் விசாக நட்சத்திரம் மேற்கண்ட பெருமானின் பாதாரவிந்தங்களை நெட்டூரம்பதியின்கணைழு வித்து வேலாயுதத்தின் பாங்கர் ஸ்தாபனஞ் செய்வித்து பூஜித்து வந்தனர். பின்பு அப்பரானந்தப் பெருமான்

ஒக்கநின்றுன் பொற்றைக் கெழுந்தருளி நிரு விகல்ப சமாதி யெய்துஞான்று வடகரை ஜமீந்தார் வெள்ளைப்பாண்டி யத்துரை ஈசுவராதீனமாக சுவாமிகளின் தெரிசனம் கிடைக்கப்பெற்று வந்தனை வழிபாடுகளியற்றி அரண் மனைக் கெழுந்தருளப் பிரார்த்திக்க ஒரு வாரத்திலவ்விடம் வருகிறேனெனத் திருவாய் மலர்ந்தருளி யவரைத் தம் நகருக்குச் செலவிடுத்து, அப்பால் நெட்டூரென்னும் ஸ்தலத் திற்கு மீண்டெழுந்தருளினர்.

7. அவ்வண்ணம் ஏழாவது தினத்தில் வடகரை யென்னும் நகரின்கணெழுந்தருள ஜமீந்தார் வெள்ளைப் பாண்டியத்துரை தமது பரிவாரங்களோடு எதிர்கொண் டழைத்துத் தனது அரண்மனையின்கண் கொடுவந்து சகல வந்தன வழிபாடுகளியற்றி தனது சிம்மாதனத்தின்க ணெழுந்தருளும்படி செய்து பெருமானின் அருட் பிர சாதத்தைப் பெற்று பேரானந்தப் பெரும் பேற்றையடைந் தனராகி மகிழ்வுற்றிருக்குமேல்வையி லாங்கு எட்டயபுரம் ஜமீன் வித்வசிரோமணியென மிளிர்ந்த கடிகைமுத்துப் புலவர் தோன்ற ஜமீந்தாராலுபசரிக்கப் பல ஆசிகளுங் கூறி வேண்டிய பரிசுகளும் பெற்றனர். அஞ்ஞான்று அவணிகழ்ந்த பேரானந்தக் காட்சியைக் கண்ணுற்ற கடிகை முத்துப் புலவர் பொறாராகி யிச் சந்நியாசி யாவரோவெனக் குரிசிலிடம் வினவலும் அவர், ஜனனமரணப் பிணியை யொருஉமெனது ஞான பண்டிதரெனச் சொற்ற மாத்திரத் தில் இன்னுமிப்பேதமை கொண்டுளீரென விகழ்ச்சிக் குறி காட்டிப் புன்னகை கொண்ட புலவர் பெருமானை நோக்கி உலகங்கடந்த பெரியார்மாட் டெவ்வகை சங்கற்ப விகற்பங் களுங் கொள்ளலொண்ணுதெனச் சமாதானங் கூறிப் புல வரோரைத் தமதூருக்குச் செலவிடுத்து அப்பரானந்தப்

பெருந்தகையார்பால்தத்துவார்த்தமென்னுமத்வீதஞானோ
பதேசம்பெற்று பரம சாந்த நிலையை யெய்தினராகிப் பின்
தமது சற்குருநாதனுகிய ஞானியாரை அவரது நகரின்கண்
செலவிடித்து பின்பெய்தியிருக்கும் ஞான்று கடிகைமுத்து
நாவலரினுள்ளக் கிடைக்கொப்ப தெய்வாதீனமாக அவரின்
வதனத்திலோர் புற்றுண்டாக வதனல் மிகவும் துன்
பெய்தினராகிப் பலவிழ் தங்களாலும் நீங்காமையை
யுத்தேசித்து சங்கரன்கோவிலின்கண்வந்து ஒரு மண்டலம்
வசனமிருக்க, அம்பிகை யுமாமகேஸ்பரி கனவிற்றோன்றி
செந்திலம்பதியின்கண் மிளிருங் கந்தவேளிடம் செல்க
வெனத் திருவாய் மலர்ந்தருளி மறைந்தவுடன் விழித்தன
ராகிப் பரவசங்கொண்டு ஆனந்த வருவி பொழிய அஞ்சலி
யஸ்தராகிப் பன்முறை வணங்கி யப்பால் திருச்செந்தூர்
வந்து முருகன் சந்நிதி சார்ந்து ஒரு மண்டலம் வசன
மியற்ற வோர்நாளிரவில் நித்திரையின்கண் மால்மருகனும்
ஆறுமுகப் பெருமான் றோன்றி நெட்டுரின்கண் விளங்கு
மெனது அன்பனுகிய அப்பரானந்தரிடஞ் செல்கவெனத்
திருவாய்மலர்ந்தருளி மறைந்தனர்.

8. அப்பால் புலவரேறு விழித்தெழுந்து கந்தவேள்
சந்நிதி சென்று தங்குறையிரந்தனராய் பல வணக்கங்களும்
புரிந்து மீண்டும் நெட்டோரம்பதியின்கணுற்று ஞானப்பிரகாச
ராமப்பரானந்தப் பெருந்தகையார் சந்நிதி சார்ந்து அன்பு
மீக்கொளப் பணிந்தும், நிகழ்ந்த விஷயங்களனைத்தும்
புகன்று குறையிரந்து நிற்ப கருணையே திருமேனியாக
வுடைய ஞானியார் திருவுளமிரங்கி பஞ்சாக்ஷரமும் அறக்
கூழுந்தந்தருளப் பணிந்தேதற்றுக்கொண்ட அக்கணமே
சரீரப்பிணியும் பிறவிப்பிணியும் நீங்கினவராகித் திருவருள்
சுரக்கப்பேரானந்தமுற்று, அப்பரானந்த மாலை, யென்னுந்
தண்டமிழலங்கலையும் புனைந்து பின் பெருமான் விடை

பெற்று அப்பால் வடகரை சென்று ஜமீன்தாரிடம் நிகழ்ந்த திருவிளையாடல்களை யெல்லாமெடுத்துக்கூறி விடைபெற் றுத் தமது ஊர் சென்றனர்; பின் ஜமீன்தார் தமது பரி வாரங்களுடன் மாசி மகத்திற்காக செந்திலம்பதிக்குப் பிரயாணித்துப் புறப்பட்டு ஞானியார் சமுகம்வந்து வணங்கி செந்திலம்பதிக்கு எழுந்தருளவேண்டுமென விண்ணப் பித்துத் தம் சிவிகையை திருமுன் வைத்தலும், உலக போகமுள்காதவராகையாலுபேட்சையுற்றனராய் சிவிகை யூராது பாதசாரியாகச்செல்ல யேனையோரும் புறப்பட்டு, செந்திமானகரடைந்து, அறுமுகப் பெருமான் சந்நிதி சென்று வணங்கி யருட்பிரபாவமெய்தினராய் ஞானியார் தமது நிரியாண காலந்தெரிய ஆர்வங்கொண்டனராய் முருகவேள் சந்நிதியிற் குறையிரந்து நிற்றலு மசரீரியாக வின்னும், இரண்டு வருடமுளதென, வாக்குண்டாகலும் ஆனந்தமெய்தினராய் பரவசங்கொண்டு கருணைமேகமா மிருகண்ணின்று அன்பு மழைபொழிய யஞ்சலியஸ்தராய் பன்முறை வணங்கியப்பால் ஜமீன்தாருடன் மற்ற பரிவாரங் களுஞ்சூழத் தமது நிட்டாபுரியின்க ணைழுந்தருளிப்பின் ஜமீன்தாரைப் பரிவாரங்களோடு வடகரையென்னும் பதிக் குச் செலவிடுத்து அப்பால் தபோநிதியாகிய ஞானியார் நிருவிகற்பசமாதி யெய்திப்பேரின்ப வாழ்வின் மிளிர்ந் தோங்கியுள்ளார். மேலும் வடகரை ஜமீந்தார் வெள்ளைப் பாண்டியத்துரை ஒக்க நின்றுன் பொற்றைக்கண் தவ மியற்றிக்கொண்டிருந்த ஞானமூர்த்தியை ஓர்கால் தரிசித்த் போழ்து இரண்டு நாகம் திருமேனிமீது மிளிரக்கண்டு குரி சில் பயமுற, பெருமான் கிருபா நோக்கங்கொண்டு அஞ்சலி தந்தருளலும் நாகங்கள் மறையப்பெற்றன. ஓர்கால் இப் பெருமானுடன் குரிசிலாதியருமாக செந்திலம்பதி சென்ற போழ்து ஞானியார் ஓர் நாளிரவில் முருகவேள் தெரிசனம்

செய்வான் ஆலய சன்னிதி செல்ல திருக்காப்பிட்டிருப் பதை யுணர்ந்த தபோநிதி இரங்கலும் படீரெனக் கதவந் திறக்கப்பெற்றுப் பேரானந்த சாகரத்துண் மூழ்கினவராய் தெரிசனம் செய்யப்பெற்றனர். மற்றும் சில அரும்பெருந் திருவிளையாடல்களும் புரிந்துள்ளார்.

9. இப் பெருமான் செய்தருளிய திருவிளையாடல் களெல்லாம், சிந்துபூந்துறை தக்ஷிணமூர்த்தி மடாலயவதி பதி பிர்ம்மஸ்ரீ வேதநாயகப் பெருந்தகையாரின் வேண்டு கோளுக்கிணங்கி, மேற்படி சிந்துபூந்துறை பென்ஷன் போலீஸ் இன்ஸ்பெக்டர் B. B. நாராயணசாமி நாயுடு யென்ற திருவாளராலியற்றப்பெற்ற நெட்டூர் ஸ்தல புரா ணம் சித்திச்சருக்கத்தில் பரக்கக்காணலாம். ஸ்ரீ அப் பரானந்தப் பெருந்தகையார் தமது பரிபூரண தசையை யுணர்ந்து வடகரை வெள்ளைப்பாண்டியத் துரை முதலான அன்பர்களுக்கு முன்னரே தெரிவித்து அழைத்து அவரவர் களுக்குவேண்டிய அநுக்கிரகங்களைச் செய்தருளி, ஆனிமீ குருவாரம் பூச நட்சத்திரத்தன்று, சிவபரஞ்சுடரிலிரண் டறக்கலந்து ஜோதிஸ்ரூபலிங்கராய் திருக்கோவில்கொண் டெழுந்தருளினர்.

10. அப்பால் மேற்கண்ட வெள்ளைப்பாண்டியத் துரை முதலிய அன்பர்களாற் சமாதி ஆலயத்திருப்பணி கைங்கரிய கும்பாபிடேக முதலிய சிறப்புக்களையியற்றி நித்திய நைவேத்திய பூஜாகைங்கரியங்கள் நடைபெற்று மகோற்சவ முதலிய திருவிளையாடல்கள் நடைபெற்று வரும் நாட்களின் பின்னர் யெனது பிதாமகரவர்களாகிய, சுந்தரலிங்கம் பிள்ளையென்ற திருவாளர் ஸ்ரீ அப்பரானந்தப் பெருமான் பரிபூரண கிருபாபாத்திரருமான, ஸ்ரீமான் சங்கரலிங்கம் பிள்ளையென்ற சீமான், பேட்டையூர் சீர்குடி வேளாளர், அருணாசலம் பிள்ளையென்ற அண்ணல், முத

லான முக்கிய அன்பர்களாலும் மற்றுமுள்ள மெய்யன்பர் களாலும் அன்று தொடங்கி இற்றைஞான்றுவரை கர்ப்ப கிரகம் அர்த்தமண்டப முதலிய திருப்பணிகளும் செய்தும் புதுப்பித்தும் வேலாயுதமிருந்த கர்ப்பகிரகத்தில் ஸ்ரீ சுப் பிரமணியக் கடவுளை வள்ளிநாயகி தெய்வயானைநாயகி சமேதராகப் பிரதிஷ்டை செய்வித்தும் அநேக உத்சவா தி களும் நித்திய பூஜாபடித்தரங்களும் ஏற்படுத்தப்பெற்று ஸ்ரீ அப்பரானந்தப் பெருந்தகையார் கிருபாவீக்ஷண்யத் தால் சர்வகைங்கரியங்களும் பூரணமாக நடைபெற்று வரு கின்றன.

11. அன்றுமுதலின்றுவரை ஸ்ரீ அப்பரானந்தப் பெருமானின் பெண் சந்ததியின் வகையறுக்களே மேற் கண்ட ஆலய பூஜை நைவேத்திய சகல கைங்கரியங்களையும் பக்தி சிரத்தையுடன் நடத்தி வருகின்றனர். இஃதன்றியும் ஸ்ரீ அப்பரானந்தப் பெருந்தகையாரை பக்தகோடிகளுக் கறிகுறியாக விக்ரக ரூபமாகத் திருவுருவப் பிரதிஷ்டை செய்யப் பெற்று யாவருங் கொண்டாட உற்சவாதிகள் நிகழ்ந்து வருகின்றன.

12. மேலேகண்டவெனது பிதாமகரவர்களாகிய திரு வாளர் சுந்தரலிங்கம் பிள்ளையவர்களின் அன்பின் வலையிற் கட்டுண்டவராகிய ஸ்ரீ அப்பரானந்தப் பெருந்தகையார் ஓர்நாள் அகண்ட பரிபூரண ஜோதிப்பிரகாசராக விளங்கிக் காட்சிதந்தருளியும், இன்னும் பல அனுக்கிரகங்கள் புரிந் தும் திருவருட் பிரசாதமருளியுள்ளார்.

13. அவ்வண்ணம் மேற்கண்ட பேட்டையூர் சீர்குடி வேளாளராகிய திருவாளர் அருணாசலம் பிள்ளையவர்களுக் கும், சொர்ப்பனத்தினும், ஜாக்கிரத்தினும், அநேக

அநுக்கிரகங்கள் புரிந்து காட்சிதந்தருளியதினின்றும் மேற்படியாரும் திருநெல்வேலி குளத்துத் தெருவில் வசிக்கும் அவர்களின் தமையனார் குமாரராகிய திருவாளர் அணைந்தபெருமாள் பூசாரியென்பவரும் சேர்ந்து மேற்கண்ட ஸ்ரீ அப்பரானந்தப் பெருந்தகையாருக்கு குருபூஜா மகோற்சவம் (50) ஐம்பது வரையிலும் சிறப்பாக நடத்தியுள்ளார்.

14. அப்பால் மேற்கண்ட அணைந்தபெருமாள் பூசாரியவர்களின் குமாரர் திருவாளர் அற்புதம் பிள்ளையவர்களும் மேற்கண்ட பேட்டையூர் அருணாசலம் பிள்ளையவர்களின் குமாரரின் குமாரராகிய திருவாளர் பழனியாண்டியா பிள்ளையவர்களுமாகிய இருவரும் சேர்ந்து நாளது வரையிலும் (19) பத்தோன்பது குருபூஜா மகோற்சவம் அதிவிமரிசையோடும் நடத்தியுள்ளார். அங்ஙனமெஞ்ஞான்றும் மேற்கண்ட குருபூஜா வைபவத்தை மேற்கண்ட இருவர்களும் அப்பாலவர்களின் மரபின் வழியினருமாக வளர் பிறைபோன்றும் அதிவிமரிசையோடு நடத்திவரும்படியாக எல்லாம் வல்ல கருணையங்கடல்போன்று விளங்குந் திருவருட்பிரகாச வள்ளலாராகிய ஸ்ரீ அப்பரானந்தப் பெருந்தகையார் திருவருள் புரிவாராக—ஓம்தத்ஸத்.

இங்ஙனம்,

அடியார்க்கடியன்

சு. கி. இராமலிங்கம் பிள்ளை,

நெட்டூர்.

ஓம்:
தத்ஸத்.

ஸ்ரீ அப்பாநந்த ஞானதேசிக சுவாமிகள் திருவிளையாடற் பேறு.

நூல்.

1-வது நிலமண்டில வாசிரியப்பா.

பூமக ளோங்கிப் பொலிந்துமெய்ஞ் ஞானப்
பாமகள் வளர்ந்தும் பண்பொடு மிளிருந்
திருமந் திரமெனுந் தெய்வ நகர்ப்பாங்
கொருமந்தி கணநிறை யுயர்வனங் கெழுமிய
பட்டின மருதூ ரெனுஞ்செழும் பதியின்
மட்டிலாப் புகழ்விளை மாண்புறுஞ் சீர்குடி
வுயர்வே ளாள ருஞற்றிய தவத்தாற்
செயிரறு தங்குலஞ் சீர்பெற வோங்குஞ்
சிவருத் திரகோத் திரமெனுஞ் செழீஇய
வுவமையின் மரபி னுதித்திடுஞ் செல்வன் ரு
கல்விக் களஞ்சியன் காருணி யக்கடல்
பல்குமொண் ஞான பாநுவாய் மிளிர்ந்து
மலமறுந் தூய மகரா ஜேந்த்ரப்
புலவனுஞ் சுகுணன் புநித போதகன்
அவன்மனைக் கிழத்தி யழுதமென் மொழியாள்
அவிர்மதி வதனத் தருந்ததி யன்னாள்
மங்கல நிறைந்தெளிர் மாட்சிமை யுடையாள்
புங்கவர்க் கோதனம் போற்றி யருத்தும்
அன்புரு வாகியும் அருளுரு வாகியும்
இன்புரு வாகியு மியங்குறு மனையாள் கo

நற்பெயர் மதுர வல்லிநா யகியாம்
கற்புடை யவளொடுங் கைகொல்லிக் கனியென
இல்லறம் வழுவா தியற்றிய ஞான்று
நல்லற மோங்க நல்கிய மக்கள்
ஆதிமூ லமெனும் அருந்தவ மேடு
சேதனன் அருணை சலனெனுஞ் சீலன்
சாந்தமார் கந்த சாமியென் புலவோன்
ஏந்தெழி னல்லகு மாரெனு மேந்தனூ
லாய்ந்த சங்கிலி வீரனல் லறிஞரேனுக்
கேய்ந்தமுத் தம்மை யெனுமொரு பெண்மணி கரு
ஐயம் பெருமாள் புலவர்கோ ணதியா
வையம் வழுத்து மெழுவரா மவரில்
பெண்ணமு தென்னப் பிறங்குமுத் தம்மையை
விண்ணவர் முனிவர் விழுமிய சித்தர்முக்
கண்ணவ ரோங்குங் கயிலையா யிலங்கி
யெண்ணிலர் குழீஇ யிறைஞ்சுகுற் றூலப்
பொற்பதி தழூஉம் போற்றுநற் குணபால்
சிற்பதி யெனுமுயர் சீரிய தவத்தோர்
மல்குறு நான்மறை வழங்குபல் வேள்வி
யல்கலி னுலெண் ணைறந்திகழ் நிட்டா உ0
புரியெனுந் திவ்ய பொன்னக ரதனி
லுரிய சான்றோ னுத்தமன் சுகுணன்
கல்விக் கரசன் கரணங் கடந்த
நல்ல வித்தகன் நற்பெருந் தகையோன்
வேலு மயில்பண் டிதனெனும் விமலன்
சீலமுஞ் சிறப்புந் திகழ்ந்திடு மிவற்கே
திருமண மியற்றி சீர்குடி யோங்க
மருமண மலர்போன் மகிழ்ந்துவாழ் ஞான்று
நங்குல தெய்வ நாமம் புனைந்து
தங்குல மாபோர் தழைப்ப மகவா உரு

ஐயம் பெருமாள் புலவனு மமலன்
துய்ய வருளே துலங்குனல் லுருவாய்
உலக முய்ய வுதித்தன னம்மா;
அலகிலா யிவன்றன் னுடலைப் புகழ்வாம்
தோன்றிய ஞான்றே சுகர்போன் றொளிர்ந்து
பூன்ற முத்தனைப் பொலிந்தனன் புவியின்
கலையெலா மொருங்கு கருதா தியங்க
நிலையெலாங் கடந்து நிற்குண வடிவாம்
பிர்மமே தானைப்ப் பிறங்கி யுளத்து
கர்மமொன் றில்லாக் கருணைபூத் திலங்கு ஈ0
பெருமைசா லிவன்றன் பெட்புறுங் கிளையின்
அருமையாஞ் சிறுரோ டணிமறு கதனில்
திருவிளை யாடல் சீர்பல வியற்றி
வருஞான் றதனின் வாய்ந்தமுற் றவத்தாற்
காழியம் பதியிற் கவுணியற் கன்றே
ராழியன் சோதரி யருளமு தருத்தி
அன்பெனுஞ் சாகரத் தமிழ்த்தி வல்வினைத்
துன்பெலாங் களைந்து தூயமெஞ் ஞான
சம்பந் தாவென சாற்றிய பான்மைபோன்
றம்பரத் தெழுஉம் அலைவள ரகழியும் ஈரு
மாடமா ளிகையு மலிந்தபூந் தடமும்
ஆடகச் சிகர மார்ந்தபொற் றளியுமார்
தொல்புக ழோங்குஞ் சுரண்டையம் பதியிற்
கொல்புலி யிதழுடைக் கொண்டகோ வணணுய்ப்
ஐம்புலன் கரண மடித்த வாற்றலான்
சம்புவை யுளமாந் தளிகொளுஞ் சதுரன்
அன்புரு வாமே னவனிபூத் தார்ந்த
மன்பதைக் கிரங்கி மனிதமெய் தாங்கிக்
குழந்தை முத்தா னந்தனங் கோமான்
பழம்பொரு ளிப்பெயர் படைத்துல வியஞான் சம0

றாழ்வலி யின்படி வுலப்பிலா னந்த
யேழ்நிலை யியங்க வெழுந்தரு ளினனே.
மாண்புறு பட்டின மருதூர் மறுகிற்
காண்புற யெவருங் காதல்கொண் டோங்க
குழுவிகள் குழீஇக் குலவியே சூழ்தரப்
பழவினை பறித்த பண்பறு மிவனென
அன்பின் வளர்ந்த ஐயம் பெருமாள்
இன்பனைக் கண்மல ரிணையி ரேக்கலும்
மாணவன் மெய்யுண் மலர்ந்தன வெண்குணம்
நாணமும் பயமும் நாடா தன்பெழ சரு
வென்புநெக் குருக யிணைவிழி முகிழ்ன்
அன்புநீர் பொழிய அவசமுற் றேங்கி
மெய்ம்மயிர் சிலிர்ப்ப விளங்கிதழ் துடிப்ப
பொய்யிரு ளகலப் பொலிந்தவான் புநிதன்
தேசிகன் மென்மலர் சேவடி யிறைஞ்சி
ஆசிலா வணக்க மனைத்தும் புரிந்து
சன்னிதி நின்று சரணென வடைந்து
மன்னிய மறையால் வாழ்த்திட மகிழ்ந்து
சேயே வருகென சேர்த்தினன் கழற்கண்
மாயா மலமும் மறைந்திட வக்கணம் நும
என்பிழைக் கிரங்கி யெளியனை யாண்ட
நின்பெருங் கருணை நேர்பெற நீறீஇ
ஆண்டருண் மணியே வமல வென்றன்பான்
வேண்டவைங் கரனின் மேதகு பூந்தளி
ஆங்கே யமர்த்தி யருளினன் மோனப்
பாங்கேய்ந் திடவே பரிந்துளங் கொள்ள
ஆங்கமர்ந் தருளுங் குரவோ னவனின்
பாங்கர் சாயைபோற் பண்பொடும் பணிகள்
சதுர்வகை புரிந்து சார்ந்தவன் ஞான்று
மதுரையம் பதிக்கு மகிழ்ந்தெழுந் தருள நுநு

ஆங்கணு மாரியன் அடிபணி யாற்றி
நீங்கொணு வன்பா னேர்பெற நிற்ப
பழவடி யார்தொழும் பட்டின மருதூர்
மழலைவாய் சேயோன் மதுரைமா நகர்வாய்
மன்னிய தோராது மலங்கிமா ழாந்த
அன்னைதந் தையரும் அருந்தவ மியற்றிட
ஆதிய ணுதியா யமர்ந்தவோங் கார
ஜோதியா யிலங்கி சுகாரம்ப வெளியில்
அஞ்சக் கரமா யமர்ந்தவா ரையன்
வஞ்சர்க் கணுகா வகார காரணன்
அஞ்சலென் றுளத்தே யணுவிற் கணுவாய்
தஞ்சமென் றடைந்தார் தமைத்தழை விக்குந்
தயாபர ணகிய தத்துவா தீதன்
மயாமல மறுக்கும் மங்கள குணகர்ன்
சாத்தா வெனும்பெயர் தரித்துதங் குலத்தை
காத்தாட் கொண்ட கடவுள் தோன்றி
அந்நாள் வியாச னருஞ்சுதன் சுகரைப்
பன்னுள் தேடிப் பரிந்துழன் றுருகத்
தராதல மயின்றுமோர் தாம்பிற் கட்டுண்ட
புராதன னருளிய பான்மை போன்றும்
ஈன்றோர் கனவி லினிதெழுந் தருளி
ஆன்றோ ணகிய வருள்குரு பரன்பால்
கூடலம் பதியிற் கோதற மகிழ்ந்துநல்
ஆட லதுபுரிந் தமர்ந்துளா னெனவே.

2-வது நிலமண்டில ஆசிரியப்பா.

கனவிற் றோன்றிய கருத்தறிந் தெழுந்தெரி
யனலின் மெழுகா யகமகிழ்ந் துளமாங்
கண்மலர் விரித்துங் காண்பரி தாய
யெண்குண னெம்மிறை யெளியமை யாண்டருள்

குலதே வதையெங் கோன்றிரு வருளெனப்
பலவாத் துதித்து பணிந்திறைஞ் சினனு
யானந்த பாஸ்ப மளவிலா தூற்ற
ஊனந் தவிர்த்துமிக் குவகைகொண் டனனு
யேனக் குருளைக் கினியதா யாகி
யீனப் பிறவி யிரிந்திட வணித்தா ரு
யமுதளி சோம சுந்தர னரசா
ளுமிழ்கடு வுரக முடித்தவான் கூடல்
நண்ணி சோம சுந்தர நாதனை
புண்ணியோர் போற்றும் புவனகா ரணியா
யெண்ணியா ரெண்ணியாங் கெய்துற வளிக்குங்
கண்ணிய மோங்குங் கௌரிகங் காளிநி
சன்னிதி சார்ந்து தாழ்ந்துணைந் துருகி
மன்னிய வீஷணை மாய்த்துநின் னருட்கு
தன்னிய னுக்குக தயாநிதி யெனவும்
பன்னிப் பழவினை பற்றறப் பறித்தே க०
வுன்னிப சற்குரு வுறைவிடம் நோக்கி
கன்னிய மிகுமலர் காரமொடுங் கனிவாய்
சென்றுங் கடைந்து தேசிக னுகிய
குன்றுப் பெருந்தகை குழந்தை முத்தா
னந்தனுஞ் சற்குரு நலமிகு சந்நிதி
வந்துவாய் வாழ்த்த மலர்க்கரங் கூம்ப
சிந்தைனைந் துருக சிரம்பணி யியற்ற
வந்தனை புரிந்து மகிழ்ந்துநின் றன்பால்
தன்குறை யனைத்துஞ் சாற்றி வியந்து
வன்குறை முடித்த மாசிலா மகவினை கரு
யணைந்து மரீஇ யளவிலா னந்தம்
மிணைந்தன னுகி யிருந்த காலையில்
உலகெலாங் கடந்த வுத்தம சற்குரு
நலமெலாம் நிறைந்தஞான பூ ரணனும்

ஐயம் பெருமா ளெனுமரு மகவை
பையவே யணைத்து பரிந்துமென் கரத்தால்
வெய்ய வினைகள் வீயதண் கருணையால்
துய்ய மலர்க்கண் துலங்கிட நோக்கி
ஆணவ மொழிந்து அன்புரு வாய
மாணவ நினது மாண்புறுந் தாதை
யழைப்ப விவ்வுளி யடைந்தன னவ்ற்பாற் ஒ0
பிழைப்பிலா தூர்போய்ப் பேர்பெற வாழுக
ஞானியா ரெனவெஞ் ஞான்றுநின் பெயரை
வா (1) னில மெங்கணும் வழங்குக வெனவே
அருள்வாய் மலர்ந்துமிக் காசீர் வதிப்ப
மருள்வாய் பதிந்து மலங்கிமா ழாந்து
ஐய னேயென் னருட்பெருங் கடலே
துய்ய னேயென் றுரிசெலாந் துடைத்த
மெய்ய னேயிம் மேதினி மயலிற்
பொய்ய னேனுன் பொருந்தவும் படுமோ உரு
செய்ய னெனின் சீரடிப் பணியே
செய்ய வேயென் சிந்தனை செல்லுமால்
மைய லேயெழும் மண்ணினின் வாழ்வினு
ளுய்ய லாவதோ வுகந்தரு ளமலா
வெனப்பணிந் திறைஞ்சி யேங்கி நிற்பவே
மனப்புகுந் தறமதை மகிழ்வுட னடாத்தி
ஓரின்ப மொவ்வா வுலப்பிலா னந்த
பேரின்ப மெய்தி பிறங்குவாய் பெட்போ
டென்றருள் புரிந்துமிக் கிணையிலா சிறல்கக்
கன்றுதன் முயினைக் காணு தலமந்து நஂ0
துன்றிய வன்பால் துடித்துவீழ்ந் தலறிக்
கன்றிய பான்மைபோற் கலங்கி சுதனுஞ்

---

(1) வான் = விண்ணுலகு + நிலம் = மண்ணுலகு.

சற்குரு வாணை தவறு துள்கும்
பொற்குணந் தழீஇய புநிதமெய்த் தொண்டன்
ஈன்ற தந்தையோ டேகினன் பணிந்தே
வான்றிகழ் பட்டின மருதூர் த்லத்தே.
இவ்செல விடுத்தபின் னினியநற் கோமான்
தவர்புகழ்ந் திறைஞ்சுந் தத்துவா தீத
நிருவிகற் பெய்தி நிராலம்ப மேவ
அருந்தவ மாற்றி யவ்வுளி நிலவ நடு
ஞானமே யுருவாய் நண்ணிய மகவு
ஞானியா ரெனவும் ஞாலம் வழுத்த
வில்லறம் வழுவா தின்புட னியற்ற
னல்லற மென்ன நாடி யுவந்து
பல்லறம் பயின்று பண்புட னேங்க
மல்லலம் புவன மங்கையி னனன
மெனப்புகழ் களந்தை யெழின்மிகு நகரின்
மனுமுறை தவறுது வாழுமுத் தமனும்
தற்கிளை தழீஇய தாய்வழி யதனின்
முற்கிளை யென்ன முயங்குமவ் வயினிற் சம
கற்பிற் சிறந்து கலியெலா முணர்ந்து
பொற்பிற் சிறந்து புநிதமெஞ் ஞான
வின்பெலாந் தெருண்டவோ ரிருளகற் றியெனும்
அன்பெலாம் நிறைந்த அமுதசஞ் சீவிநி
யென்னுமோர் நாம மியைந்தபெண் கொடியை
மன்னுசீர் வதுவை மங்கள மிலங்க
வுன்னி முடிப்பா னுளங்கரு தினனுப்
பன்னி நகரெலாம் பல்லிய முழங்க
மாளிகை மறுகெலாம் மணக்கொடி நாட்டிவின் சகு
ஆரூகை யுடையோ ணணிநகர் நாண
வெங்கணு மெழில்பெற யியற்றினன் மணமே.
அங்கண் மணவரை யமர்ந்தநன் மணமகன்

மங்கல வணிகலன் மகிழ்ந்தணி யாளுய்
சங்கை தமர்கொளத் தான்மறைந் தனனென
இங்ஙனம் நிகழு (2) நா மேய்ந்த சோதரி
பங்கமில் லன்பாற் பரிந்துனந் துருகலும்
தனதுரு விளங்கத் தழைத்தன னம்மா!
இனையதோ ராட லிழைத்தன னிதனைத்
தமியனேன் கணித்து சாற்றவுந் தரமோ
உமிழ்திரைக் கடல்சூ ழுலகெலா முவக்க நும
மணமக முடித்த மாதவன் றனக்கு
குணமெலா மிகுந்த கொடியிடை தன்னெதி
ரில்லறம் நடாத்து மியல்பினை யுள்கா
தல்லலென் றுன்னி யடைந்தனன் சோதரி
வாழும்வான் றழீஇ வளங்கெழு மாடமுஞ்
சூழுமூ தெயிலும் சுரவெழு மகழியும்
கற்பகா டவிபோற் கவின்மிகும் பொழிலும்
சிற்பநூன் முறைகாண் சினகர மும்பொலி
நெடியமா நகர்வாய் நிலவியன் னவளின்
கடிகொண் மனையிற் களித்தினி திருப்ப நுரு
தந்தைதாய் தமரொடு தாம்வருந் தினராய்
முந்தை வினையான் முடிந்தநன் மணமென்
றெண்ணித்தம் மருகியோ டெழினெடு நகர்வாய்
நண்ணிநீண் மனைபுக ஞானியாம் புதல்வன்
பெண்ணினை விழையாப் பெட்பினை மரீஇ
மண்ணினை யொருஉ மாட்சிமை யுடையான்
நாதமுங் கடந்தோர் நாடரும் பூமிக்
காதவ னுகி யவிர்ந்தமா தவத்தான்
வானமு தாகி வயங்கு பூரணன்
தானவ னுகி தபோநிதி யாகி சுo

---

(2) நாம்=பயம்.

ஞாதுரு ஞான ஞேபமுங் கடந்துமண்
ணேதருந் தற்பரத் தொளிர்ந்தன ஞகி
நிருவிகற் பெய்தி நீண்மறு கிடையே
யொருவிகற் பின்றி யுவாமதி போன்று
வதிந்தன னம்மவோ வரையெனச் சலியா
விதிவலி யினலுய் வெயின்மழை பனியா
தியவணு காது திகழ்ந்தனன் செப்பு
வயதிரண் டரையாய் வயங்கு நிட்டாபரன்
ஆகமெங் கணுவா ஞதியர் கறையான் சுரு
றேகமெய் தினராய்ச் சேர்ந்துமண் போர்ப்பப்
புற்றினுள் வயங்கும் புநிதன்சோ தரியும்
பெற்றிகொண் மனவியும் பெட்பொடுந் துகிலால்
ஆதவன் கதிர்வா னம்புதோ யாது
மாதவன் மீது மகிழ்மரீ இ விரிப்பார் சுள

3-வது நிலமண்டில வாசிரியப்பா.

இவ்வணம் பணிசெய் திருவரு மலங்கி
மைவண்ண் மருகன் மந்திரசொ ரூபன்
கைமலைக் களிற்றின் கழல்பணிந் திறைஞ்சி
பொய்மலந் தோடப் புரிந்தனர் தவமே.
ஒருமண் டலந்தவ முஞற்றிய பின்னர்
ஒருமண் டலத்து மொப்புயர் வறியாக்
கருணையே யுருவாய்க் கனிந்தவன் போடு
மருணைய வுளமே மகிழ்ந்தருள் சுரந்து
இபானன னெழுந்தே யிமயமார் மென்பிடி
கபாலி கௌரி காளகண் டணியா ரு

யுலகினைப் புரக்கு முத்தம வனையா
யிலகிய முப்பி டாரியீஸ் வரியை
யண்ணிஞா னியர்பா லடைந்துநீ யெழச்செய்
தொண்மனை யறமே யுவந்துகொண் டிடுவா
யெனமொழிந் திடுவா யென்றருள் புரிந்த
கனமிகுந் தந்திக் கைமலைக் கருணை
ஞானக் களிற்றி னுஞ்ஞை நழுவாது
மோனப் பரையும் மொழிந்தன ளன்றே.
இமையா நாட்டத் தின்புரு வாகினேன்
யுமையாண் மொழியி (1) லுபேட்சையுற் றதனு க०
லெழிலி யொலியோ டெண்டிசை புரளப்
பொழியக் கரையைப் பொருதலைப் புனல்பாய்
சித்திரா நதியில் திருக்கரத் தெடுத்தே
அத்தி மாமுக னமிழ்த்தினன் மகவினை;
அரியவிச் சேதியை யம்மை யீஸ்பரி
அருமைச்சோ தரிபா லருளினள் கனவில்
அக்கணத் தெழுந்தவ ளன்பொடுஞ் செலுமுன்
தெக்கண பாகந் திகழுமா நதிநின்
றெழுந்துகோக் குழுக்க ளியைந்தமர் தலத்து
செழுஞ்சுடர் ஞானச் செல்வ னணுகிக் கரு
கற்றாண் மீது கனிவோ டமர்ந்தனன்;
முற்றா ணில்லா மூவா முனிவன்
இங்கன மிருப்ப வின்புறு சோதரி
துங்கனல் லாடை துரிதமாய்க் கொடுபோய்
தந்து பலரொடுந் தாழ்ந்திறைஞ் சினளால்;
நந்துவாழ் கரத்து நாரணன் முதலா
விந்திரன் முனிவோ ரிமையவர் போற்ற
அந்தரத் தணங்கா ரலர்மழை தூற்றினர்;
முனிவனைச் சோதரி வாத்திய முழங்க
வினிதிற்றன் னில்லி லிட்டன ளழைத்தே; உ०

(1) உபேட்சை = அலட்சியம்

அப்பெருந் தகையோற் கமுதமோ டளவில்
செப்பருஞ் சிறப்பு செய்தனர் பல்லோர்;
இவ்விளை யாட லெழில்பெற வறிந்து
செவ்விய பட்டின மருதூர் திகழ்ந்த
வன்னையர் மகிழ்ந்திருப் பயில்கதிர் வேலோ
டென்னய முந்தரு மெழின்மன்னிட் டாபுரி
மன்னிதன் மகவை மாண்புற வணைத்து
என்னுயிர்க் குயிரா யெழுந்தகண் மணியே
தன்னிய நினதோர் தவப்பே றதனால்
முன்னையோர் துறக்கம் முயங்கினர் மகனே உரு
ஐம்புலத் தவர்க்கு மருட்பணி யாற்றி
யும்பர்கள் போற்று முயர்மன வாழ்க்கை
வழுவா தியற்றி வாழுதி யெனவும்,
தொழுவார் தமக்குத் தொழுறும் பிறவி
மாய்த்து முத்தியை மாண்புற வளித்து
தெவ்வரை வீய்த்துத் திகழுஞ் சத்திவேல்
செவ்வையி னீந்திதை ஸ்தாபனஞ் செய்துன்
அந்தமார் கிழத்தி வுத்தமி யாளொடு
வந்தனை வழிபா டியற்றிமாண் புற்றுமே
லந்தமில் பரத்தை யடைகவென் றருளி நஉ
அடைந்தன டனதி னணிநகர் நோக்கின்
மடந்தை தன்னெடு மனையறங் கொண்டு
அறக்கூ ழேற்றுநல் லன்னையார் தந்த
சிறக்குமோர் கதிர்வேல் திகழப்பூ சனைசெய்
தருந்தவர் பிணியோ ராதுலர்க் களித்தங்
கிருந்தனான் றெழிலா ரிருபெண் மக்களை
மகிழ்ந்து பயின்று மதுர வல்லி
எனைக்காத் தம்மை யெனப்பெயர் புனைந்து
நனிமகிழ் மேவி நகுமதி போன்று
நேமமுற் றெளிர நேர்மிகுங் களக்கா நஉ

டென்னுமா நகர்வா யெழிலுறுஞ் சிரேஷ்ட
மன்னுசீர் மதுர வல்லிநா யகியை
மணமுடித் தனரால் மாதலம் புகழ,
குணமிகுந் தோங்குதன் கோதையாங் கிழத்தி
இல்லறம் நீத்து சொல்லருந் துறவாம்
நல்லறங் கொள்ள நாடின னுளத்தே;
அவ்வணங் கூஉ இயாஞ்ஞரு புரிந்து
கொவ்வைவாய் கனிட்டக் குமரியை சோதரிப்
புதல்வனுக் கீய்ந்து புனித மங்கள
வதுவை யாற்றி வாழ்கெனப் பணித்துமே சம

லகாந் தத்தே யினிதிருந் தருளி
யோகாந் தத்தே யொளிர்ந்தன னுகி
வேதமு மறியா விபுவாஞ் சுகோதய
போதமுங் கடந்த புநிதமஞ் ஞான
பானுவா யிலங்கி பரந்தபூ ரணனுய்
வானுயர் மாடம் மலிந்தநிட் டாபுரித்
தலந்தனி லார்ந்து தவம்புரி காலையில்
நலந்திகழ் சிந்மய ஞான தேசிகன்
பரிபூ ரணமாம் பக்குவ மணித்தாம்
அரிய கால மறிந்தவ னுகி சரு
மன்னுர் கோவில் மாநகர்க் கணுகிப்
பொன்னுர் மேனி பொலிவொடு பிறங்குந்
தன்னு சான்பூந் தாமரைத் தாளிணை
மின்னுர் முடிமேபான் முடிமிசை மிகவேற்
றஞ்சலிக் கரமோ டம்புகுங் கண்ணு
யெஞ்சலி லற்போ டிரந்திரந் தேதங்கி
தஞ்சமென் றுருகித் தாழ்ந்தனன் பல்கால்;
கஞ்சமேர் கரங்கொடு களிமிகத் தழீஇ
அஞ்சலென் றருளி யாண்ட தேசிகன்
வஞ்சமின் மாணவன் வகையறிந் தன்பால் நும

அப்பரா னந்தத் தார்ந்தனை யதனுல்
அப்பரா னந்தனென் றரும்பெயர் புனைந்து
பகருமொன் பானூற்று பத்தாம் வருடம்
புகரிலா சித்திரைப் பதினெண் போதில்
குருநாள் விசாகம் குவலய மோங்கப்
பெருமைசால் விதேக பெட்புறு முத்தி
பூரண நிலையிற் பொருந்தின னம்மா !
ஆரணம் பேணு மரும்பணி யாற்றி
ஓதருங் குரவோ ரெண்கழ லார்ந்த
பாதரட் சையினைப் பரிவொடுங் கொணர்ந்துநல் நிரு
லகிலொடு சந்து மடர்ந்துசூழ் காவும்
முகிலொடு முயங்கு முதுநெடு நகர்வாழ்
கந்தவேள் பாங்கர் கனிவோ டமைத்து
பந்தமேழ் பறிப்ப பரிவொடும் பூசனை
புரிந்தன னப்ப ரானந்தப் புங்கவன்;
அருந்தவ மோங்கி யமலவீ டடைவான்
அவ்வணம் நடத்தி யருணிறைந் தார்வப்
பௌவம் பறித்த பழவடி யார்நிறை
ஒக்கநின் றுன்பொற் றைக்கெழுந் தொருசார்
மிக்கொளிர் நாக சுனைவல மேவி சூ0
தக்கநிர் விகற்ப சமாதி சார்ந்து
மிக்கபன் னுரு மேன்மையி னுற்றி
முக்கணன் மகிழ மோன வாழ்வினை
சிக்கெனப் பிடித்து சிறந்தபூ ரணமோ
டொக்க நிரீஇ யொளிர்பரஞ் சுடரா
யிக்கலி யுகத்தே யியங்கின னம்மா !
பூத்தலைக் கொண்ட பொறிபணு முடியனும்
மாத்தலைக் கொண்ட மவுனக் கரனும்
இப்பெருந் தவத்தி னிலக்கணம் பயின்று
செப்பவொண் ணுத சிற்குண தீத சூரு

சிதம்பரத் திலங்கும் சிதானந்த வொளியின்
பதம்பெற வுருகாப் பாவியேன் புலையேன்
கலைபயின் றுழுகாக் கடையனேன் கணித்து
நிலைபயின் றருளான் நிகழ்த்தவும் படுமோ;
இப்பெருந் தகையோ னிலங்குமஞ் ஞான்றி
லொப்பருஞ் செல்வ மோங்குநல் வடகரைச்
சீர்வளர் சகார்க்கண் செங்கோ லோச்சிப்
பார்வளர் வெள்ளைச் சாமிபாண் டியனு
மேர்வள ரலங்க லியங்குமெய் யேந்தல்
பூர்விகப் புண்ணியம் பொலிந்தன னுகி எ०
அவ்வுளி யியங்கும் அப்பரா னந்தச்
செவ்விய தவங்கொள் தேசிக மூர்த்தியின்
சன்னிதி கண்டனன் தவறெலாம் விண்டனன்
மன்னிய வானந்த வாரிதி மூழ்கின்ன்
றுன்னிய துயரெலாந் துடைத்துசு கோதய
கன்னிய னுகிபூங் கழல்பணிந் திறைஞ்சி
தன்னகர் வருகெனத் தாழ்ந்துதன் சிவிகையை
மன்னிய திருமுன் மகிழ்ந்தளித் தனனே;
சராசரந் தானுப் சமைந்தபூ ரணனும்
பராமுக மாகிப் பகர்ந்தரு ளிப்பின் எரு
நாளே முதனின் னண்ணுவ னின்னகர்
வாளேய் கரத்து வழுதியே கெனவே
நற்றவன் விடைதர நாடியுண் மகிழ்ந்து
கொற்றவன் தன்னகர் குறுகிவாழ் ஞான்று. எஎ

4-வது நிலமண்டில வாசிரியப்பா.

அருந்தவ மியற்று மப்பரா னந்தர்
பொருந்திய பொற்றையைப் புறக்கணித் தெழுந்து

தராதல மோங்குந் தவத்தின் மிகுத்து
நிராசையொ டொளிரும் நிமலர் குழீஇப
பெழினெடு நகர்வா யேய்ந்துமெய் யருளால்
செழீஇப வுலகெலாஞ் சீர்பெற மகிழ்வித்
திவ்வண னிகழ்ஞான் றெழிலார் வடகரை
தெவ்வர்தா ழிறைக்கு தெரித்தமாற் றமதை
யோர்ந்துநற் றவத்தோ னுவந்தன் னகர்பால்
சார்ந்துறச் செழியன் ரூனெதிர் கொள்வா நு
ஞல்வகைச் சேனை கண்ணிசூழ்ந் துலவ
மால்களிந் தொளிரு மாதவன் சந்நி தி
சென்றுபூங் கழலிற் சீர்பெற விறைஞ்சி
துன்றுபொற் சிகரத் தூபமா ளிகைக்கண்
ணழைத்துவந் தரியா சனத்துற வமர்த்தி
சழுக்கமில் லன்பால் சதுர்பணி யாற்றி
யிருக்குமவ் வேல்வை யிளசையம் பதிவாழ்
பெருக்குநல் லுணர்வால் பெட்புறுங் கலிவலான்
கடிகைமுத் துக்கவி நாவலன் கடிதாய்
கடிமனை புகுந்து கண்டனன் குரிசிலை, ஏ
யன்பொடும் புலவனை யழைத்தெழி லாசனத்
தின்பொடு மிருத்தி யீந்தனன் பரிசு;
பரிசினை நாவலன் பரிந்துபெற் றரசே
யரியனை யழைந்தவர் யாரென வினவலு
மாருயி ரெவைக்கு மமுதசஞ் சீவியாஞ்
சீருயர் தவத்துச் செல்வனெங் கோமா
னெனப்பல சீரிறை யெடுத்துசொற் றலுமே,
மனமழுங் கினனுய் வண்டமிழ்ப் புலவோன்
மன்னவ நின்பெரு மாண்புறுஞ் சீர்த்திக்
கின்னவன் றாமோ விழிகுல மெய்திய ஙரு

யிவனரி யாசன மேய்ந்துற லழகோ
வுவமையி லரசே யோர்ந்துண ரெனப்பல
புன்மொழி புகல புரவல னுபேட்சையாய்
நன்குறு தமிழ்வலாய் நாடருந் தவத்தோ
ரேவரே யாயினு மெக்குலத் துதிப்பினுந்
தாவ நஞ் சீர்த்தி தத்துவா தீத
நிராலம்ப மேவி நிலவுமப் புநிதர்
பராபர ஞான பண்டித ராகையா
லிவர்பா லுலகத் திழுக்குறு தெனமொழிந்
தவற்செல விடுத்து அருந்தவ முனிவன்
பணிபல வியற்றி பண்புட னெடுநக
ரணிபெறக் கொடுவந் தையனை விடுத்தனன்.
இங்கன னிகழ்ஞான் றெட்டையம் பதிவாழ்
பங்கமிற் கடிகைப் பாவல ரனனத்
தங்கியிற் கொடிதா யவிர்ந்தன புற்றே.
துங்கபல் லவிழ்தஞ் சுகமுறத் தீட்டியும்
பிணிவளர் பிறைபோல் பிறங்கிய தஃதோர்ந்
தணிமழ விடையா ளமருபூம் படியாளு
சங்கரன் கோவில் சந்நிதி சார்ந்து
பொங்கம துடனெரு மண்டலம் பொருந்தி
நல்வச ரநியை நட்புட னுற்றியுங்
தொல்வினை யாற்பிணி தொடர்ந்துமீக் கொளலுந்
தற்கொலை புரிவா னிற்நவன் னிசியில்
சிற்பரை யுமையாள் திகழ்ந்தவன் கனவில்
தண்டமிழ்ப் புலவோ யண்டர்தாழ்ந் திறைஞ்ச
தெண்டிரைக் கடலார் செந்திலம் பதிவாழ்
கந்தவேள் சந்நிதி கண்டவன் கருணையால்
நந்த நின்பிணி நாடுக வென்றருள்
செய்தவண் மறைய சிறந்தநற் புலவோ
னெய்திய வன்பா லிறைஞ்சிப்பன் முறையும்

செந்திமா நகர்வாழ் கந்தவேள் சந்நி தி
வந்தாரு மண்டலம் நந்தலிற் பத்தியா
லவ்வுளி நிலவ செவ்விய வேலவ
னவ்விர விற்றிகழ்ந் தன்பொடுங் கனவிற்
ரோன்றிநெட் டோர்வாழ் தூபநல் லன்பன்
பூன்ற முத்தனும் புநிதமெய் ஞானிபால்
சென்றுநின் பிணிக டீர்ந்திடப் புகல்வாய்
துன்றுவல் வினைக டொலைந்திடப் புரிவா
னென்றருள் சுரந்துவே ளிசைத்தவண் மறையக்;
கன்றிய வுளந்தோய் கடிகைநா வலனு நூரு
மன்பொடுஞ் செந்தி லவிர்வடி வேலனை
யின்பொடு மிறைஞ்சி யெழினிட் டாபுரி
சென்றுமெய் ஞானியின் சிறந்தசந் நிதிமுன்
நின்றுபன் முறைபு னைர்பெற விறைஞ்சி
யஞ்ஞான் ரோருபோ தணிவட கரைபா
லஞ்ஞா னத்தமி ழடியனே னினது
நற்றவப் பேற்றை நன்கறி யாதவ
முற்றபுன் மொழியினை யுரைத்தன னந்தோ!
வன்ணண் முதலா யரும்பிணி யடர்ந்த
தென்ன நிகழ்ந்தவை யெடுத்தெடுத் தியம்பி நூ0
யடியனேன் குறையை யன்பொடும் பொருத்துன்
னடியினைக் கிலக்கா யாக்குதி யெனவே
பன்முறை பணிந்து பகர்ந்திட ஞானி
மன்முறை யறிந்து வாழ்த்திதண் கருணையா
லறக்கூ ழொடுவெண் ணணிநீ றருள
சிறக்கநன் கேற்று சேர்த்தினன் மெய்யி,
லக்கணத் தருமபிணி யனைத்துமே யகல
தக்கவன் போங்கி தாழ்ந்திறைஞ் சினனுய்
வண்டமிழ் மாலை வணைந்துமெய் ஞானி
யொண்டிறற் கழலி லுவந்தணிந் தனனே. சநு

இவ்வண மெழுபோ திருந்துநற் புலவோ
னவ்விய மகன்ற வன்பொடு ஞானிபா
னல்விடை பெற்று நண்ணிய வடகரை
வில்லுமிழ்க் கதிர்வேல் வேந்தினை யடைந்து
நிகழ்ந்தவை யனைத்தும் நேர்பெறப் புகன்று
மகழ்ந்தநீ ளகழி யார்ந்ததன் னகர்பா
லடைந்துநற் புலவோ னன்பொடு மிருப்ப
மிடைந்ததண் பொதும்பர் மிளிர்வட கரையாள்
புரவலன் கிளையொடு புனிதமா மகத்திற்
காவணி கங்கணத் தம்பிகை மென்கரத் ரும
திலங்குசெவ் வேள்வா ழெழில்திருச் செந்தூர்
துலங்குறச் செல்வழி தூயநிட் டாபுரி
யோங்கிமெய் ஞானியி ளெளிர்மலர்க் கழலைப்
பாங்கொடும் பணிந்து பகர்ந்துதன் செயலை
செந்திலம் பதிக்கு திகழுமிச் சிவிகையில்
வந்தருள் வாய்செழு மாதவ முனியெனப்
பல்கா லிறைஞ்சிப் பணிவுட னிற்ப
வல்கலில் ஞான வாதவ னியைந்து
கானடை யாகிக் களிப்பொடுஞ் செல்ல,
மானவேற் குரிசில் மாண்படை யொடுமுட ருரு
னேகியே செந்தி லெழுந்தரு ளினனுப்
பாகிய மோங்கப் பண்பொடு மினிரு
னற்பெருங் கருணை ஞானவா ரிதியாம்
பொற்புறுஞ் செவ்வேள் புனிதசந் நிதிசார்ந்
திப்பெரும் பிறவி யீர்த்துநின் னருளார்
சுப்பிர தீபஞ் சொலிக்குமவ் வெளியிற்
றப்பிலா தியங்கத் தந்தருள் குகனே
யொப்பிலா ஞான மொளிர்பண் டிதனெனப்
பலவாத் துதித்துப் பணிந்தன் பொடுநின்
மலமார் விதேக மன்னுவ தெஞ்ஞான் கூ०

றருளுக வென்ற வருந்தவ ஞானிபால்
கிருபைகூர்ந் தயில்வேற் கெழீஇப குமர
னசரீரி யாகி யருந்தவ முனிவ
வசையிலா விரண்டு வருடம துளதென்
றெழிலியெழு ஞானியுள் ளுருகிமெய் சிலிர்ப்ப
மலிபுனன் மாலை மலர்க்கணற் பிறங்கத்
தொழுதுபல் காலுந் துதித்தருள் பெற்று
வழுதியோ டெழுந்து வந்தன னெடுநகர்.
அப்பா லாசை யணிசேர் வடகரைக்
கிப்பா ரிருளொழித் தியங்குவை செல்கென கூரு
வாசிதந் தருளி யவன்றனை விடுத்து
மாசிலா மணியென மன்னுமெய் ஞானி. கூக

5-வது நிலமண்டில வாசிரியப்பா

பிரமா னந்த ஜோதியாய் பிறங்கிப்
பரமா னந்தப் பழம்பொருள் வடிவாம்
பூரண நிலையிற் பொலிந்தவஞ் ஞான்று
காரணு தீதக் காட்சிதந் தருளி
விதேதகமுத் தியினை விழைந்தன னுகி
பதாம்புய மிறைஞ்சும் பக்தர்பால் விளம்ப
சீரார் வடகரை செழியர்கோன் முதலா
யேரார் பழவடி யார்குழு வென்று
பல்லியம் முழங்கப் பழந்தமிழ் துலங்க
நல்லிசை பாடி நடனம் பயில நி
அருசுவை மல்க வாய்ந்தமு தருத்தப்
பெருகிய கருணை பிரமவா ரிதியில்
வுலகுயிர்த் திரளெலா மொருங்குவந் தமிழ்ந்து
மலமுறும் பிறவி மாய்ந்திட வருளி

அலகிலா ஜோதி யாயவிர்ந் தனனே.
நலமெலாம் பொலிந்த ஞானபூ ரணனு
யவ்விளை யாடல் ஆனிமா மதியில்
செவ்விய குருநாள் சிறந்தநற் பூசச்
சுபதினத் தன்று ஜோதியுட் கலந்து
தபமெலாங் கொண்ட தயாநிதி யாகி ஙு
ஜோதி சொரூப லிங்கனைச் சொலித்து
ஆதி பரஞ்சுட ராயவிர்ந் தனனே.
அப்பரா னந்தத் தவிர்ந்திட வாங்கே
யொப்பருஞ் சேணிடை யொண்மலர் மாரி
பூதலம் போர்ப்பப் பொழிந்தனர் சுரரே.
பாதல சகஸ்திரப் பஃறலைப் பாந்தள்
மறையவர் முனிவோர் மறைபுகழ்ந் தேத்தி
நிறைமது மலரால் நிலவிடப் புனைந்தே
அரஹர வெனுமொலி அண்டமுங் கடந்த,
பரவுவா ரொலிபா தலத்தும் பறந்த, ஙரு
ஆங்கெழுந் தருளு டியவ ரிறைஞ்சிப்
பாங்குறும் பதும பாதமுங் தழீஇப்
பசுங்கொடி படர்ந்த பவளமா சயிலா,
விசும்புற நிமிர்ந்து விரிசெழுஞ் சோதீ,
அம்பலத் தாடல்செய் யரவா பரணை,
கம்பொருட் டிங்கனம் நரவுருத் தாங்கி
ஆட்கொண் டுயிர்கட் காரமு தாயலர்
தாட்டொழ வந்து தழைத்தநங் குருவே,
கனவினில் வந்தென் கலக்கந் தவிர்த்து
மனமல மறுத்து மகிழுவந் தாண்ட உ0
நின்பெருங் கருணை நிலவிட வெளியேன்
தன்மய மோங்கத் தயைபுரிந் தருளாய்,
ஜென்மசா கரத்தின் செழுந்டணை போற்றி
கன்மமா மிருளைக் காய்கதிர் போற்றி

பூதமோ ரைந்தாய் பொலிந்தனை போற்றி
நாதமாய் விந்தாய் நடித்தனை போற்றி
கதிர்மதி யாகிக் கலந்தாய் போற்றி
சதிருடை யுயிராய் சமைந்தாய் போற்றி
எண்குணை ஞகி யியைந்தாய் போற்றி
ஒண்குண ஞபுயிர்க் குயிராய் போற்றி உரு
ஐம்புலன் கரண மாஞப் போற்றி
வெம்புறும் பொறிபாய் விளைந்தாய் போற்றி
கோசமுக் குணமாக் கொண்டாய் போற்றி
பாசமீர் வினபாய்ப் படிந்தாய் போற்றி
வளியுதா யவித்தை வடிவாய் போற்றி
ஒளியதாய் மாயை யுதிப்பாய் போற்றி
ஜீவசாட் சியதாய்த் திகழ்வாய் போற்றி
பாவவெம் பகையைப் பறிப்பாய் போற்றி
அன்பினுள் வளர்ந்த வருட்கனி போற்றி
இன்பினுள் ளெழுந்த வீசா போற்றி கூ
என்பிழைக் கிரங்கு மிறைவா போற்றி
துன்பினைக் களைந்த சுகுணை போற்றி
வன்பிற விப்பிணி மாய்ப்பாய் போற்றி
என்புனைந் துருகவன் பினைப்பாய் போற்றி
பாசம தறுக்கும் பண்பா போற்றி
நேசர்தம் நெஞ்சில் நிலைப்பாய் போற்றி
அல்பக லாகி யமர்ந்தாய் போற்றி
மல்கிய கருணை வடிவாய் போற்றி
புல்கியெ னுளத்தே புனர்ந்தாய் போற்றி
அல்கலிற் றுணையா யணித்தாய் போற்றி கூரு
பிரணவத் தெழுந்த பிஞ்ஞகா போற்றி
புரணபா வனையுட் பொலிந்தாய் போற்றி
சரணநின் கழற்கே தமியே னடைக்கலம்
மரணவெம் பிணியை மடிப்பா யடைக்கலம்

கரணைவம் புலனைக் களைவா யடைக்கலம்
திரணைமா மிடரைத் தீய்ப்பா யடைக்கலம்
ஆணவ மலத்தை யவிப்பா யடைக்கலம்
சேணவ ரறியாச் சிவனை யடைக்கலம்
உலகவா தனையை யொழிப்பா யடைக்கலம்
மலமறுக் குடிலை வழங்கா யடைக்கலம்
ஐந்துபத் தொன்று யமர்ந்தா யடைக்கலம்
நைந்துநைந் துருகச்சீர் நல்குவா யடைக்கலம்
அட்டாக் கரமா யமர்ந்தா யடைக்கலம்
சுட்டா வருவாம் சொரூபா வடைக்கலம்
சடாக்ஷர மாகித் தழைத்தா யடைக்கலம்
விடாக்குரம் பையினை வீய்ப்பா யடைக்கலம்
பஞ்சாக் கரமாய் படிந்தா யடைக்கலம்
வஞ்சக ருளத்தே வாழா யடைக்கலம்
திரியக் கரமாய்த் திகழ்ந்தா யடைக்கலம்
கரியா யனத்துங் காப்பா யடைக்கலம்
ஈரக் கரமா யிணைந்தா யடைக்கலம்
ஓரக் கரமா யொளிர்ந்தா யடைக்கலம்
போரா னந்தப் பெருக்கே யடைக்கலம்
ஓரா வின்பத் துடையா யடைக்கலம்
மகிழ்ந்தரு பூதி வழங்குவா யடைக்கலம்
புகழொளி யேனைப் போற்றுவா யடைக்கலம்
தண்டமி ழுலங்கல் தரித்தா யடைக்கலம்
கண்டத்து நஞ்சங் காப்பா யடைக்கலம்
கால னணுகாது காப்பா யடைக்கலம்
மாலளி பூங்கணை மாய்ப்பா யடைக்கலம்
அயன்கரத் துலவா தாள்வா யடைக்கலம்
பயம்நசை யறுத்தாள் பரனே யடைக்கலம்
அடைக்கல மடைக்கலம் அடியனின் னடைக்கலம்
அடைக்கல மடைக்கலம் ஐயநின் னடைக்கலம்

உச ஸ்ரீ அப்பரானந்த ஞானதேசிக சுவாமிகள்.

அடைக்கல மடைக்கலம் அபயனின் னடைக்கலம்
அடைக்கல மடைக்கலம் அணிகெழுங் கழற்கே.

வாழ்த்து

அடியனே னுள்ளத்து ஆர்ந்த அடிவாழ்க
மிடியனேன் வன்பிறவி மீட்கும் அடிவாழ்க
பொடியார்ந்த மேனிப் புனிதன் அடிவாழ்க
பிடியா ளுமைபாகப் பெம்மான் அடிவாழ்க ரு
செடிசே ருடற்பகையை தீர்ப்பான் அடிவாழ்க
துடிசே ரிடையுமையாள் தொழும்பொன் அடிவாழ்க
படிநேர உள்கியவைப் பணிப்போன் அடிவாழ்க
முடிசேர் ஜனகர் முயங்கும் அடிவாழ்க
கடிசேர் கொன்றை அணிவோன் கழல்வாழ்க
கொடிசேர் பவளக் குன்றேறன் அடிவாழ்க
தொடிசேர் மங்கை துணைவன் அடிவாழ்க
மடிசேர் நசையை மாய்ப்போன் அடிவாழ்க
சிவபரஞ் சுடராய் திழைப்போன் அடிவாழ்க
பவமணு காவணம் பணிப்போன் அடிவாழ்க ரூ
தவமுய ருளத்து தழைப்போன் அடிவாழ்க
அவமற வடியார்க் கருள்வான் அடிவாழ்க
உவமையி லாயெம் உடையோன் அடிவாழ்க
நவமலி நெடிய நகரோன் அடிவாழ்க
எவரும் போற்றும் எழிலோன் வாழ்க
தவரி னுளத்து தரிப்போன் வாழ்க
கவருடை யகத்து கரப்போன் வாழ்க
உவர்க்கட லுலகதா யுதிப்போன் வாழ்க
அவரவ ரெண்ணியாங் கருள்வோன் வாழ்க
புவனபோ கமதாப் பொலிவோன் வாழ்க ரூ

வாழ்க அடியார் வழித்துணை வாழ்க
வாழ்க பூசகர் மரபினர் வாழ்க
வாழ்க சர்வம் சிந்மயம் வாழ்க
வாழ்க வாழ்க சிவோகம் வாழ்க
மங்கல முழக்கி மாதலம் வாழுக
மங்கல மிலங்கி மன்னுயிர் வாழுக
மங்களம் மங்களம் வான்றளி மங்களம்
மங்களம் மங்களம் மலரடிமங் களமே. கூகூ

சுபம். சுபம். சுபம்.

மொத்தம் கூடியது நகசு

முற்றிற்று.

அப்பானந்தர் ஒப்பருங் கழலோர்.
சர்வம் சிந்மயம்.

---

(1) விதேகமுத்தி = பரிபூரணநிலை.

ஓம்:

தத்ஸத்

ஸ்ரீ அப்பரானந்த ஞானதேசிக சுவாமிகள்

தோத்திரப்பாமாலை.

தாய்கொண்ட குழவிசெய் பிழையனைத் துங்கொடிய
தாவிளக் கங்கொள்ளினுந்
தயைமிகுங் கருணையொடு தாமரை யிணைக்கரந்
தழீஇயே யுச்சிமோந்து
சேய்கொண்ட வுள்ளக்கி டைக்குறிப் பாற்றிகழ்ந்
திடவெண்ணி யாங்குவந்தே
சிகரஞ் சிறந்தசெழு மணிவேதி கைப்புரந்
திகழ்ஞ சாடிமகிழும்
பேய்கொண்ட பித்தனேன் பெத்தனுன் மத்தனேன்
பேதைக் குணங்களென்னும்
பிணியணுகு நாயினேன் செய்குறை யனைத்துமுன்
பெய்கழலி னென்றருள்வையே
பாய்கொண்ட சமணுவாழ்த் தும்பாண்டி நாட்டிடைப்
பண்போங்கு நிட்டைபுரியின்
பன்மணிகு யிற்றுதளி வளரப்ப ரானந்த
பவரோக சஞ்சீவியே. க

பவமிக் கெழுந்துழலு வல்வினங் கென்னவே
படிபுகலு (1) காவொலிய தாட்
பாரிற் றிகழ்ந்திடினு னற்சகுன மென்பர்புன்
பழியின்வரு ஞாளியாகி

---

(1) காம்=கழுதை

யவமிக் குடைத்தாய றற்றிடினு மல்லினிடை
அற்புதக் காவல்கொள்ளுஞ்
அன்பார்ந்த நற்சுணங் கென்றுடைய ரகமகிழ்ந்
தமுதங் கொடுத்துதவுவார்
(2) சவநீர்மை சார்ந்தமிழு சண்டாள னிவ்வுடல்
சகமதி லெடுத்தன்முறையோ
சமரசன் மார்க்கநெறி பறியாதுன் மென்கழலை
சணமுநினை யாதவம்பன்
தவமிக் குடைத்தாயு னருள்வெள்ள மீதிலே
சகசமா யாடல்கொள்வான்
றமியனே னம்பினே னப்பரா னந்தனைந்
தந்தையே ரட்சிப்பையே. உ

தந்தம தொடித்துக் கரத்திற்ற ரித்தொளிரு
தந்திமுக னைப்பயின்ற
தாதையே திருமிகும் பட்டிமரு தூர்வளரு
தாய்மதுர வல்லிசேயே
எந்தைதவல் வினைக்கடல் கடத்தற் கெழுந்துவந்
தேதன்றசிற் புணையதாகி
யீரெழு தராதல மிலங்குசிற் றுயிலெலா
மினையடியு ளாண்டவிறையே
பந்தைப் புடைக்கப் புடைக்கவெழு வதுபோன்று
பல்பிறப் பெய்திபாழ்த்த
பவமொருங் கெய்துமுரு வோடுழலு பாவினின்
பதுமபத முள்கிலாதே
சிந்தைக் கலக்கத்து சிக்குண்டு செக்கினழி
சிற்றுருவி தைக்கொவ்வுமிச்
சிறியனின் பிழைகளைந் துனதருள் சிறந்திடச்
செய்தருள் சிவோகபதியே. கூ

(2) சவம்=பிசாசம்.

பதியாகி யண்டவகை பல்கோடி யாகப்
பயின்றுகாத் துக்கடிந்து
பழமறை சிலம்புகள் சிலம்பப் பரப்பெலாம்
பரிந்துயிர்த்தழைப்ப வழுத
நிதியாகி யெங்கணு நிறைந்துநிர்த் தொந்தமாய்
நிர்க்குணவ தீதனுகி
நிலவலகி லுயிரினுக் குயிராய் நீறீஇயே
நிமலமிகு சாட்சியென்ன
மதியாகி யுள்ளத் தெழுந்துவளர் பாநுவாய்
மனுதீத பரவெளிமிளிர்
மாட்சிமை நிறைந்தநின தாடலை வழுத்தியே
மவுனமனே மருவிமகிழுங்
கதியாகி கடையனேக் காத்து ரக்ஷிப்பதுன்
கருணைக்கு கந்தகடனுங்
கற்பகா டவியைவெல் லப்பரா னந்தமாங்
கருதரிய மௌனவாழ்வே: ச

வாழ்வனைத் துங்கொண்டெ ழுந்தமுழு வள்ளலாய்
வயங்குபுற் றுய்விளங்கி
வளர்கருணை யன்பிலெடு மகிழ்ஞான மும்மருரு
மன்னியொளிர் புரிதநிலையம்
ஏழ்நிலத் தின்கண்ணெ ழுந்துப்ப தாகையா
வின்புறு தவத்தையேற்ற
யிணையறுங் கோசமீ சனைகரண மிழிமாயை
யெனுபகைஞர் பொருதவீய்த்தே
தாழ்வெலா மெற்றித்த டத்தத்தி லங்குமோர்
தவராஜ சிங்கமாகி
தண்டமிழ்ச் சுவையாய்த் தழைத்திலகு மஞ்ஞான்று
தாழ்செவி துளங்குகளிறென்

பாழறக் கைக்கொண்டு சித்ரா நதிக்குளிட
பண்போ டெழுந்தருளியப்
பகர்ஜீவ சஞ்சீவி யப்பரா னந்தனும்
பரமனே பரிவையருளே. ரு

வையமே மேளோடி ணைந்தபுற் புதமென்னும்
வாழ்வைப் பறித்தல்வேண்டும்
வளியென விளங்குபுன் மனமெனும் விலங்கினை
மாய்த்துகந் தமைதல்வேண்டும்
ஐயமிட் டிட்டடைக் குங்குடிக் கைக்கொக்கு
மாக்கைக் கதிதம்வேண்டும்
அகமுகமி கக்கொண்டு சகமுகமி லாதுநா
னருளுரு விலங்கல்வேண்டும்
துய்யநெஞ் சத்துள்வளர் தெய்வவருள் வேண்டுமத்
தொய்தமுற் றேருங்கல்வேண்டும்
துரியநிறை வுடையடியர் குழுவொடு மிலங்கியத்
துணைமிக விளங்கல்வேண்டும்
செய்யகஞ் சம்மல்லி சேருந்த டம்பணைகள்
சேர்ந்தெதாளிரு நிட்டைநகரிற்
சினகரங் கொண்டருளு மப்பரா னந்தமாஞ்
செல்வமருள் தெய்வமணியே. சு

செல்வச் செருக்குற்ற கங்கரிக் குங்கொடிய
தெவ்வருரா வறுதல்வேண்டும்
ஜெகமெங்க ணும்புகழ ருள்பத்தி யன்புமிகு
சீரறிரு ருரவுவேண்டும்
நல்வத்து விற்கெலாம் நல்வத்து வாயொளிர்
நற்றவத் தோங்கல்வேண்டும்
நமனையுதை பதமணுகி நினதருளி லெழுமினிய
ஞானவழு துணவுவேண்டும்

வில்வத் தெடுத்துப் புகழ்ந்தருச் சிக்கும்
வியாக்கிரர் பதஞ்சலிமிக
வேண்டிட நடித்தருள்செய் கோலத்தை யெளியனுள
விழிகுளிர காணல்வேண்டும்
நல்வித் தகர்க்குழா மறைமுழக் கங்கொண்டு
நண்ணிவா னும்பர்சூழ
நறுமலர்ப் பொதும்பர்வளர் நெடியநக ரோங்குதளி
நளினமிகு ஞானமணியே. எ

மணிமுத்து வயிரங் கலந்தசிற் குடிலையினின்
மன்னிப் பிறங்கல்வேண்டும்
மதிவேண்டு முனதினரு ணிதிவேண்டு மோனவாள்
மறவாது வைத்தல்வேண்டும்
பணிவித்து தத்துவப் பேய்க்குலந் தன்னையும்
பற்றிப் பொடித்தல்வேண்டும்
பக்திவேண் டும்மமல முக்திவேண் டும்மன்பர்
பணிபல வியற்றல்வேண்டும்
துணிவுற்று வைராக மென்னுநற் றுணைவமெனு
துரியத் தொடுங்கல்வேண்டுந்
தொல்வினை களைந்துனது நல்வினை விழைந்தொளிரு
ஞாயறி விலங்கல்வேண்டும்
அணிவித்து மங்கலப் பல்லிய முழங்கிடுபல்
லாவண மிலங்குமறுகா
டருண்மிளிர வெஞ்ஞான்று மவிர்நெடிய நகரோங்கு
மப்பரா னந்தகுருவே. அ

குருதெய்வ மன்னையை யன்சுற்ற மாதினின்
குலவுபத மாதல்வேண்டும்
கொல்பக டிவர்ந்துவரு தென்றிசை வளர்க்கடவுள்
குறுகிலா தருளல்வேண்டும்

அருவெய்தி யுருவற்ற மதனனு மலர்த்தவிசி
னயனுமணு காமைவேண்டும்
அருள்வேண்டு முன்கருணை பொருள்வேண்டு முயிரின்க
ணன்புமிக வாற்றல்வேண்டும்
கருவெய்தி கொக்கரித் துக்கொட்டி டும்பர்தமை
காணு தொழித்தல்வேண்டும்
கனிவுவேண் டுன்கழலி னினைவுவேண் டுங்கரண
கருவிகளு மூமைவேண்டும்
திருவெய்தி வான்றழுவு மாடத்தி னரமகளிர்
தோர்ந்துவிளை யாடல்புரியச்
சேர்நெடிய நகரோங்கி யப்பரா னந்தமாத்
திகழமுத சஞ்சீவியே. சூ

திகழ்பவ மிரித்திடு (1) திருக்கொளி ரெழுத்தைந்து
சிந்தையுளி லங்கல்வேண்டுஞ்
சினமய லகந்தைபுலி யிதையவன முலவாது
திருவருள் சிறக்கவேண்டும்
இகழ்விணெடு புகழுமெச் சமயமொடு வருணங்க
ளிதையத் தொருக்கல்வேண்டும்
இயமநே மாதிகளி ரிந்துநின தின்புருவி
லினிதா யிலங்கல்வேண்டும்
அகழ்கடல் சுலாவகில வரசிறை டுங்குலிசன்
அம்புயம னயனரியும்வாழ்
அவலமிகு செல்வமுள் ளணுகாது வேண்டுமுன
தமலமிகு செல்வம்வேண்டும்
புகழ்வளரு மெண்ணுன் கறந்திகழு நெடியநகர்
பூங்கோவில் கொண்டருளியே
புலையனுள மோங்கிவள ரப்பரா னந்தமெனும்
பூரண னந்தமணியே. ஔ

---

(1) திருக்கு=ஞானம்

வேறு

அன்பெனுங் குகையுள் ளருளுரு வாகி
யடியனேற் கஞ்சலென் றருளி
யென்புநைந் துருக விரந்திரந் தெளியே
னினையுலாங் கழலினை யிறைஞ்சி
துன்பினைத் துடைத்துத் துரிசறுத் துலவாத்
தூயநற் பிரணவ வெளியி
லின்புரு வாய தற்பரத் திலங்க
யேன்றருள் சற்குரு மணியே. கக

சற்குரு மணியே தாலவாழ்க் கையினிற்
றழம்புறு கின்றநின் றமியேன்
பொற்குரு மணிபோற் பொலிந்தவ ணடிக்கும்
புனிதமாந் துவாத சாந்தமெனுஞ்
சிற்குரு மணியாத் திகழ்சிதா காய
சினகர வாழ்வருள் சிவமே
நற்குரு மணியாம் அப்பரா னந்த
நாதனே நடனமா மணியே. கஉ

மணிகெழும் பணிவாய் மன்னிய கடுவாம்
மண்ணினின் மாணவெம் பிறவிப்
பிணிகெழும் புலையேன் பித்தனெங் குறுவேன்
பீடுறும் பெய்கழற் புணையாற்
றிணிகெழு மாயா வடவையோ டார்வத்
திரையெழும் வினைக்கடல் தீர்த்தா
ளணிகெழும் பிர்மா னந்தமா மப்ப
ரானந்த ஜோதிமா தவனே. கங

மாதவக் கொழுந்தா மாசிலா மணியே
மனமெனுந் திமிரமே யணுகா

தாதவக் கொழுந்தா யெழுந்துள.த் தார்ந்தே
யடியனே யாண்டருண் மணியே
சீதமிக் குலவு மெழிலிகண் டுஞ்சுஞ்
சிகரமார் நெடுநக ரோங்கி
நீதமிக் குலவும் அப்பரா னந்த
நிமலதே சிகனெனுந் தேவே. கச

தேவர்க டேவே திருவருட் குன்றே
தேசிக வடிவதாய்த் திகழ்ந்து
மூவரு மறியா மோனமுத் திரையை
மொழிந்துளங் கொண்டநாண் முதலாய்
தாவரு வினையா மளறினைத் தகைத்து
தற்பரா னந்தம தளித்தே தா
யேவரும் போற்று மப்பரா னந்த
வின்னிலை நிறுவி யாண்டருளே. கரு

அருளெலாம் நிறைந்த வையனே யரசே
அணங்கனுர் பிணங்கினிற் சிமிழ்ப்புண்
டிருளெலாம் நிறைந்த விதையவாம் பரத்து
ளிருந்துழன் றழுங்கின னெந்தாய்
மருளெலாம் நிறைந்த மண்ணனேன் றன்னை
மகிழ்ந்துநின் மலர்க்கழல் கொண்டு
தெருளெலா மளித்தா ளப்பரா னந்த
தேசிக மூர்த்தியெண் குணனே. கக

குணமெலாங் கடந்த கோதிலா னந்த
கொழுங்கனிச் சுவையினின் விளைந்தெண்
மணமெலாம் பொதிந்த மாசிலா வமுத
மன்னியே யருண்மலிந் தோங்கி
நிணமெலாங் கடந்த சிற்குணு லம்ப
நிலையம துவந்தரு ணிமலா

பணமெலா மணிந்த அப்பரா னந்தப்
பரமகா ருணியனும் பரனே. கள

பராபர மாகி பகரவொண் ணாத
பல்லுயிர்க் குயிரதா யலவாய்
தாதல மாகி தத்துவா தீத
தனிப்பெரும் வெளியதா யெவைக்கும்
புராதன மாகி பொலிந்தவா னந்த
புத்தமு தளித்தருள் புநிதா
நிராசையோ டொளிரு மப்பரா னந்த
நிற்குணு நிபுணமா மணியே. கஅ

ஏய்ந்தநல் லடியா ருருவருத் தெறியு
மீனமா மீடணை யியைந்து
தோய்ந்தன வுளத்தே தொழும்பனே னந்தோ
தூயதாம் புவிமகள் சுமந்து
காய்ந்திடப் பணித்தா யையகோ கடையேன்
கழிலிணை துணையெனக் கொண்டே
யாய்ந்திடப் புரிவா யப்பரா னந்த
வழுதனே யம்பலத் தரசே, கக

அரசெலாம் வணங்க வவனியின் மனித
ஆக்கைகொண் டாடல்செய் யெம்மான்
புரசமா விருக்க மானவே பொலிந்து
புவியெலாம் பழிக்கவும் பிறந்த
(1) அரசனே னையுமிங் காண்டருள் புரிந்தே
யாய்மலர்க் கழலிணை யடியேன்
சிரசினின் மலர்த்தா யப்பரா னந்தா
ஜீவசஞ் சீவிசிந் மயனே. உ0

---

(1) அரசன் = இராசமற்றவன்

சின்மயப் பொருளாய் பிரணவத் தெழுந்த
சிற்குணை சிரகிரி நகர்வாய்
தன்மய மாக்குந் தயாநிதி கருணைத்
தாயினு மினியதா யுவந்தே
யென்மய நீத்திவ் வெளியணை வந்தாண்
டினியதெள் ளமுதினை யருத்தி
நின்மய மாக்கா யப்பரா னந்த
நிபுணசற் குணமணி விளக்கே. உக

விளக்கென நின்னை யுலகெலாம் விளக்கி
விமலர்கள் போற்றியெஞ் ஞான்றுங்
களக்கமில் லாது கனிந்துணைந் தேத்தி
கழலடி பெற்றுயர்ந் தனரால்
(1) சளுக்கனே னந்தே தா யென்செய்வான் பிறந்தே தன்
சகத்திடை விலங்கென வாளா
(2) துளக்கமில் லருளா ரப்பரா னந்தத்
தோன்றலே தூவெளித் துணையே. உஉ

துணையென நினது தூயதண் கமலத்
துணையடி யிடையறு துள்கி
யிணையிலா துவாத சாந்தபூ மியினி
னிலங்குறு திழிந்தன னினந்தாய்
கணையுலாம் விழியா தியமயல் கடிந்து
கருணையா னிராசையென் பக்தி
யணையிலா தோங்க வருள்புரிந் தாள்வா
யப்பரா னந்தஜோ தியனே. உங

ஜோதியே வடிவாம் சுகாரம்ப வெளியின்
சொரூபமற் றம்பரத் தியங்கு

---

(1) சளுக்கன் = வீணன்.
(2) துளக்கம் = கலக்கம்.

மாதியா யனுதி யகண்டிதா கார
அம்பலத் தாடல்செய் யமலா
மேதியே னுலகின் பிறவிநோய் மிகையான்
மெலிந்துழன் றழுங்கின னுள்வாய்
கோதிலா வழுதா மப்பரா னந்த
கோமளக் கொழுந்தெழுங் குன்றே. உச

குன்றினி லோங்குஞ் சிறகெலா மரிந்த
குலிசனே டேனைய வுலகோ
ரென்றுமிங் கணித்தா யிறைஞ்சினின் றேத்தி
யின்புறு ஞானவா ரிதியே
துன்றுவை ராக மாதிய வன்பு
தோய்த்திடப் புரிந்தருள் குருவே
பன்றிவெள் ளன்னப் பரிந்துழன் றணுகா
பரமனும் பாபமோ சனனே. உரு

சனகனு தியருக் கன்றுகல் லாற்கீழ்
சார்ந்தருண் மோனமு தளித்து
மூனமெழிற் குருந்த விருக்கபாங் குறைந்து
முதுமறை யவனியாட் கொண்டாய்
மனமிறந் தனது மாணடி சேர்வான்
மலங்கினேன் கலங்கினே னருளா
யனமிகுந் தடஞ்சூழ் நெடுநக ரோங்கு
மப்பரா னந்தசற் குருவே. உசு

வேறு

குருவே யெனது குலக்கொழுந்தே
கோவே யொளிர்சிந் தாமணியே
மருவே செறிந்த கடுக்கையந்தார்
மழுமான் றுடியோ டனலரவும்

மருவா தொரீஇ வெண்பொடிகண்
மணிபூண் டடியேன் மலமறுத்த
திருவே யப்ப ரானந்த
சிவம்பூத் தொளிரும் பழம்பொருளே. உஎ

சிவம்பூத் தெழிலார் தமிழ்மணக்குந்
தெரியல் வனைந்து சிந்மயமாந்
தவம்பூத் தொளிருந் ததாகார
தத்வா தீதத் தாண்மலர்க்கே
யவம்பூத் தழுங்கு நாயடியே
னுசைப் பட்டே னருள்புரியாய்
நவம்பூத் தருளோர் வடிவாக
நடிக்குந் தெய்வ நாயகமே. உஅ

நாய கனுமாப் பல்லுயிர்க்கும்
நணித்தா நமனி னுயிர்சிதைத்து
காய கங்கொ ளுனதுகழற்
கருணை ததும்பிக் கனிந்துருகுந்
தாய கஞ்சேர் பழவடியார்
தனக்கெஞ் ஞான்றுந் தீங்குளதோ
தூய மீள்விற் றுறக்கமுறத்
தொழும்பன் விழைந்தேன் றுணைபுரியே. உக

புரத்தை யெரித்தும் புன்னகையால்
பொலிபூங் கணைமன் மதற்பொடித்தும்
சிரத்தை யறுத்து மயன்பணியச்
சிரமா லிகைகொண் டோங்கியதைக்
கரத்துத் தாங்கு முக்கணுடைக்
கடவுண் மணியே நெடுநகர்வாய்
சுரர்பூ சிப்பத் தவத்தெழுந்தாய்
சொலரூபா னந்த சுடர்க்கொழுந்தே. ஙo

சுடரா யிலங்கி யெழுந்தசெழுஞ்
ஜோதி மயமாஞ் சுகானந்தம்
படர்வா னெழிலார் நெடியநகர்ப்
பாலோர் மறுகி ஞப்பணுறைந்
தடர்மா பிர்மா னந்தகுரி
யாதீ தங்கொண் டமரர்தொழு
விடர்தீ ரப்ப ரானந்த
வெந்தா யென்ற ளெளியனனே. நக

அருணீக் கையேழ் கருவியொடு
மவல வினையாஞ் சனனமெனு
மிருணீக் கினிய சுகோதயமா
மெழிலார் குடிலை யீய்ந்தருளா
யிருணீக் கியெனும் பசுங்கொடியோ
டிணைந்து துரியாம் பரமேவி
மருணீக் கப்ப ரானந்த
மணியே மன்ற ணுபகமே. நஉ

மொத்தம் கூடியது நஎஅ

முற்றிற்று.

அப்பரா னந்தர் ஒப்பருங் கழலோர்:

சர்வம் சிந்மயம்.

ஓம்:

தத்ஸத்.

நேடியமாநகரின்க ணேழுந்தருளியிராநின்ற

ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள்

தோத்திரப்பாமாலை.

விநாயகர் காப்பு

கலித்துறை

சிவம்பூத்த பிஞ்ஞகிச் செங்கதிர் வேலவன் சீர்கழற்கு
நவம்பூத்த நால்வகைச் சொன்மலர் மாலை நனிதுளங்கத்
தவம்பூத்த வார்சடை யம்பலக் கூத்தன் றருமதலை
(1) துவம்பூத்த வைங்கரன் ரூண்மலர் சூடி துதிசெய்துமே.

நூல்

சீரோங்கு மாமறையின் மேலோங்கி மாலயனென்
றேவாய்ந்து காண வரிய
யேரோங்கு மோனவெளி மீதோங்கு மாநகரி
லேயோங்கு சிகர மணியுட்
(2) காரோங்கு காதகனின் பாரோங்கு மாலதறக்
(3) காலோய்ந்து முதிர வருளாய்
தாரோங்கு மகழியொடு வாணெங்கு நெடியநகர்
தாணெங்கு முருக வேளே. க

வேள்விடுக் குங்கணெயி லேயிடுக் கங்கொளலும்
வீய்வுறத் தன்க ணடுவின்
வாள்விடுக் கும்மருண மேல்விடுக் கும்புனித
வாடாமனக் கெழுகண் மணியாய்

---

(1) துவம்=அசையாநிலை

(2) கார்=களங்கம் (3) கால்=பிராணுதிவாயு

ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் தோத்திரப்பாமாலை

நாள்வளர்க் கும்பருதி யாயுளத் தொன்றியிருள்
நாமமற் றும்மொ ளிரவுங்
கோள்விலக் குங்கழலே யேமுடிக் கண்கொள வுங்
கூயருள் கந்த மணியே. உ

மணிபூண் மகட்குருகும் பிணிபூ ணுளத்தெளியன்
மலர்ப்பூங் கழற்கு ருகியெண்
பணிபூண் படிக்கருளி பவமேழ் பொடித்தவலப்
பிடிவாழ் வொறுக்க வருளாய்
அணிபூண் விடைக்கொடிய னருளா லுதித்தசெழு
வறுமா முகப்பொ ருளதா
திணிபூண் டவர்ப்பணியு னெடுமா நகர்த்தளிகொள்
திரச்சூர் மடித்த குகனே. ஊ

திரமா புடற்றுணைகொள் ளவமா மிழுக்குடைய
சிறியேன் பவத்த ழலறக்
கரமார் கதிர்த்திகழு னெடுவேல் விடுத்துமலர்க்
கழலே முடிக்க வருள்வாய்
மரமேழ் துளைப்பவொரு சரமே தொடுத்தபுயல்
வணனே துதிப்ப வெழிலார்
(1) நரையார் பொழிற்றிகழு னெடுமா நகர்க்கணிளிர்
நவமே டமுய்க்கு குகனே. சு

உகைக்கும் மயூரமதி லுயர்த்தொண் பதாகையெழு
வொலிக்குஞ் சதங்கை யதிரப்
பகைக்குங் குரூரவினை மிகப்பொன்ற வேலினிலென்
(2) படர்த்துஞ்ச வோடி வருவாய்

---

(1) நரை=நாரை

(2) படர்=துன்பம்

திகைக்குந்தொல் வேதமனை சிறைக்கொன்ற வேகறுவி
சிறக்குந்தெண் மோன மருளி
நகைக்குஞ்ஜ டாமகுட னகக்கண்க டோயமொழி
நவிற்றுங்கு மார குருவே. ந

குருவா யெழுந்தவல வெளியே னுளங்குறுகிக்
கொலுவே யமர்ந்து லவினின்
றிருவாய் மலர்ந்தருளி பிறவா மருந்துதவித்
தெருண்மோன சிந்தை யருளா
யருவா யகண்டிதமொ ணருணு சலந்தனிலு
மருண்மேவு செந்தி றனிலு
முருவா யவிர்ந்துநெடு நகர்வா யமர்ந்தகதி
ரொளிவேல் கரங்கொள் குகனே. சு

கரவாடு வஞ்சமிகு கடையே னுளந்தளிரு
களையாமி ழிந்த நசைதீ
ரரவாடு செஞ்சடில வனையாள்க ரந்தழுவ
அறுமாமு கந்தி கழவே
திரணேடு விஞ்சுபுகழ் சுராதி தஞ்சமுற
சிவகாமி தந்த வடிவேல்
விரைவோடெ றிந்தவுணர் குலமேமி தா லந்திடநல்
விளையாடல் கொண்ட குகனே. எ

கொண்டார்கை மதலையெனத் தொண்டாகி யுழலெளியன்
குன்றுத மவுன குகையி
லண்டாம லுலகுதனிற் கண்டார்கள் நகைசெயவு
மங்காடி சுனக னெனவுந்
திண்டாட விடலுமருட் பொன்றுத கருணையிதா
சென்றோடி வருக மயிலின்
கொண்டாடு நெடியநகர்க் கண் (1) காய முறுதளிகொள்
குன்றுடி வளர்சண் முகனே. அ

(1) காயம்=ஆகாயம்

முகமேமி னுக்கியொளி ரணியேகு லுக்கிகுழன்
முகையான்ம யக்கி வரிதே
யகமேசெ லுத்தியிதழ் நகையான்ம ருட்டியெயி
(1) றணியாலி ணைத்தெ ரிவையை
ஜகமீதெ னக்கு(2)தெரு ளனையாய்ம திக்கவருள்
தருவாய்பு னத்தி மணம
திகமேக டப்பவன மதமாவ ழைத்தகதி
ரெழில்வேல்பி டித்த குகனே. கூ

பிடித்தே யலம்பவினை தடித்தே யிலங்கநகை
பிணைத்தேதய் குரம்பை யுடனு
மடித்தே யழுங்குமெனை யெடுத்தாள லுன்கடமை
யணித்தாய் பரிந்து மயிலை
விடுத்தே கறங்கயிலை தொடுத்தே களைந்தருளி
விருப்போ டருந்த வமுதங்
கொடுத்தே நினங்கழலி னெடுத்தா ணைடும்பதியை
குறிப்போ டுகந்த குகனே. கூ

முருகா ரழற்பொறிய திருமூ வெனக்கவின
வுலகே பொறற்க ரியதா
யருகார் புயற்பகவன் கரமே கொடுப்பவவ
னழலோன் வயத்தி டவவன்
மருவார் தடத்துளிட (3) மழைமா தெடுத்துசர
வணமே விடுக்க வளருங்
குருவேல் கரத்தொளிர்சண் முகனே பிறப்பறவுங்
கொடியே னுளத்தெ முவையே. கூ

---

(1) அணி=வரிசை (2) தெருளனே=அருள்த்தாய்

(3) மழைமாது=கங்காதேவி

உளத்தேய கந்தைதவினை யுடற்றூர்வ மிஞ்சியெழ
வொளிர்ப்போத னைங்தொ ழியவே
விளர்ப்பாரி ழிந்தவமு தெனப்பாழ்கொ ளம்புவியின்
மிகுத்தேப வந்தி கழினை
தெளித்தேதம கிழ்ந்துனிரு பதப்போத ருப்பிமிடி
சிதைத்தேதந லந்தி கழதி
களிப்போடு வந்தமுதை யருத்தாய்நெ டுப்பதியை
கருத்தோடு கந்த குகனே. கஉ

வேறு

உகந்தே மய லூசலெ னப்பொலிய
வகந்தோய்ந் தெளி யேனை யலட்டுவதை
யிகந்தே நின தின்கழ லீய்ந்தருளாய்
மகந்தாய் மறி மீதெழு மாதவனே. கஙூ

தப மேவு தனிப்பரை சிற்குடிலி
(1) னிப மேவு மனைப்புக வென்றருளா
(2) யப மேவு மரக்கரை யாழ்த்தியருள்
சுப மேவு நெடும்பதி வாழ்சுதனே. கச

சுதனென்குறை சூரை யிடத்துரிசார்
மதமாறு மடிந்த வதீதமெழுந்
ததகார மிலங்க தழைத்தருளற்
புதமாமயின் மீதொளிர் புண்ணியனே. கஞ

ஒளிசேர்தர ளக்கரை யொன்றலுறுக்
களிசோர்ந்துழற் கப்ப லெனுங்கடையே
னளிசேரல ரங்கழ லார்ந்தவருட்
டெளிசேர்மனை சேர்த்தருள் சண்முகனே. கசூ

---

(1) இபம்=பிரணவாகாரம் (2) அபம்=கீழ்மை

மனையா தியவீடணை மன்னியுழல்
வினையேன் பிற விப்பிணி வீய்த்தருளாய்
தினமா மது தந்தகு றக்கொடிதோ
டனைதாய் சிவ சண்முக வேலவனே. கன

வேலாற் கிரி வீழ்த்திசை யம்பெறுசிற்
கோலா கல குஞ்சரி நன்கொழுந
மாலாகிய முங்கி மலங் குமெனை
சீலா வலி தாண்டருள் சேவகனே. கஅ

சேவற் கொடி கொண்டுதி கம்பரமே
மேவிச் சிக ரம்மெனு மென்சிகிமேற்
றுவிச் சிறி யேனிரு டாழ்த்தருளென்
னுவிக் கமு தாயவி ராதவனே, கக

அவிர்புன் கர ணங்களொ டைம்புலனைத்
தவிர்கும் பமு னிக்குசெ முந்தமிழை
நவில்பண் டித நண்ணிம கிழ்ந்திதையத்
தவிசின் கணை முந்தருள் சண்முகனே. உ0

அருண் மேவு மகண்டித மேயணுகா
திருண் மேவு தொழும்பனை யென்றருளாய்
மருண் மேவி யவன்குற வோர்மகிழ்வான்
றெருள் வேங்கைய தாகத் திகழ்ந்தவனே. உக

திகழும் மது தீக்கவர் புன்கொலையில்
நிகழும் புலை யென்குறை நீக்கியருள்
புகழுந் திரு வோடு பொறிப்பணமீ
தகழுங் கட லார்திரு மால்மருகா. உஉ

வேறு

மருமன் கழலெணு வன்மனக் கல்லை வகிர்ந்தருளா
லுருகித் துதித்து சுகாரம்ப மோங்குமவ் வோமயமே
பெருகப் பணித்திந்த பேதையைப் போற்றியிப் பேயுலகி
லொருபொழு துஞ்சினி யாதருண் மேடம தூர்ந்தவனே. உங

மிகாண்டே கலிவலிந் தையகோ காமுகக் கோதையர்பாற்
றுண்டே புரிந்திடச் செய்திடுஞ் சூட்சியென் சொல்லு
வன்யான்
பண்டே தொடுத்தவிப் பாழ்வினை யாற்படும் பாதகனைக்
கண்டே கவலையைக் காய்ந்தரு ளாய்சுரர் காவலனே. உச

காய்வட வாவன லும்பணி வெஞ்சினக் காமுகணுட்
டோய்மய லாதிய தொல்வினை தூர்த்தே சுகானந்தமீ
தேய்மதி யூறிடு ஞானமு தந்தனை யேமடுப்ப
வாய்மதி தந்தரு ளம்பிகை யீன்றவ கோசரனே. உரு

சராசர மெங்கணுந் தானுய் விளங்கிய தற்பரத்தி
னிராசையொ டார்ந்திழி யாலம்ப மோசித்து நீணிலத்துத்
தராசென வேய்ந்துநற் ரூமரை நீர்போற் றளம்பலிலாப்
பராபர மோனப் பழந்தரு வாய்ஞான பண்டிதனே. உசு

ஞானம் பிறங்கிடு மெண்ணெண் கலைகளு ஞாலமிக
ழீனந் துலங்குமிவ் வேழைக்க ளிப்பவோ ரின்பநிலை
மோனந் திகழ்ந்தநின் பாதாம் புயத்து மொழியலங்க
லானந்த மெய்தவுஞ் சூட்டிட வாய்ந்தா ளயிற்கரனே. உள

ஆண்டரு ளாயென வல்லும் பகலுங்க ணம்புசிந்த
வேண்டின னின்னு மிரங்கலை யோமிகு வேதனையைப்
பூண்டன வுள்ளம் புகலிடம் வேறிலை பொன்னடிச்சீர்
காண்டிட வுங்கடை யேனையுங் காக்கவெங் காவலனே. உஅ

ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் தோத்திரப்பாமாலை

காவல தாய்க்கடை யேனையுங் கொண்டு கருணையமு
தாவல காயருந் தப்புரிந் தன்புதந் தண்மைய தாய்
(1) மாவல மான மனுதீத சிந்மய மாமலமேற்
(2) கேவலம் வாய்ந்துங் கிளர்பெற வாள்வள்ளி கேள்வ (3)
வினே. உசு

பெறுவினை யாக்கையைப் பொன்னினை மாதரைப் பேணி
யுள்ளத்
துறவினை யோம்பில னெவ்வண முய்வனித் தோமுடையேன்
நறவினை யேய்ந்ததண் டாமரைத் தாளினை நான்சிரமீ
துறநனி சூட்ட வுவந்தருள் வேற்படை யுத்தமனே. உம

படைமலிந் தேதாங்கிடு மாமன்னர் வாழ்வும் படியதனிற்
கடைமிகுந் தேங்கிடக் கண்டன னின்கரு ணைக்கடலாந்
தொடைமலிந் தார்கழற் றந்தே நிராசைச் சுகமருளாய்
கொடைமலிந் தேயொளிர் நீணக ரோங்குங் குகவையனே.
உக

ஓங்குசிற் சோதியி லேங்கார மோன வுவாமதிக்குள்
பாங்குறச் சார்ந்துமுப் பாழறப் போற்றிப் பரிந்தருளாய்
கோங்ககிற் சந்தணக் காநிரை சேர்ந்து (4) குரகமரி
யாங்குநன் மாமறை கொண்டே புகழ்நிட்டை யாள்குகனே.
உஉ

கொண்டநல் சற்குரு வாகியென் னுள்ளங் குளிரவந்தே
அண்டருங் காணு வதீதசிற் சோதி யரும்பொருளைத்
தொண்டனின் சங்கை தொலைப்பான் றுலக்கித் தொகுத்
தருளாய
கொண்டல்கண் டுஞ்சு நெடுநக ரோங்குங் குகவையனே. உஉ

மொத்தம் கூடியது. சகக

முற்றிற்று

வேலவன் விரைகழல் மாலற மன்னுவாம்.
சர்வம் சிந்மயம்.

---

(1) மா=பிரணவாகாரம் (2) கேவலம்=முடிந்தஇடம் (3) இனே=இன்னே
(4) குரகம்=பூவை+அரி=கிள்ளை

ஓம்:

தத்ஸத்.

ஸ்ரீ சற்குரூப்யோ நமஃ:

ஸ்ரீ முப்பிடாரியம்மை பதிகம்.

ஏர்கொண்ட செங்கமல பீடத்தெ ழுந்தரசு
யேய்ந்தோங்கு சிவசங்கரீ
எண்ணரிய குணசயிலி யெழில்சிங்க வாகனீ
இதையாம்ப ரங்கொளனையாய்
கார்கொண்ட கரடமதக் களிறேறந்து கைமலரு
கணபணக் கங்கணமதாய்
கவின்மாம ணிப்பணிய லங்கல்கொண் டோங்குசிவை
கவுமாரி கங்காளினீ
நார்கொண்ட பாந்தளனை யரியிளைரு தங்கையாம்
நடனவுல் லாசவீரீ
நதிதிங்கள் கங்கைமண மெங்குனிறை கொன்றையொடு
நளினமுறு கொக்கிறகுதாய்
சீர்கொண்ட செஞ்சடா பாரமெண் டிசைபுரழ
திகழ்புஜம தட்டமிலகத்
தேர்ந்தாடி நெடியநகர் சினகரம தேய்ந்தோங்கு
சிவைமுப்பி டாரியுமையே. க

திங்கட்பி றைச்சிவணும் வக்ரதந் தங்களொடு
தீயுமிழ்க் கண்கடிகழுஞ்
சிம்மவே றார்ந்துசண் டன்முண்ட னென்னுமிரு
தீயவுணர் மடியவாற்றி
பங்கப்ப டாதரித ஞவினுலு திரமதனை
படியினிலு ருதருந்திப்
படிதிகழ்ந் தோங்கவரர் பலகோடி ஜயஜயென
பாரிஜா தம்பொழியவே

ஸ்ரீ மூப்பிடாரியம்மை பதிகம்

துங்கத்தி லங்குவிடை துவசக்கொ டிக்குடைய
தூயதே (1) வலன்வழுத்துந்
துகடீர் தமிழ்த்தொடைய லோங்குபா தாம்புயமொண்
சுகுணமணி ஜோதிஸ்ரூபி
திங்கட்பொ தும்பர்வளர் கழனிபுடை சூழ்நெடிய
திவ்யபொற் பதியிலோங்குஞ்
செல்வியே சிறியனேன் சிறுமைகீண் டினிதினருள்
செய்முப்பி டாரியுமையே. உ

திருவோங்கு பங்கயமன் செல்விநனி திவளொளிசெய்
தீஞ்சுவைகொ டெள்ளமுதமாய்
தித்தித்து ளங்குளிரு தெய்வகலை வல்லிநுஞ்
சீர்பதாம் புயம்வணங்கும்
அருவோங்கு மம்மையெழி லுந்தொழிற னக்கேய்ந்த
வகளங்க காளகண்டத்
தங்கணிம ணுதித வகண்டிதா காரமோ
டம்புலிக் கபயமருளி
கருவோங்கு பீஜாக்ஷ ரத்தொழிரு காரணீ
கௌரிமுக் கண்ணிகாணீ
கதிபெருகு நின்னருள்க டாக்ஷித்து கன்மங்கள்
காய்ந்துபூம் பாதமருள்வா
யுருவோங்கு மாடகூ டச்சிமய மோங்கிவா
னும்பர்புகழ் நெடியநகரி
லொண்ணித்தி லங்களொடு பன்மணிகு யிற்றுதளி
யொளிர்முப்பி டாரியுமையே. ங

---

(1) தேவலன்=(எல்லாம் வல்ல சிவபரஞ்சுடராம் இராமலிங்கேசர் திருவதனத்தினின்று பரிணமித்தும் பிராணவாகாரியாம் ஸ்ரீ சௌடாம்பிகையின் பேரருட் பொலிவிலங்கி விடைக்கொடி பெற்றும் சுரர் பூஜிதராக மிளிரும்) தேவாங்கமுநிவர். இம்மகரிசீசுரரின் ஆற்றன் மிக்கெழுஉம் திறன்கெழீஇய அரும்பெருந் தவப்பேறுதிய திவ்விய திருவிளையாடலினை தேவாங்க புராணத்தின்கண் தெள்ளிதின் விளக்கியுள்ளன.

இகத்தேதமி குத்திடுத வத்திற்க தித்தோங்கு
மெழிலப்ப ரானந்தனு
மிணையிலா ஞானப்பி ளப்பன்ன ஜோதியினை
யின்பவடி வானபொருளை
யகத்தேதகு றித்துந்த னருள்வெள்ள மீதிலெழுந்
தாடப்ப ணித்தவனேயே
யன்பர்கட் கன்பான வந்தரிசு ரந்தரீ
யானந்தி யபிராமியே
ஜகத்தேதமி குத்திடுப வத்தேதக தித்தோங்கு
சண்டாள மிருகனன
தமியனேன் வெம்பிறவி தழல்வெள்ள மூழ்கித்
தபித்தலுமுன் கருணையீதா
(1) நகத்தேதகு றங்கிற்ப திப்பிக்க வோங்கார
நாதமிதா லிக்குநிமலாய்
நந்தாவ ருட்செல்வ மோங்கப்பு ரிந்தருள்க
நன்முப்பி டாரியுமையே. ச

கத்துந்த ரங்கக்க லிங்கநனி சூழுலக
காட்சியின்ம யங்கிவாளாக்
கண்கெட்ட மாடெனக் கலங்கித்த வித்துழலு
காதகன் கருணைவடிவாம்
சத்துச்சித் தானந்த பிர்மமாம் புணரியிடை
சவிகற்ப நீத்துயர்ந்தே
தற்பரம தாகவரு ளோங்கித்த டத்தமிகத்
தமியேனை ரக்ஷிப்பையே
முத்துங்க ளங்கமறு முழுநீல வயிரமா
முடிகொண்ட முக்கண்ணிவான்
முழுமுதற் பரமனுக் குகந்தவமு தாயுளை
முயங்குமுயி ரோவியமதா

---

(1) ஓர்கால் சிவபிரான் அம்பிகையின் வாயிலாக
பிரணவமுதிக்கும்படி செய்த திருவிளையாடற் குறிப்பு

ஸ்ரீ முப்பிடாரியம்மை பதிகம்

முத்திப்ப திக்கரசி மோனத்தெ முந்தெதாளிரு
முத்தர்க்கு நல்விருந்தாம்
முதல்வியாய் நெட்டூர்த்த லத்துவளர் பூங்கோவி
லொளிர்முப்பி டாரியுமையே. நு

கூனற்பி றைதிகழு யிற்றவுணர் கைகொட்டிக்
கொண்மூவ ளாவியெதிரக்
கூர்வாள்வி திர்த்துகொட் புறவுலவி மகிடசூர்
குலமதீர்த் தின்னல்நீத்து
மேனத்தெதா டுங்கூர்ம வெண்புபூண் டும்பர்தொழு
வெண்டிசைஜ யங்கொண்டுமே
இபமத்த கும்மதுபி ளந்துண்ணு ம்விறல்வாகை
யேய்ந்தவரி யேற்றிலொங்கும்
ஞானக்கொ முந்தெதாளிரு குன்றமே மழுவேந்து
நளினமுக் கண்ணன்மகிழும்
நஞ்சுமிளிர் கண்டங்கொ ளம்மைகிர் பாகரீ
நாளுமல ரடிகள்வாழ்த்த
வானச்சு வைப்பணியு வண்டமிழ்க் கலியலாம்
வழங்கிப்ப ரிந்தாள்வையே
வளருமெண் ணுன்கறமி லங்குநெட் டூர்த்தளியின்
மகிழ்முப்பி டாரியுமையே. சூ

கட்டுக்க டங்காம னக்களிற ணம்புலன்
கருதாவ ணங்களுலவுங்
கதிகொள்வை ராகமெனு (1) கந்தையடு கிம்புரிகொள்
கைமலையை நின்கருணையால்
சுட்டுக்க டங்காச்சு காரம்ப வெளிமடுவின்
சூட்சியுள மிழ்த்திசுகுண
சுத்தநிர்க் குணசாந்த பிரணவமென் குகையினிடை
சுப்ரதீ பஞ்சொலிப்ப

---

(1) கந்து=கட்டுத்தறி

மட்டிக்க டங்காத மௌனமந்த் ராதியாம்
மதீணன்மணி மகிழ்ந்தருள்வையே
மகமாயி பகவதிநன் மங்களேஸ் பரிகொடிய
மறலிகங் காரிமானர்
தெட்டிக்க டங்காத தெய்வவரு ளோங்குதப
சீலர்குழு வெங்கணுமிகுஞ்
சித்திரா நதிகுலவு நெடியநகர் பூங்கோவில்
திகழ்முப்பி டாரியுமைமே ப. எ

தக்கனர் வேள்வியை சிதைப்பச்ச கஸ்த்ரமுடி-
தழன்மாரி கண்கள்தூற்ற
தகுதியுறு மீராயி ரங்கரமும் வீசியே
தனிசூல மெரியேந்தியும்
மிக்கவீ ரச்சடில மெண்டிக்கு புரளவே
மிருபூத படைகள்சூழ
விகசிதச சயமுரசு பேரிகைட மோநகமும
விண்ணதிற வேமுழங்க
செக்கச்சி வந்தநய னச்செவிப ணைமுடிகள்
சிந்தக்க றங்கியீரேழ்
ஜெகமோடு மட்டகஜம் வெற்புங்கு லுங்கவே
திகழிமய கிரிபாய்ந்தபோன்
றெக்கத்து டைத்துமகி ழுமைவீர பத்ரையே
யுன்புகழ்க ணித்தலெளிதா
வுத்தமீ யெளியேணை யாளநெடு நகரோங்கி
யொளிர்முப்பி டாரியுமையே. அ

காட்டினிடை யேகுறவர் பொறியுட்ப டுத்துமுயல்
கலைமறியெ னும்விலங்காய்
கதறியே பதரிமிக கல்லோல மிட்டழுது
காசினியெ லாம்புரண்டுங்

கூட்டினடு வேநின்கு றிப்பறிந் தோர்க்கன்றி
குவலயத் தறியவொணுமோ
குன்றுதோ ராடும்ப சுங்குழவி யீன்றவான்
குஞ்சரிகு ணகரியருள்
நாட்டினிடை யேவந்து நமனுதி பிணியுறு
ஞானப்ர வாகவழுதை
நம்பன்னு ளத்துளுயி ரோவியமென் பாவைபோ
னடனம்ப யின்றருத்தி
கோட்டவக மணுகாத குணமேரு வேயெளியன்
குறையெலாங் கொண்டருளுவாய்
கூறரிய மறையினெலி யோங்குநெடு நகர்வாழ்வு
கொளுமுப்பி டாரியுமையே. கூ

நாதங்க டந்தாளிரு ஞானசஞ் சீவியே
நளினசிந் தாமணியெனும்
நாயகியெ னக்காத்த அம்மையாம் நாரணீ
நடலைபேன் பிறவிமாய்த்தாள்
போதங்க டந்தபரி பூரணிபு ராதனியொண்
புநிதருள மோங்குவாமி
புகழ்மிக்க கயிலைக்கு கந்தமயி லேவிமல
புங்கவர்கள் போற்றுமுதலே
பேதங்க டந்தசம யந்தனிலி லங்கியோர்
பேரசல மோங்குபிடியே
பெட்புலாம் பிஞ்ஞகீ பேரின்ப வெள்ளமே
பிறவி(1)கலி நீக்குபுணையே
வேதங்க டந்தவரு வுருவாயி லங்கநினை
வேண்டினே னருள்கவிமலாய்
விண்வளரு நிதியோங்கு நெடியநகர் பூங்கோயின்
மிளிர்முப்பி டாரியுமையே. கo

(1) கலி=கடல்

கண்கொண்ட பங்கயமெ னடியிணை மிகவழகு
கவிவதன முங்கடையனேன்
கண்ணுறின யனவேறெ னும்பிணிபி னிக்குமெனுங்
கற்பனையி லாழ்ந்ததுளமோ
விண்கொண்ட ஜோதிப்பி ளம்பாய்வி ளங்குசீர்
விபுதர்கட் கரியகாட்சி
விமலமிக நல்கியருள் விமோசனீ விழலனேன்
வேண்டக்க ரப்பதருளோ
பண்கொண்ட தமிழ்நாறு பாமாலை யைநினது
பாதாம்பு யத்தணிவையே
பக்தரக்ஷ கிவாமி பவரோக மாதியுள
பகைஜீவ சஞ்சீவினீ
தண்கொண்ட வழுதசஞ் சீவியென வடியனுட்
டளியோங்கி ரக்ஷிப்பையே
தண்டலையு டுத்துநெடு மாபுரித லத்துவளர்
தாய்முப்பி டாரியுமையே. கக

மொத்தம் சஉஉ

முற்றிற்று.

அம்பிகை பூங்கழல் நம்பிவாழ் குதுமே.
சர்வம் சிற்மயம்.

இவை

நெடியமா நகரின்கண் திருக்கோவில் கொண்டருள்ய ஸ்ரீ முப்பிடாரி யம்மையார் பாதாம்புய மிலங்கும் தண்டமிழ்ப் பதிகம்.

ஓம்:

தத்ஸத்.

இயாழ்ப்பாணம் பிரம்மஸ்ரீ கடையற் சுவாமிகளின் மரபு,

பிரம்மஸ்ரீ சற்குருநாத சுவாமிகள்

திருவடிப்பேறு.

கலி வெண்பா

சீராரெங் கோமான் சிவஞான தேசிகனி
னேராரர் கழலிணைக ளென்முடியி—னேராக
மன்னி மலருமடி மாமறைபு மாலயனு
முன்னி யறியா வுபயவடி—தன்னுபுக
ழார்ந்த புரந்தரனு மம்புலியு மாதவனுஞ்
சார்ந்துருகி யேத்துஞ் சதுரவடி—தேர்ந்தகத்தே
பத்திமிகுந் தெய்வப் பழவடியார்க் கெஞ்ஞான்று
முத்தி மிகுந்தளிக்கு மோனவடி—நத்தியெழுத்
தாயிலங்கி (1) யாறு கவிலருகிற் பூமியில
தாயிலங்கி (2) யைம்பொருளா யானவடி – தீயிலங்குஞ் நி
சாகரஞ்சூழ் தாலந் தலைசுமக்குஞ் சேஷனெழில்
(3) சேகரஞ்சூழ்ந் தேத்தித் திகழுமடி—(4) சேகரமா
மாதவரும் வானவரும் வாழ்த்துமொலி (5) யார்கலியை
மோதவரு வான்றிகழும் மோனவடி.—காதகர்
கட்கே கரந்தவல காசினிவாழ் வெற்றரசர்
கட்கே தமிழ்ச்சுவைபோற் காணுமடி—பெட்பில்லா
வஞ்சநமன் வாதனையை வாட்டிமகிழ்ந் தெஞ்ஞான்றுஞ்
தஞ்சமெனப் பல்லுயிருந் சாருமடி—யெஞ்சலிலாப்
பூரணமா யாங்கும் பொலிந்துமிளிர் பூதலத்தே
யாரணமோர்ந் தேதாத வருளுமடி—காரணமாய் ஓ

---

(1) ஆறும்பதி=ஆறுவதுநிலை. (2) ஐம்பொருள்=அதிசூக்கும மென்னும் ஐந்து அம்சம். (3) சேகரம்=தலை. (4) சேகரம்=கூட்டம். (5) ஆர்கலி=கடல்.

ஞாதருளு னஞ்ஞெய ஞடா தருளுருவா
யோதருளு னப்பருதி யோங்குமடி—போதரும்புங்
கற்பகசிந் தாமணியாய்க் காண்காம தேனுவாய்
விற்பனசங் காநிதியாய் மின்னுமடி—சொற்பதமி
லோங்கார வேதிகையி லோங்கி யுலவாய்மற்
ரூங்கார மாளுர்க் கரியவடி—றீங்கார
சின்மயமா யோங்கித் திழைத்துதனைச் சார்ந்தோதாைத்
தன்மயமா யாக்கித் தழைக்குமடி—நன்மயமா
வேந்துமல ரோன்கரத்தே யேயா தியற்றிகணை
காந்த விடுமதனைக் காயுமடி—தோய்ந்தவினை கரு
யெற்றியே யெவ்வுயிருந் தன்னுயிரா யேன்றுளத்துப்
பற்றியே பாரிக்கும் பத்மவடி—யொற்றியே
ஐங்கரனின் றன்னுருவா யார்ந்தே யகோசரமாந்
துங்கசிவோ கந்துலங்குத் தோற்றுமடி—பங்கமறத்
தாங்கி வினையை தடுத்தா டயாநிதியென்
றேங்கி யுருகவுவந் தேதற்குமடி—யோங்கியுயர்
தாயாகித் தந்தையாய்த் தாங்கி யருளமுதைச்
சேயாப் பருகெனவுந் தேற்றுமடி—யோயாம
லுள்ளச் சினகரங்கொண் டோங்கியகத் துள்கியவை
வள்ளலென வந்தே வழங்குமடி—எள்ளலுறு உ0
புன்குரம்பை பொன்ற புநிதசஞ் சீவியதா
யன்பு மிகவகத்தே யார்ந்தவடி—பொன்பிறழ
ரம்பைமக ளார்வமொடு நண்ணுகினு நாடாதுஞ்
செம்பொன்மலை முந்துறினுஞ் சீக்குமடி—யம்புவியை
யோராதத் வைதமிளி ருத்தமரல் வாதவரைச்
சேரா தொருக்குஞ் சிறந்தவடி—பாராதி
யண்டங் (6) கடந்ததுவா யப்பாலு மாயலவாய்
பிண்டங் கடந்தே பிறங்குமடி—தொண்டருடற்
கற்பூரம் போன்றுங் கனிந்துருக்கிச் சென்மமுந்நீர்
பொற்பூறு நற்புணையாப் (7) போற்றுமடி—யற்பமலி உரு

(6) அண்டங்கள் + தந்த (7) போற்று = ஆதரிக்கும்

யீனந் தனைவிளக்கு மிந்திரிய மாதியெற்றி
ஞானந் தனைவிளக்க நண்ணுமடி—யானந்தத்
தேன்பொதிந்த தெய்வமலர் தேவி மணிவாய்
கான்பொதிந்த குண்டலியாய் காணுமடி—ஆன்றமனத்
தெண்ணியா ரெண்ணியாங் கெய்தவுமோர்ந் தெம்மதமு
ணண்ணியார் போற்றும் நளினவடி—புண்ணியர்
பூணுமருட் கண்மணியும் பூதிகவ சங்களைபுட்
பேணிலருட் கண்டுலங்கப் பேசுமடி—காணுலகின்
மன்னு முயிரொவைக்கு மாண்புறுசஞ் சீவியதா
யுன்னிப் புரந்தா ளுபயவடி—துன்னுவினை
யார்ந்தமிடி யாவரண விட்சேப வன்மலத்தை
சார்ந்த விருடுணித்துத் தாங்குமடி—ஓர்ந்தறியா
வேகாட் சரமா யிலங்குதொட்டி லேற்றியுமோர்
யோகாறு பூதிபுரிந் துய்க்குமடி—யேகாந்தஞ்
சிந்திக்கப் பொன்னடியிற் சேர்த்துதெருள் சிற்குடிலை
சந்திக்கத் தற்போதந் தாழ்த்துமடி—பந்திக்கச்
செய்யுஞ்சி காரமதிற் சீத மதியமுதைப்
பெய்து பிறவியெலாம் போர்க்குமடி—யையுடனே
நல்லுணர்வு மாய்ந்துவிழி நாடா தொளிமழுங்கி
யல்லலுறுஞ் சீவனவந் தாளுமடி—கொல்லுகுண ந
வன்மறலி யேயாது வாழ்த்தி வளர்த்துவருங்
கன்மமெலாங் காய்ந்து களையுமடி—பொன்மயமா
யாக்கும் புனிதவரு ளந்தரங்க மாகநின்று
காக்குந் தலைமைக் கடவுளடி—போக்குவர
வில்லாச்சு கோதயமா யெய்ந்துமிளி ரெண்குணமா
யல்லாய்ப் பகலா யவிர்ந்தவடி—நில்லாதே
காணும் பரோக்ஷமதைச் காய்ந்தவப ரோக்ஷமெனத்
தோணு மகோசரமாந் தூயவடி—நீணிலனுய்
நின்று நிராலம்ப நின்மலம தாய்நெடிய
குன்றைச் (9) சிரமேற் குயிற்றுமடி—மன்றமதி ச

(9) சிரமேல்=இராவணன் முடிமீது

லாடியுமெண் ணன்பருள வாலயம மர்ந்துமிக
நாடினரை யேவிழுங்க நண்ணுமடி—பாடமகிழ்ந்
தானந்தத் தாண்டவங்க ளாடி யருளியன்பால்
(8) வானந்த மோங்கி வளருமடி—மோனவந்த
மோங்க வெளியேனை யோர்ந்தாண் டுலகமெலா
மாங்கனையா யீன்ற யவிருமடி—தீங்குறுமால்
சாராத வத்துவிதந் தந்தமல சன்மார்க்கச்
சீரா ரநுபூதி சேர்க்குமடி—யோராயி
ரத்தெட் டிதழ்மீதி லோங்கியபி ராமமுட
னெத்திக்கும் போற்ற வியங்குமடி—வித்திட்டெண் சரு
ணன்புநீர் பாய்ச்சி யருட்கதிர்கண் டைந்தவித்து
யென்புருக நோக்கினரை யேன்றவடி—யின்புருவாய்
சார்ந்தே வுயிரெலைக்குஞ் சான்றுகி சத்தசத்தா
யார்ந்தே சராசரமு மானவடி—யோர்ந்து
தமிழுலங்க லோங்கித் தழைத்தமல தேவா
வமிழ்தினவே யார்ந்துள் ளரும்பி—வுமிழ்திரைசூழ்
தாரணியி லான்றோர் ஜனகா தியர்முடிமே
லாரணமோ டோங்கி யமர்ந்தவடி—பூரணமா
வாய்ந்த தமிழ்மணக்கும் வாயுடைய வாரணங்க
ளாய்ந்தமணி வாசகன்மே லார்ந்தவடி—யேய்ந்தசெழுஞ் நூ
சட்சமயா தீத சமரசமெய்ஞ் ஞானநெறி
யுட்சமய மோங்க வுவந்தவடி—தட்சிணைபாய்ப்
பொன்னுங் கலிங்கமுனற் பூடணமுங் கொண்டுலகின்
மன்னும்பொய் யையர்மொழி மாய்க்குமடி—யென்னுளத்
யுத்தமனு யோங்கி யுவந்துபரி பூரணனுய் [தே
சித்தந் தவிர்கவெனத் தேற்றுமடி—சுத்தபர
மானந்தத் தேன்பொழிய வாரியனுய் வந்தெனுளே
தானந்த மாகித் தழைத்தவடி—ஞானந்
தனைப்புகட்டி யாண்ட தவராஜ சிங்கன்
றனைத்துதிக்கத் தாழாதென் னுள்ளம்—மனைப்புகுந்த நூறு

(8) வான் + அந்தம்.

யையனேயே போற்றி யழுது தொழுதிடவே
வெய்ய வினையிரண்டும் வெந்தொழிந்த—மையலிட
வந்தானே யென்னுளத்து வாரா வொருசொல்லைத்
தந்தானே யென்சொல்வேன் ரூரணியீர்—சிந்தா
குலமறுத்தான் பொன்னடியின் கோலமதைப் போற்ற
மலமறுத்தா னென்சொல்வேன் வாயபாற்—புலமறுத்த
சுத்தாத்து வீத சுயஞ்சோதி யானவர்கள்
முத்சாந்த மோன முனிவீர்கள்—வித்தாரங்
கொண்டுளறு நாயேன் குணமிலியேன் சொன்மொழியின்
மண்டுபிழை யெய்திடினு மன்னிப்பீர்—கண்டுவிழி
யையன்பொற் ரூளை யலைந்தினவே கண்ணமுழையுந்
துய்யவன்பு நன்மலருந் தூர்த்தனவே—பொய்ய
னழுது தொழுதேதபொற் ரூளிணையை யன்பாற்
பழுதுபடக் கூறினுங்கண் பார்த்தாட்—கழுதுகுழு
கைகொட்டி யாடமுது காட்டினிலா டுங்கழலைப்
பொய்கொட்டி யோடமுடிப் போதாக்கி—மைகொட்டி
யன்ன கருங்குழலா ளம்பிகையா டன்னருளாய்
மன்னி மகிழ்ந்தவடி வாழியவே — சுச

மொத்தம் கூடியது சஅசு

முற்றிற்று.

சற்குரு நாதன் சரணமே சரணம்.

சர்வம் சிவமயம்.

ஓப்:

தத்ஸத்.

பிரம்மஸ்ரீ சற்குருநாத சுவாமிகள்

தோத்திரப்பாமாலை.

திருவிளங்கும் பெருங்கருணைத் தெய்வமெலாம் வணங்குந்
திகழ்(1)மவுனக் கரம்பயின்ற செல்வனெனும் புனிதக்
கருவிளங்குங் கண்மணியாங் கணபதியாய்க் கதிர்வேற்
கரத்திலங்குஞ் சேயவனுய்க் கற்பகப்பூங் கொடிபோன்
மருவிளங்குங் கொன்றையந்தார் வணங்தருளெம் முமையாய்
மன்னுசிவக் கொழுந்தெனவே வயங்குபெருந் தகையா
குருவிளங்கு மெண்சுடராய் குருமணியா யிலங்குங் [ய்
கோதறுபூங் கழன்முடிமேற் கொண்டுபணிந் திடுவாம்.

க

அலை(2)கலைசூ ழுவனியெலா மவிர்ந்தவுயி ரெவைக்கு
மண்மையதாய் மானுடனு யருளுருவந் தாங்கிக்
கலைகளெலாங் கடந்தபரங் கருணையமு தளித்துங்
கானுறைமான் சரிதமெனக் காட்சிபுரிந் தருளி
நிலைகளெலா மிரிந்தசெழு நின்மலநிஷ் களமாய்
நிலவுகதி சாதியலா குடிலையதே நிலவிப்
புலை(3)களெலா மயின்றுழலாப் புனிதருளத் தோங்கும்
பொற்புறுபுங் கவன்பொற்றுட் புகழ்ந்துபணிந் திடு
வாம். உ

அருள்பழுத்த செழுங்கனியை யதனிலுறுஞ் சுவையை
யன்பருளத் தகண்டிதமா யவிர்மோன வழ்தை
தெருள்பழுத்த சிவக்கொழுந்தை சிற்பொருளாந் திருவை
தெள்ளியநான் மறைமுடிக்குந் தெரிவரிதாம் பொருளை

(1) பிரணவம். (2) கடலாடை. (3) புலால்.

பிரம்மஸ்ரீ சற்குருநாத சுவாமிகள் தோத்திரப்பாமாலை

யிருள்பழுத்த வேழைந்து தத்துவமேய்ந் திணையா
வின்புருவா யிணையிலியா யெண்குணமா யலவாய்
மருள்பழுத்த வடியனுளம் மன்னிமகிழ்ந் தொளிரு
மாண்புறுநங் குருமணிதாண் மலரினைவாழ்த்
திடுவாம். ங

அருவாகி யுயிர்க்குயிரா யகிலசரா சரமா
யையம்பூதங் கரணமெலா மகன்றபர வெளியாய்
திருவாகித் தெள்ளமுதாய்த் திவளொளிசிற் குணமாய்
திகம்பரத்தே நடமிடும்பொற் சிற்மயமாந் தெருளாஞ்
சொருவமாந் தொன்மறைக்கூந் தோன்றுத விபுவாஞ்
சுயம்பிரகா சத்தனியாய் சுகுணமணி விளக்காய்
குருவாகி யெளியனுளக் கோவிலின்க ணேங்குங்
குணக்கடலை யனுதினமுங் குறுகிவணங் கிடுவாம். ச

வேறு

உலகமெலாங் கடந்தபர வெளியுற்றோங்கு
முத்தமனெம் பிரான்கடைய னருண்மிக்கோலு
யிலகுபரா னந்தத்தே யிணைந்துவாழு
மிறைகாசித் தேசிகன்று ளிதையத்துன்னி
நிலமிலகு முயிர்களுக்கோ ரமுதமாகும்
நிற்குணனுய் நின்மலனுய் நீதனுகிக்
(1)கலகமெலாங் கனிவித்துக் கனிவிற்கொள்ளெங்
காவலன்றன் கழலிணையே கருத்துள்வைப்பாம். நி

வேறு

உள்ளமெனுங் குடிலைதனி லுவந்தொளிரு
மருட்குருவா யுலவாஞான
வள்ளலெனும் மாதவனு வேதமுடி
மருவிறையாய் வயங்குங்காமக்

(1) கல்+அகம்.

கள்ளரெனுங் கருவிகர ணுதியெலாங்
களைந்தெதறியுங் கருணைவள்ளல்
கள்ளவிழும் மலர்ப்பதத்தை யனுதினமுங்
கருத்திருத்திக் காணல்செய்வாம். கூ

வேறு

தந்தையுந் தாயுமாகித் தனிவண்ணை நகரின் மேய
வெந்தையெம் பெருமானேக னெழிற்குரு வடிவ தாகி
பந்தபா சங்களாதிப் பகையுள வனைத்து மீர்த்தே
ரந்தமின் முத்திநல்கு மடிமலர் முடிமேல் வைப்பாம். எ

வேறு

சீர்வளர் கருணை முகிலென விளங்கி
சிந்மயா னந்தவா ரிதியாப்
பார்வளர் ஜீவப் பயிர்தழைத் தோங்கப்
பணித்தருள் பொழிந்தவா னமுதா
யோர்வளர் யாழ்ப்பா ணப்பதி யிலங்கு
மெழில்சிவ ராஜயோ கியனே
கார்வள ருளந்தாய்க் கடையனேன் றனையுங்
காத்தருள் (1)கடவுண்மா மணியே. அ

பவக்கடல் படிந்த பதகனேன் றனைப்புன்
பாவைவன் மகரவாய் சிக்குண்
டவக்கட லனைய வகன்மனை மகாரென்
னலைசுழித் தமிழ்த்திய தின்னே
தவக்கடல் புகநின் றுட்புனை தந்தே
தமியனை யாள்வதுன் கடனே
சிவக்கட லெனவே வாழ்தவ ராஜ
சிங்கமே சற்குரு மணியே. கக

---

(1) கடவுள்=குரு

துன்பெலாந் தெருண்டோ டருவெனத் துலங்குந்
துரிசினே னெனினுனின் றுணைத்தாட்
கென்பெலா முருகி நெக்குநெக் குடைய
விணையுலாங் கண்மழை பொழிய
யன்பெலாந் தெருண்டோ ரமிழ்தினை யருத்தி
யையம்பெரும் பிரணவக் குடிலி
லின்பெலாந் தெருண்டோர் வடிவென விலங்க
வேன்றருள் சற்குரு மணியே. கo

தீயவைம் புலனு மறுகுக டோறுந்
திருகுவெஞ் சினமன யானை
பாயவே தறியிற் பரிந்திணைத் திடிலோ
பகைபுரிந் தின்னலே விளைக்குஞ்
சீயமா முனது செய்யபங் கயத்தாள்
சிறியனேன் சென்னிமன் னிடினன்
னேயமா மிந்நோய் மிடிமடித் தருளாய்
நிற்குணை சற்குரு மணியே. கக

குமரிநாண் முகைக்கண் விடையபுன் மதுவை
குடைந்துணு சுரும்பனை யின்னே
நிமலவிவாண் ஞான பானுவா யிலங்கி
நெடியவவ் வினைதடிந் தருளி
யமலமாந் துவாத சாந்தபூ மியினி
லார்ந்தருண் மோனஓங் காரக்
கமலமே திகையின் வதியவெம் பிறவி
காய்ந்தருள் சற்குரு மணியே. கஉ

விடையமண் டின்ற வினையினே னுலகின்
வெந்துயர்ப் பிறவியிற் கிலக்காய்
முடைகெழுங் குரம்பை யெடுத்தெடுத் துணங்கு
மூர்க்கனே னின்மொழி யுணராக்

கடையரு கிலுமென் சிறுமையை யேன்று
கடைக்கணித் தருள்புரிந் தாள்வாய்
கடையிலெம் பெருமான் மாபினின் வளர்ந்த
கண்மணீ சற்குரு மணியே. கஙு

பத்தியாம் வலையுட் படுபரன் கழலைப்
பாவியேன் பணிந்துனந் துருகி
நத்தியே நிமல நாமமைந் தெழுத்தும்
நவிற்றிலே னடலையே னவித்தை
சத்திவா யிடுக்குண் டவலமாம் விழலேன்
சதுரழிந் திடினுஞ்சிற் பரைவாழ்
(1)முத்திபஞ் சாக்க ரந்தனின் மிளிரு
மொய்ம்பருள் சற்குரு மணியே. கச

கண்மணி நீற்றுக் கவசமே கவினக்
கருணைவான் கடலெனக் கனிந்தே
யொண்மணி பொருவு முளமிகுஞ் சான்று
ருபயபா தாம்புயந் தழுவித்
தண்மணி சிவணுங் கண்பனிப் பெய்யத்
தாழ்ந்துனைந் தலறிலே னந்தோ
யெண்மணி மானு மெண்குணு கரனே
யென்றருள் சற்குரு மணியே. கரு

(2)முத்தரை வாழ்வின் முயங்கியே மயங்கும்
மூடனேன் மூர்க்கனேன் மேலுன்
மத்தரை மான மண்ணிடை நடித்தேன்
மம்மர்நோ யறுக்குமா மருந்தே
பித்தரைப் போலும் நின்பதாம் புயத்துப்
பெட்பிலேன் நட்பிலேன் மோன

---

(1) முத்தி = அதிசூக்குமம் (ஐவகை பஞ்சாக்கரத்துள் சிறந்தது.)
(2) முத்தரை = மூவுலகு

முத்திரை யருளாய் பிறவிநோய் தணிப்பான்
முத்தனே சற்குரு மணியே. கசு

இருள்பழுத் திலகு மெளியனே னுளமா
மிதையவாம் பரம்புரந் தருளி
மருள்பழுத் திலகுஞ் சிற்பர வெளிக்குள்
மாயையாம் நாதமு மடித்தே
தெருள்பழுத திலகுஞ் சிற்பர வொளிக்குள்
செனிப்பற நிறுவிதள் ளமுதாம்
அருள்பழுத் திலகா னந்தமே யளித்தி
யையனே சற்குரு மணியே. கள

கலபயின் றறியேன் பயின்றமே லவர்பூங்
கழல்பணிந் தறிகிலேன் றீயர்
வலபயின் றுழலும் விலங்கென மலங்கி
வாரிசூழ் புவியின்வந் துழலா
நிலபயின் றறியே னெனினுந்தற் போத
நிலையழித் தெளியனே யாள்வாய்
கலபயின் றெளிருந் தத்துவா தீதத்
தாணுவாஞ் சற்குரு மணியே. கஅ

அம்புவி யதனி லடியனேன் பொருட்டா
யைங்கணைக் கிழவனு மயனும்
வம்புகள் விளைக்கா துன்பதாம் புயத்தே
வழங்குதண் டமிழ்மணங் கமழ
சம்புவே யலங்க லணிந்தன னருணின்
றுண்மல ரடைக்கலம் புகுந்தே
னம்புதோய் நயனக் கலசநீ ராட்டி
யையனே சற்குரு மணியே. கக

நெஞ்சறிவுறுத்தல்

அவலமெஞ் சகன்ம கவலையுற் றணைமுன்
னடைந்தவீ ஷணையுளங் கருதி
குவலயம் புரக்கும் மன்னர்தம் வாழ்வுங்
குலிசவாட் புரந்தரன் வாழ்வுந்
தவலருஞ் சீர்த்தி மூவர்தம் வாழ்வுந்
தகர்ந்தவோ திகழ்ந்தவோ சாற்றுய்
திவலயம்ஃ துளினு மம்மவோ வடவைத்
தீயினுங் கொடிதெனத் தேரே. ௨0

பொருண்மய லுழக்கப் புந்திநொந் தவலப்
புவிநசை மீக்கொணெஞ் சகமே
யிருண்(1)மயக் கெழீஇ யிழிந்தனை யந்தோ
யென்செய்வான் றோன்றினை யிகத்திற்
றெருளுருப் பொலிந்தே திகழ்பரங் கருணைத்
தேசிகன் கழலிணை குறுகி
லருளுருத் தாங்கி யமலவீ டடைவா
யயன்மத னமன்வலி யவித்தே ௨க

பேதையர் மயக்கின் முயங்குறும் பேதாய்
பிணமலப் புழுக்குவை மன்னி
தீதையே விளக்குஞ் செடியுடற் கடிந்து
தீயினுங் கொடிதெனத் தேர்வா
யோதிடிற் குலிசன் சரிதமோர்ந் திடுதி
யுந்திபூத் தோனய னறியாத்
தாதையெங் குருவின் முண்மலர் முடிமேற்
றரிப்பவல் வினைதணந் திடுமே. ௨௨

மகவெனுந் தளையுண் மலங்குபுன் மனனே
மன்னிய வழன்மெழு கென்ன

---

(1) மயக்கு+எழீஇ

பிரம்மஸ்ரீ சற்குருநாத சுவாமிகள் தோத்திரப்பாமாலை

மிகமெலிந் தனையோ மேதியூர் நிருதி
மேவிவீய்த் திடின்விலக் குவையோ
வகமகிழ்ந் ததிலோ ரணுத்துணை யேனு
மார்வமற் றம்பலத் தாடும்
பகவனங் குரசீவான் பதமலர்ப் புணைசார்
பவக்கடல் கடந்திடப் படுமே. உங

கற்பனை மின்னற் கானலி னீராய்க்
(1)கால்ரத முயற்கலை கிளிஞ்சி
லற்புத மானு மாக்கையை யிலவ
மடைந்தமென் கிள்ளைபோன் றணுகி
நிற்பது சதுரோ நிகழ்த்துதி மனனே
நிலமிசை நீடுவா ழுலைவிகால்
தற்பரத் திலங்குஞ் சற்குரு மணிபூந்
தாள்பணிந் திடிற்கதி தருமே. உச

மண்ணினை விழைந்தே தமிழ்ந்திறு மாந்து
மம்மர்நோ யுழக்குற வாணை(2)ர்
விண்ணினை விரும்பி காமிய மியற்றும்
விலங்கினேர் விழலுறு மனனே
யெண்ணிய வனைத்துந் தருங்குரு பரன்ரு
ளிணைமலர்த் துணையென ஞான்று
மூண்ணினைந் துருகி யுலப்பிலா னந்த
வுவகையி லோங்குக விரைந்தே. உரு

ஐம்புலக் காட்சி வாதனைக் கிலக்கா
யமிழ்ந்தனை யார்வமா மளற்றில்
வெம்புறும் பிறவி யுடற்றிட வினையான்
மெலிந்துனைந் துருகுநெஞ் சகமே

---

(1) கால்ரதம்=பேய்த்தேர். (2) ஓர்=விரும்பத்தக்க

நம்புக வென்சொ னயனமூன் றுடைய
நம்பனே ருருவருத் தாங்கி
யம்புயக் குடிலி லார்ந்தநங் கோமா
னலரடி யுனின்மல மறுமே. உசு

கரணவா தனையாற் கலங்கிமா ழாந்து
கருவடைந் துழலுநெஞ் சகமே
மரணநோய் தணிப்பான் விழைந்திடி னமல
மங்கள வடிவொடு மிளிர்ந்தே
புரணமாங் கருணைப் புணரிபோன் றெளிரும்
புண்ணிய னெமதுசற் குருவின்
சரணபங் கயமே சார்ந்தருண் மாந்தி
சதுருடன் வாழ்வது தகவே. உஎ

காமமா தியநின் கருத்தறிந் துழக்கக்
கண்ணிழந் தழுங்குபுன் விலங்காய்
நேமநிட் டாதி நியதிசெய் தந்தோ
நிலவினை புவிச்சுமைக் கிலக்கா
யோமய மொளிருந் துவாதசாந் தமெனு
முதயவான் கிரியெழுந் தருளுஞ்
(1)சீ மய னெமது குருபரன் பொற்றுள்
சிந்தனை செய்குதி மனனே. உஅ

ஆகமா றுறவை யகத்திடை யுன்னி
யார்வமா ரவலநெஞ் சகமே
சோகமாங் குழுவின் மிருல்லையைத் துலக்கிச்
சொற்றலு மெண்ணலும் படுமோ
போகமா முயிர்சார் புகழொடும் பொன்ற
புநிதமெய் நிராசைசாந் தியொடு
(2) மேகமெண் குணமா ரெங்குரு பரன்ரு
ளிணைமலர்க் குறுகியேத் துகவே. உக

(1) சி=சிகரத்திற்குரியவன். (2) ஏகமாகவும் எண்குணமாகவும்.

மாயையின் வயத்த ஞகியே மலங்கி
(1) மைத்திரி யாதியை யிகந்தாய்
நாயினுங் கடைய விடையபுன் மனனே
நவிலுமித் திரிசியந் துணைகொல்
பேயினு மிழிந்த பேதையாய் கேண்மோ
பிறைகுலாஞ் சடிலநம் பெருமான்
ரூயினும் மினிய கருணையங் கடலாஞ்
சற்குரு சரணமோர் துணையே. நம

மண்ணினிற் புகழை விழைந்தறு சுவையின்
மலங்கிபுன் சூரம்பையி னூர்வ
முண்ணினைந் தொழுகு முலுத்தநெஞ் சகமே
யுலப்பிலா பந்தமெய் துறுமால்
பெண்ணினைப் பாகம் பெற்றநம் பெம்மான்
பிறப்பிலி குருபரன் பொற்ரு
ரூண்ணினைந் துருகி யோவியம் போன்றிங்
குறைந்திடிற் பந்தமோய்ந் திடுமே. நக

உலகவாஞ் சனையை யுளத்தகழ்ந் தொழிக்கு
முபாயமொன் றுளதுகேண் மனனே
கலகம்வெஞ் சினம்வீண் கவடுவஞ் சனையுங்
காமுக ருறவையுங் களைந்தா
மலகமா முளங்கொண் டருட்பெருங் கருணை
வள்ளலாங் குருபரன் கழலைத்
(2)திலகவான் றலத்தே நிறுவியத் வித
சிந்மய ஞகுதல் தெளிந்தே. நஉ

மொத்தம் கூடியது நிகஅ

முற்றிற்று.

சற்குருநாதன் சரணமே சரணம்.
சர்வம் சிந்மயம்.

---

(1) மைத்திரியாதிநால்வகை சுகுணம். (2) சதாசிவ நிலையம்.

ஓம்:

தத்ஸத்.

ஸ்ரீ சற்குரூப்யோ நம:

போதிகாசலத்தின்க ணெழுந்தருளியிராநின்ற

ஸ்ரீ அகத்தீசுவர் பதிகம்.

கார்கொண்ட மெய்யொளிரு ஞானக்க ளிற்றினைக்
காத்துப் பயின்ற (1) குகையின்
கருதரிய மோனவடி வெய்திவல் வினையறக்
கடாக்ஷித்து சுதனை யாள்வா
யோர்கொண்ட கணவரவ கங்கணமி லங்குசடை
யெண்டிசை துளங்கு விடையோ
னிணையிலா மன்றலது கண்டின்ப மெய்தவே
யெய்ந்தவுத் தரம தோங்கு
னீர்கொண்ட கங்கா பகீரதி சரஸ்பதியு
னின்மலமன் யமுனை நதியும்
நீள்விணுறு மதிபர்தொழு சித்தர்மக ரிசிகுழுவு
நிலவிமா சலமன் முநியே
சீர்கொண்ட செந்தமிழு னற்றவ மணக்குமா
சிவராஜ சிங்க முனிவோர்
சிறந்துவள மெழுபொதிகை யொளிருவான் சிம்புளாய்த்
திகழுகத் தீச மணியே. க

பேய்த்தே ரெனச்சுழலு வன்மன மெனுங்காற்
பிடித்துள் ளகத்த டக்கும்
பெட்புலவு சற்குரு வெனக்குறுகி யெளியனேன்
பிணியொழித் தருளல் வேண்டுஞ்

---

(1) குகை=பிராணவாகாரம்.

சாய்த்தீத வடக்காழ்ந்து தெற்குபரு படியதனின்
சார்ந்துவிளை யாடல் கொள்ள
சண்முகனை யீன்றபர னுண்முகம தாயோர்ந்து
சரபமென வுலவு னினையே
கூய்த்தே மகிழ்ச்சியொடு தெக்கணம தேதெகனக்
குலாவிப் புகழ்ந் தருள லுங்
குறுகிதிரு முன்னுகந் தருண்மணமென் கோலமது
கொண்டுனது காசூழி தந்து
தூய்த்தாண் முடிக்கணிக வென்றுசாலி தமிழோடுந்
துரியங் கடந்த மணமுஞ்
சுலவுபொரு ளைநதிகாள் பொதிகாச லந்திகழு
தூயகத் தீச மணியே. உ

காமக்கு ரோதலோ பாணவமெ னலகைவாழ்
கர்த்திர்த்து வாதி குகையிற்
கருணையெழு மெய்ஞான வழலினை யெழுப்பியே
கடிதினி லுவந் தாளுவாய்
நேமத்தொ டுங்கயிலை நீத்துப்பு றம்போந்து
நெறிபல துறந்து வருநா
ணிருதியென வவ்வுளியின் வாதாவி வில்வலவ
னிசிசரர்க ளிருவர் நேர்ந்து
வாமப்பெ ருந்தகைய வள்ளலே நங்குடிலின்
வந்துணவு கொள்க வென்னும்
வாய்மையை யுணர்ந்தவரின் சூட்சிக்க தீதமாய்
மன்னியவர் மெய்த கித்து
சோமச்செ ழுஞ்சடில ணுடுமா பொருளைநதி
சூழ்ந்துலவ செந்த மிழோடுஞ்
சுகனிகரு சித்தர்குழு சூழ்பொதிகை யங்கிரிகொள்
தூயகத் தீச மணியே. ஊ

மாசற்ற சுழுனையாந் த்வாதசாந் தம்மெனு
மனுதீத மோன வெளியின்
மன்னியை யேழுங்க டந்தமல மாயுற
மகிழ்ந்தெதளிய னேனை யாள்வா
யாசுற்ற வவுணன்கிர வுஞ்சகிரி யெனவோங்கி
யண்டமுக டார்ந்து நிற்ப
வவ்வுணர் வறிந்தசல மாகுதி யெனக்கறுவி
யைங்சுரற் கிளைய முருகன்
றேசுற்ற செங்கதிரின் வேற்படை யெறிந்துமெய்
சிதைத்துப் பிளந் தழிப்பத்
திருவாய் மலர்ந்தருளி யன்னெறி துறந்துபல
சித்திக டமைப் புரிந்து
காசுற்ற புவனத்தி லங்குயிரி னீட்டமது
கனிவொடு துறக்க மேவக்
கன்மமொழி பொருணைநதி சூழ்பொதிகை வாழுமென்
கண்மணி யகத் தீசனே. ச

என்பெலா னெக்குருகி யிருவிழிக ணீர்சிந்த
யின்பப் பெருக்கை யூட்டி
யிடையரு வன்புருவ மாகியுன தருளில
கிணைப்பதம தேய வருளாய்
வன்பெலாங் கொண்டுட்டெ ருண்டுலவு மவுணனெரு
வளர்விந்த கிரிய தாகி
வானேங்க வாதவனும் வரநெறிய லாதயரும்
வண்மையை யறிந்து மவன்செய்
துன்பெலாங் கண்டுட் சினந்துகரம் விண்ணினிடை
தூக்கிப் புடைத் தாழ்த்தியுந்
துக்கம துறும்படி நிலத்தினிடை செய்தருளி
தொன்னெறி துறந்து செடிசேர்

புன்புலால் யாக்கைக் கதீதமா மத்துவித
புநிதர்சுரர் சித்தர் குழுவும்
பொற்பிலகு தண்டமிழ்ப் பொதிகைகொ ளகத்தீச
புங்கவ சிவோக மணியே. நு

அண்டமு நடுங்கிக் கலங்கக் கறங்குமோ
ரஷிர்காள வாளென னவரு
மந்தகனு மைங்கணை யனங்கனு மறைக்குரிய
வந்தணனு மோய வருளாய்
விண்டல மடங்கவெழு சையசல சென்னிதனின்
மேவியினி தருளி யாங்கு
விமலமுறு வரநதிகொள் கலசமதை முன்வைத்து
விபுவினப ரோக்ஷ மெய்தி
துண்டமதி வேணியனி னளினவடி துன்னியே
தொழுதுபூ சிக்கு மேல்வை
துதியைந்து கரமெரு கரண்டவுரு வதுகொண்டு
தூயகல சத்தை சாய்த்து
பண்டைவடி வெய்திக் கடாக்ஷிக்க வருள்பெற்று
பழமறை யிறைஞ்சு பொதிகை
பண்போ டெழுந்தரு ளகத்தீச வள்ளலாம்
பவரோக சஞ்சீ வியே. சூ

கொலைகளவு கட்காம கோடக்கு வைகண்மிகு
குலமதீர்த் திரவு பகலாங்
குற்றங் களைந்துமல குணரகித வெளியினிடை
குறுகவெளி யேனை யாள்வாய்
கலிவளரு தெய்வீக நதியொலிசெய் திரிகூட
கவின்கொள் குற்ரூல கிரியின்
கனிவுட னுகந்துதிரு விளையாடல் கொண்டருளி
கருதரிய வேத நதியின்

மலைவற மகிழ்ந்தாடி முக்களா லிங்கர்வாழ்
மாண்பாவ நாச நகரின்
மணிமிளிரு ஜோதிசிவ லிங்கத் தெழுந்தருள்செய்
மகமேரு வில்லி பதும
மலரடிக டொழுதன்பு கொண்டுதண் டமிழிலகு
மணமன்ன வமல முனிவோர்
மருவிவளர் தென்பொதிகை யாண்முனி யகத்தீச
மதியமுத சஞ்சீ வியே. எ

தாயினினு நல்லின்ப மோங்கச் செழுங்கருணை
தாயென மகிழ்ந் தணைத்தே
தயையுடனி வெளியனுழை கலிநீத்தெ ணமலமெனு
ததகார நிதியை யருளாய்
சேயென்னும் ஞானக்க ளிற்றிறெடு செங்கைவேற்
செல்வறெடு சித்த ருரகோர்
சிவகண மொடுஞ்சேச சயனனுன் மறையவனு
ஜெய ஜெய வெனு முழங்க
யேயவிண ரவராதி பூமழை பொழிந்துபல
விசையினை யெழுப்ப வீறு
செழில்விடை யுகந்துபர னுமையொடு மணக்கோல
மினியநற் காசூி புரிய
தூய (1) வளி யோங்கத் துதித்து துர்யாதீத
சுத்தநித் யானந்த மாஞ்
ஜோதியென மிளிருமா தவமிலக கத்தீச
சுகஜீவ சஞ்சீ வியே அ

அந்தகா ரங்கொண் டனுதியா யல்லவா
யளவிலா மாயை வனமா
ராணவ மெனுஞ்சீய மனமாதி யரவகண
மாரவா ரங்கள் புரியும்

(1) அளி = கிருபை

ஸ்ரீ அகத்தீசுரர் பதிகம்

பந்தபா சந்தந் துழக்கிக் கலக்குமிழி
பாழ்கொள்வினை பற்ற றுப்பான்
பரிவிலெடு னின்கருணை தனுசிலொளி ரருளென்ற
பாணந் தொடுத்து மதனை
நந்தமோ சித்துப் பறித்துத் துடைத்துமே
நட்ட நடுவே துலங்கும்
நளிர்மதி யிலங்கமுத முண்ணவெளி யேனுமுனை
நம்பினேன் கருணை புரிவாய்
சுந்தரா னந்தச் சுவா நுபவ முத்தரொடு
சுருதிக் கதீத தெய்வ
சோதிமிளிர் தென்பொதிகை யங்கிரி யெழுந்தருளு
தூயகத் தீச மணியே. கூ

ஆசைப் பெருக்கென்னும் வெள்ளத் தழுந்திபிற
வரிவையரென் மகர வாய்ப்பட்
டாழ்ந்தியுழல் சிந்தையடி யேனினை தருளதா
மன்பிலகு புனையி லாள்வாய்
மாசைத் தருந்தேக மதனிலே பிறவாது
மட்பாண்ட மதிலு தித்து
மந்த்ரவடி வாயொளிரு மருள்வெளி யிலங்கியாண்
மகமாயி கவுமாரிநி
யீசிச் செழுங்கமல மென்கரம துலவியோ
ரெழிலார்ந்த சரவ ணத்தே
யினையிலா வாடல்கொண் டருளுகுக நாதன்மல
ரிணையடி மருது ருகியுண்
ணைசித்து மெய்யருளை நேர்ந்துநல மருள்கங்கை
நின்மலம தெய்து முனிவோர்
நிலவுமெழில் பொதிகைவளர் முனியெனு மகத்தீச
நிமலனே நிபுண மணியே. ஏ

தண்ணமுத வெள்ளந் திழைக்குனி னெழிற்கருணை
தகைமைசா லெழிலி யார்த்து
தநுகரண புவனமோ கங்களொடு சவிகர்ப்ப
தழலொழிய நின்ன ருளினும்
விண்ணருவி பொழியப் புரிந்தருளி ஞானமெனும்
விமலபைந் தளிர்க ளோங்கி
விபுநிலவு பயிர்தழைய வவலமிகு வினையார்ந்த
விழைவெனு (1) வியங்க களையை
யெண்ணரிய பூங்கழ லெனுங்கருவி யாலொருவி
யினையிலா முத்தி கதிர்கண்
டின்பநிலை யென்னுமோர் பண்டியில் தொகுத்தருளி
யெளியேயென யாளு மரசே
நண்ணரிய வட்டமா சித்தர்தப முனிவர்வாழ்
நற்பொதிகை யோங்கி மகிழும்
நவிலொணு ஜோதிமய மாயொளி ரகத்தீச
நாதனுந் தெய்வ மணியே. கக

மொத்தம் கூடியது ருஉக

முற்றிற்று.

அகத்தியநாதன் அடியினை துணையாம்

சர்வம் சிந்மயம்.

---

(1) வியங்கமம்=கூடியது

ஓம்

தத்ஸத்

ஸ்ரீ சற்குரூப்யோ நமஃ

பராசத்தி தோத்திரப்பாமாலை

ஆரணமு மாகமமு மாய்ந்தறியாப் பொருளை
யையெழு தத்துவத்திற் கப்புறமாம் பொருளை
நாரணனு ளன்முகனும் நண்ணரிதாம் பொருளை
நவிலருஞ்சிற் குடிலைவளர் நம்பனுளப் பொருளை
வாரணனுஞ் சேயவனும் வாழ்த்திடுவான் பொருளை
மன்னுமருள் சித்தாந்த வழியொளியாம் பொருளை
பூரணமா யெளியனுளத் தளிவளரொண் பொருளை
பொற்புறைநந் துருகிவிழிப் புனலுகப் போற்றிடு

[வாம். க

வேறு

அருளார்ந்த மதிவதனத் தழகு போற்றி
யம்புலிச்செஞ் சடையொளிரு மரவு போற்றி
தெருளார்ந்த துடியிடையுஞ் சீரும் போற்றி
திகழொளிப்புன் முருவலுஞ்செங் குழையும் போற்றி
பொருளார்ந்த வருள்விடையின் றுவசம் போற்றி
புனிதமிகுங் கணபணக்கங் கணமும் போற்றி
யிருளார்ந்த கரியுரிதா யெழிலும் போற்றி
யிணைமலர்த்தா ளெஞ்ஞான்றும் போற்றி போற்றி. உ

கலைகளெலா மொளிதுடி பங்கயக்கை போற்றி
கவினுறுமான் மழுவிளங்கு காட்சி போற்றி
யலைகளெலாங் கறங்குபுன லணியாய் போற்றி
யார்ந்தபசுங் கொன்றையந்தா ரழகு போற்றி

சிலைகளெலாம் வணங்குதிருப் புருவம் போற்றி
சிந்மயமாம் பதிநடிக்குஞ் சிவையே போற்றி
தலைகளெலா மிலகலங்கற் சதுராய் போற்றி
தற்பரமா யிலங்கலர்த்தாள் போற்றி போற்றி. ஈ

திசைகடந்த வெண்டோளின் றிறமே போற்றி
திகழொளிமுக் கண்மலரின் சீர்த்தி போற்றி
யசைவிலதா முளத்தொளிரு மறிவே போற்றி
யன்புருவா யருளுருவா யமர்ந்தாய் போற்றி
நசைகடந்த நடுவணையோங் காரம் போற்றி
நண்ணியெழும் வெள்விடைவா கனத்தாய் போற்றி
வசைகடந்த வாழ்வனைத்து மருள்வாய் போற்றி
வள்ளியபூங் கழலிணையெஞ் ஞான்றும் போற்றி. உ

வேறு

அருள்விளங்கு திருச்சிற்றம் பலந்தனிலே யெம்மா
ணுடலுகந் திடநடனம் புரிந்தருளெஞ் சிவையே
தெருள்விளங்கு மாரணனும் நாரணனும் பேண
திகழரவு புலிமுனிவோர் சித்தர்கணம் போற்ற
மருள்விளங்கு முலகவிடர் மாய்த்துசுரர் வாழ்த்தி
மலர்மாரி பொழியபதம் வகுத்தருளெண் குணியே
இருள்விளங்கு பிறவிகளைந் தெளியனேயென் றருளி
யிணைமலர்த்தா டுணையெனவே யீய்ந்தருளீஸ் பரியே. ஊ

(ரு)

புலைவீசு புலாலுவந்து புகழ்ந்தயின்ற புலையேன்
புன்குரம்பை பெருக்கமது (1)புரியினயிற் கொடியேன்
வலைவீசும் வனசரனுப் வயங்குமுயிர்த் திரளை [ன்
வாள்கொடுவீய்த் தவனியெலாம் வழியலைக்கு மிடியே

(1) புரியின் = ஆசையின் + அயில் = உண்கின்ற

பராசத்தி தோத்திரப்பாமாலை

கலிவீசுங் கணிகையர்க்கண் ணடிக்குடியா யுழன்றுங்
கவராடுங் கடையரிலுங் கடையனுளங் கொண்டே
யலிவீசு நதிமதியு மரவணிச்செஞ் சடையெம்
மாரணங்கே யடியனையாண் டருளுகவிக் கணமே. சு

ஆங்காரக் கொடுகிழங்கை யசழ்ந்தெறிந்துங் கொடிதா
மைம்புலன்க ளிந்திரியங் கரணமெலாங் களைந்து
மோங்கார மனைபுகுந்த யொளிர்மணிவெண் டரள
முகந்தபசுங் கொடியனைய மரகத மாணிக்க
மூங்காரக் குடிலெனவே யொளிருபதி யார்ந்தே
வுலவிவரு நினதருளாங் கடல்படிந்து முனது
றீங்காரச் செழுங்கமலத் தேனருந்தி சிவமா
யினையறுநல் லின்புறவு மீய்ந்தரு ளீஸ்பரியே. எ

புள்ளேறும் புவியுணவும் பொறியர வினணையும்
பொலிந்தமணி வண்ணனும்விண் புரந்தரனுஞ் சுரருங்
கள்ளேறுங் கடிகமழ்ப்பூங் கமலனுனின் கழற்கே
கண்மாரி பொழிந்துருகக் கடையனிலுங் கடையே
னுள்ளேறு மாணவப்பே யுலப்பறினை மறந்தே
யுலகமயற் கடல்படிந்தே னுப்வணமெவ் வணமோ
வெள்ளேறு வுகைத்தருளி விரைவினின்வந் தெளியேன்
வினைகடிந்தின் னருள்புரிந்தாள் விமலசவுந் தரியே. அ

குணங்கடந்த குண்டலியாய் குலவிய கோமளையாய்
கொஞ்சியருட் குகைவளருங் கோகில மென்பிடியாய்
(1)எணங்கடந்த (2)வம்பலியா யைங்தொழிற்கா மிறையா
யிவைசான்று யண்மையதா யிகபரமா யிவைங்தண்
குணங்கடந்த கொம்பனையாய் குலவுசிவக் கொழுந்தாய்
கோதிலமு தாயெனுளங் கொண்டகுரு மணியாய்
(3)நிணங்கடந்த குரம்பையெலாம் நீத்து நிராலம்ப
நிற்குணமாம் நின்னருளீய்ந் தாண்டருளீஸ்பரியே. கூ

---

(1) நினைவிற்கதீதம், (2) அம்பலத்தாள். (3) நிணங்கள்தந்த.

கோவார்ந்த நம்பெருமா னுளத்துயிரோ வியமாய்
குறுகிவளர் கோதறுமெண் குணமிகுதெண் மணியே
(1)நாவார்ந்த வெண்கமலா சனத்துறை நாமகளும்
நலமிலங்கு மங்கலமாஞ் செங்கமலாம் பிகையும்
பூவார்ந்த நினதுபதாம் புயமிறைஞ்சும் பொற்பால்
புனிதபதம் பெற்றுயர்ந்தார் புன்மலந்தீர்ந் புழுவேன்
சீவார்ந்த செடியுடல மேற்றிருந்தே னந்தோ
சிந்மயமா னந்தமளித் தருளுகசிற் பரையே. கo

கோலோங்கி யுலகமெலா மாணைகொளுங் கோமான்
குலவுநிதிக் குவைதரினுங் கொளவுளங் கொள்ளாது
சேலோங்கி யுலவுமருட் கண்ணியர் சிற்றிடையார்
செஞ்சலச்சேற் றிடையுழலாத் திருவருள்சேர்ந் தவனி
மாலோங்கி மனமலங்கி மருண்டுபுரண் டுலவா
வண்ணமெனக் களித்துசன்ம மாய்த்துபுரந் தருளாய்
பாலோங்கு கலசமதாற் கவுணியருக் கருத்தும்
பார்வதியாம் பசுபதையே பரைசவுடாம் பிகையே. கக

பூரணியாய் புராந்தகியாய் புங்கவிசாம் பவியாய்
புனிதருளத் தோவியமாய் பொலிந்தபெருந் தகையா
யாரணியா யவ்வுமுவ்வா யகிலமெலாம் பயின்ற
வம்மனையா யுயிர்த்திரளா யனைத்தினுக்குஞ் சான்றுங்
காரணியா யெண்குணியாய் கணபணக்கங் கணியாய்
கௌரியளாய் கங்காளி கபாலிநி யீச்சுரியாய்
நீரணியா யோங்கார நிபுணமணி விளக்காய்
நிலவுசவுந் தரியனையே (2) நிசிதனையென்ற ளருளே.
கஉ

பேர்பூத்த பிஞ்ஞகியாய் பிறப்பிலியாய் பெம்மான்
பிராட்டியெனும் பெட்புடையாய் பெருகிய காருணியா

---

(1) நா=பொலிவு. (2) நிசிதன்=இழிந்தோன்.

யேர்பூத்த யின்புருவா யீறிலியா யிமவா
னீன்றயிளம் பிடிநடையா யிடபமெழுஞ் சிவையாய்
நார்பூத்த நஞ்சணியாய் நடனமிடம் மணியாய்
நஷிலரும் பூரணவெளியுண் ணடுவணையே யிலகுஞ்
சீர்பூத்த தண்ணமுதாய் சிறுமையெலாங் களைந்தே
சிவம்பூத்த செழுங்கழலாற் சிறியனேயேன் றருளே. கங

படங்கிடந்த பாம்பணையோன் பரிந்தகழ்ந்தும் பாரை
பங்கையனும் பறந்துழன்றும் பற்றியுரு நிமல
வடங்கிடந்தா ரணமலம்பும் வள்ளியப்பூங் கழற்கே
வழங்குதமிழ் மலரலங்கல் வணைந்தனனேன் றருளிச்
சடங்கிடந்த சழக்கனெனப் புறக்கணியா தெளியேன்
சமரசசன் மார்க்கநிலை சார்ந்திடவே பணித்தாள்
விடங்கிடந்த கண்டமிளிர் விமலினியே நினது
விரைமலர்த்தா ளிணைத்துணையாய் விழைந்தன னேன்
றருளே. கச

வேதாந்த செழுங்கமலப் பொகுட்டெனுவே திகையின்
விளங்கிடுமெண் குணமணியே விமலினியே விபுவாம்
நாதாந்த வெளியிலங்கும் நடனசிகா மணியே
ஞாதுருஞே யங்கடந்த நடுவணையோ மயமாம்
போதாந்த ருளத்துவளர் புத்தமுதாந் தெருளே
புனிதமிகும் மரகதமாம் பூரணிபூங் கொடியே
கோதார்ந்த வுளத்தொழிக்குங் குருமணியே கொடியேன்
குறைகளெலாங் களைந்தருளெங் கோமளமாம் பரை
யே. கரு

அலைகளெலா முழங்கியெழு மார்கலிசூழ் தரணி
யார்ந்தவுயிர்த் திரளினநின் னருளுருவென் றுளாது
புலைகளெலா மயின்றுழலும் புலையரினும் புலையேன்
புழுமலிந்த புன்குரம்பை புகுந்திடவோ பணித்தாய்

கலைகளெலாங் கடந்துலகக் கற்பனையுங் கடந்து
காண்பரிய வைம்புலனுங் காரணமெலாங் கடந்தெண்
ணிலைகளெலாங் கடந்தொளிரு நிர்க்குணவான் மணியாய்
நிலவிடவந் தாண்டருளாய் நிமலிசவுந் தரியே. கசு

வேறு

அன்பெனு மலரி லரும்பிடு மழுதே
யம்மல ரெழுமருட் கனியே
யின்பெனுஞ் சுவையை யீய்ந்திடுந் தருவே
யிணையிலா மம்மர்நோய் மருந்தே
துன்பெனு முலகத் துரிசெலாந் துடைக்குந்
தூயமெய்ஞ் ஞானவா ரிதியே
யென்புனந் துருகி யிணையடி யிறைஞ்ச
யெளியனே யென்ற ருளனேயே. கள

அன்னையே யமலா யருட்பெருஞ் சோதி
யாரண மணிகெழுங் கழலாய்
தின்மையே புரியுந் தீயனெங் குறுவேன்
றிரிபுறு மவித்தையாற் றியங்கி
யுன்னையே யறியே னறியுமோ ரறிவு
முற்றிலேன் பெற்றிலே னுமையே
யின்னினி யேயென் னிருள்கடிந் தலவா
வின்புற வென்ற ருளனேயே. கஅ

காய்ந்திடுங் காம வெகுளிவஞ் சனைபுங்
களங்கமு நிறைகளஞ் சியமே
யேய்திடுங் கொடியே னிடும்பனே னுலகி
லீறிலா வுருவெடுத் தழன்றுந்
தீய்ந்திடும் புலையேன் றிருவருட் கிலக்காய்த்
திகழ்வனே திரிபுராந் தகியே

யாய்ந்திடு மோனக் குடிலையெய்ந் தருளி
யடியனே யாண்டரு ளணையே. ககூ

கொப்பினிற் பழுத்த கொழுங்கனிச் சுவையே
குணமணிக் குன்றமே கொன்றை
வம்பல ரிலங்கு (1) வகரமாம் வடிவே
வள்ளலா யெழுந்த வா னமுதே
வெம்பிநின் றழுதேன் விழலனே னினது
விமலமாஞ் சுகோதயத் தழுந்த
நம்பியிங் குளறு நாயினே னுளத்து
நாடிவந் தாண்டரு ளணையே. உ0

கங்கைசூ ழுலகின் காஞ்சியா யலவாய்
கனிந்தவான் கருணையங் கடலாய்
செங்கையாற் றெரிக்குந் தேசிக வடிவாய்
திகழ்ந்தருள் சுரந்துசிற் குடில்வாழ்
மங்கையா யெளியே னுளம்புகுந் தாண்டு
மன்னிய மாசிலா மணியாய்
பங்கையா சனத்து ளெழுந்தகம் பீரி
பரிந்தெனை யாள்பரா பரையே. உக

மலங்குமும் மலந்தீதாய் மனமெனும் பேயை
மடித்துவன் மாயையால் வளர்ந்தே
யலங்குவிட் சேபா வரணமு மகன்ற
வைம்பெரும் பிரணவக் குடிலி
லிலங்குபூ ரணியே யிதையவாம் பரத்து
ளின்புரு வாகியே யியங்கத்
துலங்குநின் னருளாம் புணரிதாய்ந் திடவே
தொழும்பனே யாண்டரு ளணையே. உஉ

---

(1) கொன்றையலரினுட் சகுணம்

ஞானபூ ரணியே நயனமூன் றுடைய
நாரணீ நடனறீங் காரி
மோனமாம் பதிவாழ் முதல்வியே முடிவின்
முத்தியாஞ் சினகரங் கொண்டா
யீனமாம் பிறவி யெடுத்தெடுத் துழன்றே
னிடும்பனே னெவ்வண முய்வேன்
கானவன் வலையிற் கலங்குறு விலங்காய்க்
கதறினேன் காத்தரு ளணையே. உக

கமலநான் முகவன் கணித்தபுன் மாயைக்
காட்சியாந் திரிசிய வடிவை
மூமலமே யொருவி நோக்கிடி லுனது
மூர்த்தமா மருளுரு வெனவே
யமலமா முநிவ ரருளின ரந்தோ
வறிவிலே னறியுமா ருளத்தே
விமலவிவாண் ஞான பானுவா யிலங்கி
விழைந்தவா ருகந்தரு ளணையே. உச

பண்களோ டுனது பதமலர்க் குருகிப்
பாடிலேன் பணிகிலேன் பதையேன்
கண்களா னினது கருணையங் கடலைக்
கவர்ந்துகான் முகிலெனக் கலுழேன்
பெண்களோ டுவக்கும் பேதையேன் பேயேன்
பிறவியே றறுத்துதண் ணருளா
ரெண்களோ டிலங்கும் பரவெளி தந்தா
ளீஸ்வரீ யிமயவான் மணியே. உரு

குழவியா யுலவுங் காலையின் மலமாங்
குலமறுத் தின்னருள் கொழிக்கும்
பழமறை தந்திப் பாவியேன் றனையும்
பரிந்துவந் தணைந்துமெய்ஞ் ஞான

வழகினை யளித்த வமுதவா ரிதியே
யம்மவோ கைவிடன் முறையோ
மழவிடை யிவர்ந்த மாசிலா மணியே
மவுனவாழ் வளித்தரு ளுமையே. உசு

வண்மையை யறியா மனவனம் புகுந்தோர்
வனசரி யாகியங் குலவித்
திண்மையா யிலங்குங் காணமாம் விலங்கைத்
தீய்த்துவெம் புலன்களாம் பறவைக்
கண்மையா யமர்ந்துன் னருளெனுங் குடம்பை
யடைந்திட வருள்புரிந் தடியே
னுண்மையாந் துவாத சாந்தபூ மியினுள்
ளொளிர்பெற வாண்டரு ளுமையே. உள

மண்ணினெண் புகழை விழைந்துவாழ்ந் திடுவோர்
வாசவ னெனவிளங் குறினும்
நண்ணிலே னவர்புன் னட்பினை யெளியேன்
நமனைவாட் டியசெழுங் கழலை
யுண்ணினைந் துருகு முலப்பிலா னந்த
வுத்தமர் தாள்பணிந் திறைஞ்சுங்
கண்ணியந் தருவாய் கவுரிகங் காளி
கயிலைநா யகிபுராந் தகியே. உஅ

ஐந்தொழி லியற்று மாதியா யயிரா
வணத்தி தாளி ரம்மைகுண் டலியா
யிந்துவாழ் சடையா யெழில்பசுங் கொடியா
யீறிலாச் செழுஞ்சுடர்க் குன்றாய்
நந்துலாங் கரங்கொ ணளினதண் டுளப
நாரணன் வழுத்துசே தரியே
வந்துநின் கழலே சரணென வடைந்தேன்
மகிழ்புரிந் தாண்மனோன் மணியே. உக

பிறைகுலாஞ் சடைசூழ் பிஞ்ஞகன் பாகம்
பிறங்கியே பெட்புறு ஞான
மறைபுகழ்ந் திறைஞ்சு மதுரையம் பதியாள்
வழுதியின் மகவெனப் பொலிந்த
யிறைவியே நினது யிசையள விடுதற்
கேவரே யுடையரெங் கணுமே
நிறையறி வுருவாய் நெடியதூ வெளியி
னிறுவியாண் டருளுக வணையே. நஂ

சமயமோ ராறுங் கடந்துமே தகுமுட்
சமயமாய் சமரச மோன
மமயவோர் வடிவுள் ளேப்பொரு ளாகி
யதிதமா யகண்டபூ ரணமா
யுமயவ ளாகி யுகாரகா ரணமா
யுணர்வினுக் குணர்வதா யிலங்கு
மிமயவான் மயிலே யின்பமே யெளியே
னிடர்களைந் தாண்டரு ளணையே. நக

மத்தமு மிறகும் வணிந்தசெஞ் சடில
வஞ்சியங் கொடியிடை வாமி
யுத்தமி யாறு கோடியா மாயா
வுருவென வுகந்தெழு கோடி
சுத்தவிஞ் சையதாஞ் சொரூபமா மந்த்ர
சொற்பிர காசமா யலவாய்
முத்தர்க ளுளங்கொண் டொளிர்பரஞ் சுடரே
மூடனே யாண்மதேனென் மணியே. நஉ

பவகுண மிலங்கும் பார்வளர் வினையாற்
பகர்புலன் கரணமுக் குணமோ
டவகுண மிலங்கு மவித்தையா மகழி
யமிழ்ந்துறு தருள்வெளி யார்ந்தே

தவகுண மிலங்குந் தத்துவா தீதத்
தனிப்பெருங் கருணையங் கடலுட்
சிவகுண மிலங்குஞ் சிந்மய வடிவாய்த்
திகழ்ந்திட வாண்டருள் சிவையே. நந

புலையனேன் புவிமேற் புரிந்தவெம் பழியோ
புகலொணு மலம்விழைப் புழுவேன்
கொலையனே னெனினுங் குணப்பெருந் தகையாற்
கொடுவினை கடிந்துநின் னருட்கே
நிலையனுய் நிறீஇ நீண்மறை லயமாய்
நெடியதற் போதமு மிரிந்த
தலையனுய் விளங்கத் தற்பரா னந்தந்
தந்தருள் சாமளாம் பிகையே. நச

கடையனே னுளந்தோய் கற்பகா டவியாய்
கருதருங் காமதே னுவதாய்
தடையிலா திலங்கு ஜீவசஞ் சீவி
தயாநிதி புநிதைசாம் பவியா
யடைகிடந் தெழுவெள் ளனமகிழ்ந் தோங்கு
மம்புயப் பொன்கலா வலியாய்
விடைகெழும் பரையாய் விளங்குமெண் குணியே
விழலனேன் றன்னேயேன் றருளே. நரு

கண்ணிழந் திருகால் விலங்கெனக் கலங்கி
காட்சியற் றுழலுகா தகனுய்
பெண்ணலந் தவிராப் பேதையேன் பிறவாப்
பெற்றியைப் பெற்றிலேன் பிணிதோய்
மண்ணிகழ்ந் தோங்கு சகோரப்புள் ளெனவே
மதிக்கதி ருண்டுமான் பெய்து
மெண்ணிழந் தேறு னெவ்வண முய்வே
னெளியனே னிமயகுஞ் சரியே. நசு

புலனுறுங் கரணப் பொறிவழி நடந்து
புவிநசை யளறுழன் றந்தோ
நலனுறுங் கிள்ளை யிலவுகாத் தென்ன
நண்ணிய வெண்ணமே சிவணும்
மலனுறும் பௌவக் கடல்கடந் தாங்கு
மன்னிய துறக்கமெய் துறவே
பலனுற நினது பதப்புணை கொண்டு
பரிந்துவந் தாண்டருள் புரையே. நஎ

ஆவினங் குழவி யருகணைந் திடிலங்
கார்ந்தவன் பாலமு தருத்தி
தாவியங் குருகி யார்வமீக் கூறி
தழீஇய பான்மைபோன் றிழிந்த
பாவியே னுளத்து பரிந்துகந் தருளி
பகையெலாங் கடிந்துபண் பிலகி
யோவியம் போன்று மொளிர்பெறப் புரிந்தா
ளுலகெலாம் பயின்றவுத் தமியே. நஅ

மிகையுறுந் திரிசி யப்பொரு ளனைத்து
மித்தியா ரோபித மெனவே
பகையுறு மவித்தா மலசகி தத்தாற்
படிந்தவிட் சேபம தொரீஇத்
தகையுறுங் கரண மாதிரைத் தொளிருந்
தற்பரா னந்தமா யிலங்கி
(1) நகையுற வினி னிறுவியாண் டருளாய்
நற்பரங் கருணைநா யகியே. நக

துன்னுமேழ் பவமுந் துடைத்துதற் பணத்திற்
றுலங்கிடு மானனத் திலங்கி
மன்னுமொண் பொருளே நீயென மகிழ்ந்த
மௌனகா ரணிபுராந் தகியா

---

(1) நகை=இன்பம்

யென்னுளங் கொண்ட வின்பவா ரிதியே
யிருவினை களைந்தமெய்ச் சுடரே
யுன்னரு மகண்டா காரவிண் பதியேய்ந்
துறையுமா றுகந்தரு ளுமையே. சம

இன்பமே யுருவா யியங்கியெஞ் ஞான்று
மிரவொடு பகலிலா திருகண்
ணன்புநீ ருகுப்ப வவசமுற் றேங்கி
யயர்ந்தயர்ந் தகண்டதூ வெளியி
னென்புனைந் துருகி யிரந்தழன் மெழுகா
யிருந்துன தருளமு தருந்து
மன்பருள் ளொங்கு மம்மையே நினது
அணிகெழுங் கழற்கடைக் கலமே. சக

வேறு

ஏழை யடியே னெண்பத்து
நான்கு லட்ச மெண்களிலுங்
கோழை மதியேன் கொடுவினையேன்
குறைகள் களைந்தே யருள்தந்து
மாழை மணிப்பூங் கழலிணைக்கே
வழித்தொண் டாக்கி யன்புருவாய்
வாழப் பணித்தி யம்பிகையே
வளருங் கயிலை வாழ்முதலே. சஉ

இழிந்த வுலகி னீடணையா
லிறும்மாந் தெய்த்த நாயடியேன்
கழிந்த பிணம்போற் கிடந்துனது
கழற்சே வடிக்க ணன்புருகே
னழுங்கு முடலந் தனைக்கீறே
னழலி லமிழ்த்தே னுர்கலிவா

யொழிந்த தெனவும் வீழ்த்திலனே
வுரகா பரணத் துமையவளே. சங

இணைசேர் கொங்கை வஞ்சியர்பா
டிடறுற் றுழலு மேழையலர்க்
கணைசே ரனங்கன் குறிக்கிலக்காய்க்
கலங்கி மலங்கிக் கமலத்தோன்
றுணைசேர் கரங்க டோய்ந்திலன்
றுரிசே னெனினு னின்கழலாம்
புணையாற் பவசா கரங்கடத்திப்
பொருளாக் குவையெம் பூரணியே. சச

அன்பே யுருவாய் நின்னருட்க
ணுர்வங் கொள்ளே னந்தழுத்தை
யென்பே யுருக வேத்துகிலே
னென்செய் கிற்பே னந்தோநான்
றுன்பே துணையாய்த் துளைந்துழலுந்
தொழும்பன் றனையாட் கொண்டுலவா
யின்பே பொருந்த வென்றருளா
யிமவான் பயந்த விளங்கொடியே. சஞ

செடிசே ருடலந் தனையிகழ்ந்து
சிவமா யிலங்கு நின்னடியா
ரடிசேர் பொடியென் முடியிலணிந்
தனித்த மாய விவ்வுலக
மிடிசேர் வாழ்க்கை யாக்கையினை
விழற்பெய் யமுத மெனவிடுத்துன்
னடிசேர்ந் துருக வாட்படுத்தி
யருளாய் சவுடாம் பிகையனையே. சசு

கடைபட் டொழுகுங் கடையேனுட்
கலந்து கலந்து கருணையினுன்
முடைபட் டொழுகும் புழுக்குரம்பை
முழுதுங் கடிந்து மும்மலவாய்த்
தடைபட் டொழுகாத் தற்பரமாங்
தனிபூ ரணவான் பதியிலங்கத்
தொடைபட் டொளிரும் பூங்கழலாற்
றுலங்க வருளாய் சுந்தரியே. சள

பொன்னை விழைந்தேன் புவிமுழுதும்
புகழை விழைந்தேன் புழுமலங்தாய்
மின்னை விழைந்தேன் வெகுளியெலாம்
மிகவும் விழைந்தே னின்கழற்சீர்
தன்னை விழைந்தே னிலையந்தா
தளர்ந்தேன் றளர்ந்தே னிக்கணமே
யன்னை விழைந்தே னின்னருட்கே
யார்வங் கொண்டா ளம்பிகையே. சஅ

சடையாய் வருக தமிழணங்கின்
ருயே வருக சதுரருள்வெள்
விடையாய் வருக விமலினியாம்
விபுவே வருக வெகுண்டெழுஞ்சூற்
படையாய் வருக சிந்மயமாம்
பரையே வருக பசுபதியுள்
ளுடையாய் வருக வுபயபதாம்
புயநான் சூழ வருகுகவே. சக

அன்பே வருக வாருயிர்கட்
குயிரே வருக வடியருளத்
தின்பே வருக வீடணையெற்
கிர்ப்பாய் வருக நிருதிவரு

முன்பே வருக மூவர்தொழு
முதல்வீ வருக மூடனுளத்
துன்பே யறுப்பான் வருகவருட்
டீயாய் வருக வருகுகவே. நும

அனமே வருக வருள்விளக்கு
மமுதே வருக வாரணம்பே
ணினமே வருக யிபமுவக்கு
மீசீ வருக யெண்குணமாங்
கனமே வருக கவுணியற்குக்
கலசஞ் சுரந்தோய் வருகமல
மனமே மடிப்பான் வருகமுக்கண்
மாதே மகிழ்ந்து வருகுகவே. நுக

மொத்தம் கூடியது நுஅம

முற்றிற்று.

சத்திபூங்கழலே நத்திவாழ்குதுமே.

சர்வம் சிவமயம்.

ஓம்

தத்ஸத்

ஸ்ரீ சற்குரூப்யோ நம:

ஸ்ரீ ராஜராஜேஸ்பரியம்பிகை பதிகம்

தாய்தனினு மினியவான் கருணைப்பிர வாகநற்
குருவென வெழுந் தணைத்தே
தரணியெழு வெம்பிறவி பிணியற வொழித்துமோர்
சமரச சுபாப மருளாய்
வேய்தனினும் பசுமையெண் டோளிமுக் கட்பரனும்
விண்பிறையு மேத்து திலகி
விமலப்ப சுங்கிள்ளை பொற்கரமி லங்கிமறை
விழைவோ டிறைஞ்சி யேத்த
சேய்தனினுந் தண்ணருள் கொழிக்குனற் பத்தியுந்
சேர்ந்தவயி ராக மோங்குஞ்
செழியநற் கிஞ்சுக மெனுமகிழ்ந் தீர்ங்கமலத்
திருவதன மொற்றி மகிழுந்
தீயினுங் கொடியதாம் வடவையினை வெல்லுமழு
திரிசூல பாணி யெனுமா
திவ்யமங் களமிலகு ராஜரா ஜேஸ்பரீ
திகழ் நடன சிங்காரியே. க

தேங்காத பேரின்ப வெள்ளந் திழைப்பவே
சீர்கொள்பஞ் சாக்க ரமெழுந்
திருக்கொளிரு மமுதங் கொடுத்தருளி வினையுலவு
(1) திரிபுர மெரித்த ருளுவாய்
தூங்காத நித்தியா னந்தசா கரமிதழு
துவாதசாந் தம்மெ னுலகிற்
றுரியநிலை யாமனையின் மிளிருதப முனிவருளந்
தோயுமதி பருதி நடுவின்

---

(1) திரிபுரம் = தூல சூக்கும காரணவுடல

வாங்காத ஞானபூ ரணவெளி யொளிக்குளே
வகாரி றீங்காரி யாகி
மகிழுமா மதுரையெனு நகராளு செழியர்கோன்
மகவா யிலங்கி புலக
மேங்காம லெண்டிசை ஜயங்கொண்டு கெம்பீர
விமாசல மெழுந்த ருளிபெம்
மிறைவனே மணங்கொண்ட ராஜரா ஜேஸ்பரீ
யெண்குண மிணங்கு மணியே. உ

சித்ரமதி லெழுதுமொரு தீபமென வோங்கியே
சிந்மயா னந்த மடிவின்
றிரிபகல கரதலா மலைகமென வொளிரவுஞ்
சிறியனே புவந் தாளுவா
யெத்திரம துடையவரு மேத்துமறு சமயமா
யேய்ந்தல்ல வாகி யிபமா
செழில்பிரண வத்திலகி யின்பவடி வெய்தியே
யெண்குண மிலங்கி விபுவாய்
குத்திரத் தவர்களுள முலவா தகோசர
குணுதீத நிபுண மணியாய்
கொடுவினை மடிக்குபவ ரோகசஞ் சீவியாய்க்
குலவியிம வானு மகிழ
முத்திரத் தவர்கடொழு முத்திப்ப திக்கரசி
மும்முலைப் பிராட்டி யெனவே
யொளிர்மங்க ளந்திகழு ராஜரா ஜேஸ்பரீ
புகரத் திலங்கு முமையே. ங

ஞானமதி நதியூறு மமுதப்ர வாகமதை
நண்ணியார்(1)ந் திரவு பகலாய்
நடுவணை தடத்தலக் கணமேவி யாரோப
நவிலுமத் யாச முதலா

(1) ஆர்ந்து=புசித்து

ஸ்ரீ ராஜராஜேஸ்பரியம்பிகை பதிகம்

மீனமதி யேனுளம தேதயாது பிர்மமா
மின்பவநு பூதி தந்தே
யிதையாம் பரத்தெளிய னுர்ந்தமல மாயில
கிலச்சிய மிலங்க வருளாய்
நானமொடு புனுகுசவ் வாதிலகு பூங்கழல்கொள்
ஞானவா னந்த மயிலே
நகுமணி மிகுஞ்சவுட மொளிருகெம் பீரியாய்
நமனுயிர் கடிந்து மதிதாய்
வானமிளிர் கயிலைக்கு கந்தனதாரு பிடியாகி
வண்டமி ழலங்கல் வேய்ந்தே
மகிழ்மங்க ளாம்பிகா ராஜரா ஜேஸ்பரீ
மகமேரு வில்லி யுமையே.

அல்லாரு மந்தகா ரத்திமிர மணுகாது
மருண்ஞான பாநு வாகி
யருள்வெளி யெழுந்தருளி யகரங் கடந்தொளிசெய்
யனுதியா மமுத கலையா
யெல்லாரு முக்கட் கரும்பா யிலங்கியே
யெல்லாஞ்செய் வல்ல சித்தா
யெளியனி னுளங்கொண்டு கருணையங் கடறந்து
மேய்ந்தமிடி மடிய வருளாய்
வில்லாரு தந்தமீ ராயிரம தேய்ந்துவான்
மிளிருமயி ராவ ணத்தே
விகசிதமொ டாரோக ணித்தைதந்து, தொழிலையும்
விதிவழு விலா துஞற்று
மல்லாரு நித்யகலி யாணகுண மாதங்கி
மந்த்ரஸ்வ ரூபி யனையாய்
மகிழ்மங்க ளாம்பிகா ராஜரா ஜேஸ்பரீ
மகமாயி கௌரி யுமையே.

சார்ந்தெழுசிற் ககனமதி லொளிருநிற் சலமிலகு
தற்பரா னந்த மயமாய்
சனனமி லசங்கமொடு சட்குண வதீதமாஞ்
சமரச சமாதி யருள்வா
ரூர்ந்தெளிய னுளமேவு குறைவெலா னிறைவாக்
ககண்டிதா கார வறிவா
யருளுரு விலங்கிபர வெளிவளர கருணைகூ
ரருமறைச் சிலம் பலம்ப
வூர்ந்தருளி திருஞான சம்பந்த னுக்கமுத
மூட்டிப் புரந்து மோன
வுகரத் தெழுந்தொளிரு முத்தமி யுதாரணீ
யுலவுமன மாதி யுரையுந்
தீர்ந்தநிலை யோர்க்கமுத சஞ்சீவி யாயிலகு
திவ்யகல் யாண குணியாய்த்
திகழ்மங்க ளாம்பிகா ராஜரா ஜேஸ்பரீ
சிற்குண னந்த மணியே. சூ

நின்னுணை கொண்டெளியன் விண்ணப்ப மொன்றுசொல
நின்றனன் நேர்மை யுறவே
நின்மல துவாதசாந் தம்மென்னு மவனிமிசை
நிராலம்ப மோன குடிலும்
மன்னுறவெவ் வினைவரினு மாய்த்தொளிர் நிராசையா
மனவியு மதற் கணியதா
மகவென்ற பத்திவை ராகமொடு ஞானமு
மகிழ்ந்தருளி யவைக ளுய்வா
னுன்னுது முரையாது முலவாது மோர்மையா
யுன்பதாம் புயம தோர்ந்தே
யுருகிவிழி பொழியவா னந்தமெழு வான்கருணை
யொண்பொருளு கந்தருளு வாய்

பொன்னுரு செங்கமலை போற்றிமகிழ் கெம்பீரி
புங்கவி புராந்தகி யெனும்
புகழ்மங்க ளாம்பிகா ராஜரா ஜேஸ்பரீ
பூரணை னந்த மணியே. எ

தக்கார் தகையிலா ரெனநாளு மேகொளா
சச்சிதா னந்த வடிவாம்
சருவமுஞ் சிந்மயம தாயுள்கி சாந்தியாய்
சமரச மடைந்து னின்றுள்
புக்காரின் பக்கனனி குற்றேவல் செய்துறும்
புநிதர்பணி யாற்ற வருளி
புன்மையனை நின்கருணை வாரிதி படிந்தெளிர
போற்றிவினை மாற்றி யருளா
யக்கார் மதிச்சடில நக்கனி னிடத்துலவு
மபிராம வல்லி யெனுமோ
ராசிற் பசுங்கிள்ளை யன்னமே யம்புயமெ
லாதன மிலங்கு மனையா
யிக்கார் செழுங்கிளவி யேய்ந்தமதி யானனமொண்
ணெழிலார் சவுந்த ரியெனு
மெண்மங்க ளங்குலவு ராஜரா ஜேஸ்பரீ
யிமவான் பயின்ற வுமையே. அ

பாவபுண் ணியமென்னு மிருவினைப் பூதங்கள்
பற்றிப் பிடித் தாற்றப்
படியுபண் பிலிகள்கை கோக்காது சாந்தரின்
பதுமபத முடிது ளக்கி
ஜீவநிலை மாய்த்துநிற் சீவநிலை யெற்கருளி
சிற்றம் பலத் திருத்தி
சிகரங் கடந்தெளிரு சிந்மய வதீதமாஞ்
சிவானந்த மிலக வருளா

யோவிய மெனத்தேர்ந்த தவராஜ சிங்கத்தி
னுள்ளத் தெழுந்து லாவி
யொளிருவா மதிஞான பாநுவா யோங்கார
வுதாரகுண மேரு முடிமேற்
றேவதரு வாகியு மருட்கனி பழுத்தொழுகத்
தெள்ளமுத வாரி யெனவே
திகழ்மங்க ளாட்பிகா ராஜரா ஜேஸ்பரீ
சிமயத் தெழுந்த முகிலே. கூ

வாக்குமன மணுகாத பூரணத் தொட்டிலின்
வைத்துவிளை யாடல் செய்தே
வளர்கருணை யாமமு தருத்திநித் யானந்த
மருவிகண் வளர வருளாய்
போக்குவர வில்லாத மோனப் பதிக்கரசி
புங்கவ ரிறைஞ்சி யேத்தும்
பொற்புறு சுமங்கலி புரந்தரி நிரந்தரீ
புவனங் கடந்த முதல்வன்
தேக்குபர மானந்த நல்வி நுந் தாயெழுந்
தேவியே ஜீவ மணியே
தெய்வங்க ளேத்துகெம் பீரிகிர் பாகரீ
தெருண்மிளிரு சிவ சங்கரீ
நோக்குநர்க ளுள்விழியி னுண்ணுணர்வி னுண்ணிதாய்
நுவலரு னுணுக்க மலரும்
நுட்பமிகு ஜோதியாம் ராஜரா ஜேஸ்பரீ
(1)நோன்பிலொளிர் தெய்வ மணியே. கஂ

மொத்தம் கூடியது ருகூ

முற்றிற்று.

மங்களேஸ்பரிதாட் பங்கயம் பணிவாம்
சர்வம் சிங்மயம்.

---

(1) நோன்பு = தவம்

ஓம்:

தத்ஸத்.

ஸ்ரீ சற்குரூப்யோ நம:

மேனன் மணிக் கண்ணி

பொன்னம் மேனன்மணியாள் பூங்கழலைப் போற்றிசெய
மின்னரி பானனின் விரைமலர்த்தாள் காப்பாமே.
சீராருஞ் செல்வச் சிவஞான பூமியுறக்
காரா ரெளியேனைக் காத்தாண் மேனன்மணியே.
மின்போன்ற பொய்யுலகின் மிகுஜனனக் காடுழன்ரே
ரென்போன்ரு ருண்டோ யியம்பாய் மேனன்மணியே.
அன்புமலர்க் கொண்டுன்ரு ளர்ச்சித்துப் பூசனைசெய்
தென்புருகி நிற்கவரு ளீய்ந்தாண் மேனன்மணியே.
கன்மமெனுங் கட்டறுத்துன் கருணையமு தையருத்தி
நின்மயம தாக்கியென் னுண்ணின்ரு ண்மேனன்மணியே. நு
ஓங்காரத் துள்ளொளியா யொளிருஞ்சிற் போதமுறப்
பாங்கா வெளியேனைப் பரிந்தாண் மேனன்மணியே.
ஆங்கார வாணவப்பே யவிர்ந்தசுடு காடழித்தே
றீங்கார மாகியெழுந் தேன்ரு ண்மேனன்மணியே.
சிதாகாச வேதிகையிற் சேர்ந்தெதாளிரு பூங்கழலின்
றதாகார மாயிலங்கத் தந்தாண் மேனன்மணியே.
எட்டிரண்டு மேயறியா யேழையடி யேன்முடிமேற்
ரெட்டிரண்டு பூங்கழலாற் ரெகுத்தாண் மேனன்மணியே.
காமாந்த காரவினை கடிந்துழக்கக் கல்வியில்லே
னேமாந் தழுங்கலுற லெழிலோ மேனன்மணியே. கo
கரணப் பொறிபுலனைக் காய்ந்துவினை யால்வளர்ந்த
மரணப் பிறப்பறுத்து மகிழ்ந்தாண் மேனன்மணியே.

ஆறுதத்து வத்தா லவிர்ந்த குரம்பையினை
வேறுபிரிக் கில்வெட்ட வெளியாம் மலேஞன்மணியே.
சூழ்ந்த தமர்சுதர்கள் சோதரர்கள் பொன்மனையென்
ஞழ்ந்த வவலனைவந் தாள்வாய் மலேஞன்மணியே.
கைப்பொருளைத் தேதடியுழற் கடியவினைக் காதகனின்
மெய்ப்பொருளைத் தேதடவுமே விரைந்தாண் மலேஞன்மணியே.
பரமவித்தை யாய்ந்தறியாப் பண்பிலினின் றண்ணருளால்
பிரமவித்தை யேபயிலப் பேணுப் மலேஞன்மணியே. கரு
உலகனைத்து மோர்குடைக்கீ ழோச்சுமர சேயொழிந்து
நிலைகுலைந்து வேற்றுருவாய் நிற்பார் மலேஞன்மணியே.
அவ்வினையெல் லாமறிந்து மார்வமுற நாயடியேன்
வெவ்வினையி லாழ்ந்துமிக மெலிந்தேதன் மலேஞன்மணியே.
பொய்யுலக வாழ்க்கையினிற் பொருந்தாது நின்னருளார்
மெய்யுலக வாழ்க்கையுற விழைந்தேதன் மலேஞன்மணியே.
ஈனக் குரம்பையினை யெடுத்தெடுத்தே யெய்த்தவெனை
யேனக் குருளையென யேன்றுண் மலேஞன்மணியே.
ஆசாபி சாசையுரு தழித்தே யருளுருவாம்
பேசாப் பெருமைதந்தாள் பெட்பார் மலேஞன்மணியே. உ0
காமக் கடல்கடந்தே கரையாங் கழல்காண்பா
ணுமப் புணைகொண்டே நடத்தாய் மலேஞன்மணியே.
ஆணவக்கா டார்ந்தவினை யாம்விலங்கை நின்கருணைப்
பாணந் தொடுத்தருளிப் பரிந்தாண் மலேஞன்மணியே.
கணக்கறியாப் பேதையரின் கைகோக்கா துன்னருளி
னிணக்கமுறப் பேயனையு மேன்றுண் மலேஞன்மணியே.
பத்தி வலைக்குள்ளே படும்பதுமப் பாதமதான்
முத்திதர மூடனுள மோர்ந்தாண் மலேஞன்மணியே.
தற்போத மாய்ந்தே ததாகார மாயிலங்க
நற்போதந் தந்துளத்து ணடித்தாண் மலேஞன்மணியே. உரு
தத்துவப்பே யுள்ளே தலைவிரித்திங் காடாது
சித்துருவா யோங்கவருட் செய்வாய் மலேஞன்மணியே.

அவமா முலகவினைக் காற்று வடியேனைச்
சிவமாம் பதுமவடி சேர்த்தாண் மனேன்மணியே.
நிருவிகற்ப மெய்திநித்ய நிமலமிகப் போற்றிமகிழ்ந்
தொருவிகற்ப மின்றியெனை யுவந்தாண் மனேன்மணியே.
கன்றுதீ தென்றுளத்து நாடாதங் கோர்சுழினை
நின்று நிராமயத்தி னிறுவாய் மனேன்மணியே.
பித்திகையின் சித்திரமாம் பேருலகி னுட்டமற்று
முத்திகைக்கொண் டின்பமுற மூட்டாய் மனேன்மணியே.
எண்குணந்தா யுன்வடிவே யெவ்வடிவு மென்றறியா [நo
மண்குணந்தா யேழைகலி மாற்றுய் மனேன்மணியே.
விண்ணிலவுந் தெய்வ விளக்கினொளி யெந்தனுளக்
கண்ணிலமைந் தின்பமுறக் காத்தாண் மனேன்மணியே.
சிற்சொருபங் கொண்டருளி சிதாகாசத் துள்ளொளிரு
நிற்சொருபந் தந்தென்னு ணிற்பாய் மனேன்மணியே.
வானமரர் வாழ்த்த வயங்கும் வகாரமதின்
ஞானவழு தீய்ந்தருளை காட்டாய் மனேன்மணியே.
அகமிலங்குஞ் (1)சிற்கரிமீ தம்பாரி கொண்டேக
சகமிலங்கு நன்னெறியைத் தந்தாண் மனேன்மணியே. நடு
நாடிச்சி னந்தலறு நாளு னெனுமம்விலங்கை
வேடிச்சி யாயெழுந்தே வீய்த்தாண் மனேன்மணியே.
ஆக்கைவந்த நாண்முதலா யலட்டுனெஞ்ச வஞ்சனையைப்
போக்கிப் புரந்தனையாள் பொற்பே மனேன்மணியே.
கண்டனவெ லாம்பொயெனக் கண்டிருந்துங் காதலித்திவ்
வண்டமெலா மாள்வா னலந்தே தன் மனேன்மணியே.
கட்செவிபோன் றேயுறைந்துன் கருணையமு தையருந்த
வுட்செவியா தியைபீர்த் துவந்தாண் மனேன்மணியே.
பராபரமா யாவும் பரிந்துணர்ந்து நானதுவாய்
தராதலமெ லாமிலங்கத் தந்தாண் மனேன்மணியே. சo
காமக்கு ரோதக் களஞ்சியர்கைக் கோக்காதுன்
வாமப் பெருங்கருணை வழங்காய் மனேன்மணியே.

(1) சிற்கரி=சிகாரசகிதப் பிரணவமாகிபம்

அகந்திருத்தி யம்பரத்தே யருள்வெளியி லாரமலர்
முகந்திருத்தி யாகபணி முடிக்கேன் மனேன்மணியே.
நானெனதெ னும்மூமல நாட்டமெலாந் தீரவரு
டானெனது மெய்யெனவுந் தந்தாண் மனேன்மணியே.
கற்பனெயெ லாங்கடந்த ககனவெளிக் கப்பாலோர்
விற்பனமா மோனமுற விழைந்தாண் மனேன்மணியே.
காமனம்பிற் குள்ளாகி கமலன்கைக் குள்ளாகி
யேமன்வலைக் குள்ளாகி யிழிந்தேதன் மனேன்மணியே. சரு
மாசற்ற மாமறையு மாலயனுங் காணுத
ஆசற்ற பூரணத்தே யமைத்தாண் மனேன்மணியே.
சிந்தா மணிசிவணத் திகழ்ந்துனரு ளேபிறங்க
வந்தா தரித்தருளென் வாழ்வே மனேன்மணியே.
ஓரின்ப துன்பமிலா துலகங் கடந்தபரன்
பேரின்ப வெள்ளப் பெருக்கே மனேன்மணியே.
உள்ளத் தெழுந்தவுயி ரோவியமாய் நின்றருளிக்
கள்ளப் புலக்குரம்பைக் கடிந்தாண் மனேன்மணியே.
அற்ப நினைப்புமறப் பார்ந்தவினை யற்றருளார்
கற்பகம்போன் றென்னுட் கனிந்தாண் மனேன்மணியே. நும
தெத்த படமானுஞ் செகவா சனைமடித்தா
ளுத்தமர்க ளுள்ளத் துறவாம் மனேன்மணியே.
மத்தமதிச் செஞ்சடையோன் வாமபா கத்தமர்ந்த
வுத்தமிநின் சேயேனை யுகந்தாண் மனேன்மணியே.
களங்கமலி யென்னிதையங் கதித்துக்குதித் தோடாமே
யுளங்குளிர வோவியம்போன் றுகந்தாண் மனேன்மணியே.
நஞ்சுண்ட மீனகி நலிந்துறுமென் வன்கலியைப்
பஞ்சுண்ட வெவ்வழல்போல் பணித்தாண் மனேன்மணியே.
செம்மதிப்பா லுண்டே சிறக்கவெளி யேனுளத்து
நிம்மதியா யோங்கி நிலவாய் மனேன்மணியே. நரு
சிரமாலை தாங்குமெழிற் சிவையேநின் சேயேனின்
(1) புரமாலை வாங்கிமிகப் போற்றாய் மனேன்மணியே.

(1) புரமாலை=பிறவிமயக்கம்

நக்கனுட னம்பலத்தே நடித்துகந்த நாரியுடற்
புக்கமுந்தா வண்ணம் புரிந்தாண் மனேன்மணியே.
நாதாந்தத் தூவெளியில் நடனச் சிலம்பொலிசெய்
பாதாம் புயமுடிமேற் பதித்தாண் மனேன்மணியே.
தக்கன் றலைதடிந்த தயாநிதியா மெம்மிறையுட்
புக்கவுயி ரோவியம்போற் பொலிந்தாண் மனேன்மணியே.
சாடணையில் சாகரஞ்சூழ் தாரணியி னுபடியே
னேடணையில் சாராதே யென்றுண் மனேன்மணியே. கூo
புரந்தரனு மாலயனும் போற்றுமுன தம்புயத்தா
ணிரந்தரமா யென்னுண் ணிறுவாய் மனேன்மணியே.
அம்புவியி லின்பமெனு மாறுத கன்மமிகும்
வெம்பிறவித் துன்பமெலாம் வீய்த்தாண் மனேன்மணியே.
பதைக்க வுயிர்பறித்தே பகிர்ந்தூன்றின் னற்பருடல்
சிதைக்க நமன்வரிலென் செய்வார் மனேன்மணியே.
பிறன்மனைபெண் பேதையரைப் பேரழற்பெண் ணைத்தழுவ
வறன்செயிலோ வென்செய்வா ரந்தோ மனேன்மணியே.
கள்ளுண் டுயிர்வாழுங் காதகர்கள் காலன்கையாற்
றள்ளுண்டு மேழ்நிரையத் தாழ்வார் மனேன்மணியே. கூரு
ஆங்கார மாம்வடவை யமிழ்ந்தழுங்கு வோரையம்மன்
றீங்குறவே செக்கினிலே சிதைப்பான் மனேன்மணியே.
மிடியார் கவர்களவு மிகவிழைந்தோர் நமனிருப்புத்
தடியாற் பொடியாகித் தவிப்பார் மனேன்மணியே.
எல்லா மிறந்தவிடத் தேதகமாய் நின்றிருளிரும்
வல்லாயென் னுள்ளிருளை மாய்த்தாண் மனேன்மணியே.
கல்லா வறிவிலிவெங் கையறவு மிக்கிலங்கும்
பொல்லாத சேயெனினும் போற்றுப் மனேன்மணியே.
பஞ்சவிஷப் பாவை படிந்தபடி றேனெனினுஞ்
செஞ்சொன்மலர் சேவடியிற் சேர்த்தாண் மனேன்மணியே.
எங்குமே தாணு மேகபரி பூரணிநின் [எo
றுங்கவனப் பெவ்வாறு துதிப்பேன் மனேன்மணியே.

அம்புலியோ டக்கறுகொண் ணூறுகொன்றை கொக்கிறகு
வெம்புலித்தோல் பூண்டாடும் விமலாய் மனேன்மணியே.
அந்தரத்தின் மாலயனு லாற்றவிய லாதகடுக்
கந்தரத்திற் கொண்டருளுங் கண்ணே மனேன்மணியே.
அத்தியுரி போர்த்துப்பொன் னம்பலத்தே யாடுமருள்
சத்தி தமியனேயாள் தாயே மனேன்மணியே.
பணமிலங்கும் பாம்பணிந்தும் பத்தருளத் தோங்கியுமெண்
குணமிலங்கு ஞானப்பூங் கொம்பே மனேன்மணியே. எரு
திரிசூல மான்மழுசீர் சிலம்புதுடி சேர்கரத்தே தா
யொருசூலும் நானணுகா துவந்தாண் மனேன்மணியே.
இமயமா ரும்பிடியே யின்பவுரு வெய்திடவிச்
சமயமா றுந்தகைத்தா டாயே மனேன்மணியே.
பரோக்ஷ மதையிகந்தே பாழுவத்தை யைந்தவித்த
பரோக்ஷமதைத் தந்தருளெந் தாயே மனேன்மணியே.
தொண்டனிவ னல்லவென்று துறப்பினுநின் றூயவருள்
வண்டமிழ்கொள் பூந்தாளை மறவேன் மனேன்மணியே.
ஞானக்க லாபமயில் ஞாதுருவே யங்களுறு
மோனவழு தேய்ந்தருத்தி யுவந்தாண் மனேன்மணியே. அ
காரணமாங் காரியம்புன் கற்பனைக்க தீதமெழும்
பூரணமாந் தொட்டிலினுட் போற்றுப் மனேன்மணியே.
அருடதும்புங் கண்மலரா ரம்புலிநா ணனனியாய்
மருடதும்புஞ் சேயெனினு மகிழ்ந்தாண் மனேன்மணியே.
சங்கற்ப மார்விகற்பந் தழையுமனக் காட்டையெரித்
திங்கற்ப முமெனையு மேன்றுண் மனேன்மணியே.
ஐயெழு தத்துவத்திற் கப்பா லதீதமதா
மெய்யே யுருட்குடிலை விழைந்தீ மனேன்மணியே.
காலங்கண் மூன்றுங் கடந்தபரி பூரணத்தின்
ஞாலங்க டோன்றுதுண் ணூட்டாய் மனேன்மணியே. அரு
முகக்கண் டிறந்துலகின் மூவே டணைமுயங்கா
தகக்கண் டிறந்தருடந் தாள்வாய் மனேன்மணியே.

தற்போதந் கொண்டே தலைகுலைந்து தாழாமே
நிற்போதந் தந்தா ணிமலாய் மனேன்மணியே.
பச்சை நிறத்தி பரைச்சி பருப்பதத்தி
கொச்சையுளத் தேன்குறையைக் கொண்டாண் மனேன்
தட்டுண்டாழ்ந் தேங்கித் தலைகுலைந்து மாழாமே [மணியே.
யிட்டுண்டார் செல்வம்போ லியக்காய் மனேன்மணியே.
தாளாண்மை யாலுஞற்றுந் தவஞானப் பைங்கதிரார்
வேளாண்மை யாற்றிடவே விழைந்தாண் மனேன்மணியே.
வலைச்சி புலைச்சிப்பொன் வரைசிலைச்சி வான்மலைச்சி [கூo
கலைச்சி யிலட்சிமியாய்க் காத்தாண் மனேன்மணியே.
அத்துவித மோங்கு மகண்டபரி பூரணத்தில்
சித்துருவா யோங்கத் திளைத்தாண் மனேன்மணியே.
ஆகமுள போழ்தே யகமிறக்க வுன்னருளின்
யோக வழுதுணவே புணர்த்தாய் மனேன்மணியே.
பச்சை வயிரமொளிர் பவளத் தரளமென
விச்சையுடன் சிற்குடிலி னியங்காய் மனேன்மணியே.
பொய்வேடங் கொண்டே பொருள்விழையும் பூரியன்நின்
மெய்வேடங் கொண்டிடவே விளக்காய் மனேன்மணியே.கூரு
சத்தநிலை யைக்கடந்த சதானந்த மோனநெறி
பெத்தநிலை யேனுறவும் பேணுய் மனேன்மணியே.
வானிறந்து மண்ணிறந்து மற்றுளவெ லாமிறந்து
(1) ஞனிறந்து நிற்பதெந்த நாளோ மனேன்மணியே.
எவ்வடிவுந் தன்வடிவா யிலங்கவெளி யேனுளத்தே
யவ்வடிவா யார்ந்தருளி யாள்வாய் மனேன்மணியே.
துஞ்சாப் பிறவியெலாந் துஞ்சும் படிதுணித்தே
பஞ்சாக் கரவாளாற் பரிந்தாண் மனேன்மணியே.
பின்னபின்ன மாமலற்றிற் பிணங்காதுன் பேரருளாம்
நன்னயச்சீ ரிக்கணமே நல்காய் மனேன்மணியே. கoo

---

(1) நான்=ஆணவமலம்

சத்தசத்துங் காணு சமரசவ கோசரத்தே
சித்தசுத்த முத்தநிலை சேர்த்தாண் மனேன்மணியே.
சகடேயும் வன்மனது தாழ்ந்திரண்டு கண்ணிழந்த
பகடேயும் பாவியைக்கண் பார்த்தாண் மனேன்மணியே.
கற்பகம்போன் றென்னுளத்தே கரவா தருளுருவாய்
சொற்பனமா வன்கலியைத் தொலைத்தாண் மனேன்
[மணியே.
இடியுண்ட பாந்தளென வேமனத்தா லெய்த்திழைத்து
மிடிகொண்ட வீணனெனை விழைந்தாண் மனேன்மணியே.
ஆக்கியளித் தழித்துடைக்கு மாதிமூ வர்க்கரிய
தேக்குவிருந் தாமமுதத் தெளிவே மனேன்மணியே. கo9
போக்குவர வாதிவிழைப் பொறிபுலனுஞ் சுட்டொழித்து
வாக்குமன மும்மிறந்தார் வாழ்வே மனேன்மணியே.
திரிபுடியு மேதிரிந்து தியக்கமறுத் தொண்கழலி
னிருபிடியாய் நிற்பதென்றே வுரையாய் மனேன்மணியே.
மனக்கவலை மாய்த்துனருண் மலரடியென் சென்னியுற
நினக்கபய மாவதென்றே நிகழ்த்தாய் மனேன்மணியே.
அல்லும் பகலுங்க ணம்பொழுக நின்கழலைப்
புல்லுமன்ப தென்றெளிரும் புகலாய் மனேன்மணியே.
சர்வேந் திரியாமி சம்பூ ரணிதொழும்பன்
கர்வேந் திரியாதி களைந்தாண் மனேன்மணியே. ககo
ஆர்ந்த மைத்திர் யாதியெலா மழிந்தவத்வை தானந்தந்
தோய்ந்தலட்சி யத்திலென்றே தொகுப்பாய் மனேன்
[மணியே.
சாதனங்க ணுன்கவிழ்ந்தே தற்போத மாண்டுமெணண்
ணுதனங்க ளாழ்வதென்றே வருளாய் மனேன்மணியே.
பிரஞ்ஞானம் பிர்மமெனும் பேரின்ப வெள்ளமெழும்
பரஞ்ஞான மேவலென்றே பகர்வாய் மனேன்மணியே.
அயமான்மா பிர்மமெனு மகண்டபரி பூரணத்தின்
சுயமாஞ்சொ ரூபமென்றே தொகுப்பாய் மனேன்மணியே.

சர்வமுஞ் சிந்மயமாச் சார்ந்துருகி யின்புருவாய்
கர்வமற வாழ்வதென்றே கழறுய் மனேன்மணியே. ககரு
சிவோகமெனப் பாவித்தே சிதானந்தம் பெற்றுயர்ந்து
தவோபலங்கொண் டென்றே தரிப்பேன் மனேன்மணியே.
அகம்பிர்மா சிமியெனவு மானந்த மோனமெய்தி
சுகம்பிர்ம மாகியென்றே சுகிப்பேன் மனேன்மணியே.
தத்வமசி யென்னுமந்த தற்பரத்தின் சிற்பொருளா
யத்விதம தாவதென்றே வருளாய் மனேன்மணியே.
பரானந்த தேவதருப் பழமருந்தி பண்பிலெடு
நிராலம்ப மேவியென்றே நிற்பேன் மனேன்மணியே.
வன்மலமா ராவரண மவித்தைதவகை மாண்டருளா
னின்மலமாய் நிற்பதென்றே நிகழ்த்தாய் மனேன்மணியே.

[கஉo

விரோதாதி வன்குணங்கள் விழைந்துவினை மெய்விளக்குந்
திரோதாதி தீய்வதென்றே தெரித்தாண் மனேன்மணியே.
எழுவகைத்தோற் றத்துறினு மீர்ங்கமல மென்கழற்கே
யழுதழுது நிற்பதென்றே வருளாய் மனேன்மணியே.
பீஜா க்ஷரத்திலங்கும் பிஞ்ஞகினின் பெய்கழற்கே
பூஜாதி செய்கிலனைப் போற்றுய் மனேன்மணியே.
விண்டலந்தோ யின்னமிழ்தே விழைந்திறைஞ்சுந் தெய்வ

[வருள்

தண்டமிழாம் பாவலங்கற் றரித்தாண் மனேன்மணியே.
தாயாகித் தந்தையதாய் தடுத்தாண்ட தற்பரையாந்
தூயாள் மனேன்மணியாள் துணைமலர்த்தாள் வாழியவே.

[கஉரு

மொத்தம் கூடியது எகரு

முற்றிற்று.

மனேன்மணி பூங்கழன். மனேவெளி இருத்துவாம்
சர்வம் சிந்மயம்.

ஓம்:

தத்ஸத்.

ஸ்ரீ சற்குரூப்யோ நமஃ:

நெஞ்சோடிரங்கல்.

அகரமெனுந் தத்துவங்கட் காதிமன திற்கறிவு
பகரவெழிற பிரணவத்தோன் பதாம்புயமுங் காப்பாமே.
தரணியென்சேய் விசேஷ்ப முக்குணியாந் தாயிலன்றே
பரிணமித்த தென்பதனை பயின்றிலையோ நெஞ்சகமே.
அம்மாயைக் குள்ளா யழுங்காதத் வீதமதாய்
சும்மா யிருந்தருளால் சுகிப்பாயென் னெஞ்சகமே.
திரிகுணமாம் வையமெலாந் தீய்ந்தொழியு மென்றுன்னி
திரிகுணங்க ளற்றுள்ளே தெளிந்துணர்வாய் நெஞ்சகமே.
மண்ணுசை கொண்டே மடிந்துமண்ணிற் கேயிரையாய்ப்
பெண்ணுசை கொண்டுபெரும் பித்தானுய் நெஞ்சகமே. நு
புதல்வ ரெனும் பொறியாற் புக்கழுந்தி சற்குருவாம்
முதல்வன் பதமலரின் முயங்கிலையே நெஞ்சகமே.
கைப்பொருளாம் புன்னசையாற் கையறவின் மிக்குழன்றே
மெய்ப்பொருளாஞ் சிற்குடிலை மேவுகிலாய் நெஞ்சகமே.
மூவே டணையொருவி முக்கட் குருபரனுந்
தேவாதி தேவனையுட் டெரிந்திலையே நெஞ்சகமே.
கண்ட வடிவனைத்துங் கானனீ ராய்மடிந்து
கொண்டதையு நீயறிந்து கொண்டிலையோ நெஞ்சகமே.
தந்தைதாய் சோதரராந் தளைகளைந்தே தண்ணருளால்
முந்தை வினைமுடிப்பான் முயங்கிலையே நெஞ்சகமே. கo
தமருறவோர் வெம்பகைஞர் சார்பகற்றி தற்பரமா
யமருமுணர் வாகியின்ப மடைந்திலையே நெஞ்சகமே.

பரந்தபுகழ் செல்வமெலாம் பறந்தோடக் கண்டிருந்தும்
மிரந்திரந்துஞ் சென்றபொருட் கேக்கமுற்றுய் நெஞ்சகமே.
சிற்றின்பங் கொண்டழுங்கி சிந்மயவா னந்தவருட்
பெற்றின்பங் கொண்டிலவீண் பேதமுற்றுய் நெஞ்சகமே.
மாகமார் மாளிகையு மாமேவந்தர் மாநிலமுந்
தேகமார் போகமெலாந் தீவதையோர் நெஞ்சகமே.
காண்பானுங் காட்சியொடு காணப் படும்பொருளும்
வீண்பேதத் தோற்றமென்றே விளங்கிலையோ நெஞ்சகமே.
கற்பகா லத்திருந்தே காட்சியருள் சித்தர்குழாஞ் [கநி
சொற்பனம்போ லாவதையுஞ் சூழ்ந்தறிவாய் நெஞ்சகமே.
தத்துவமா றைங்கோசந் தழைத்தவறு விகாரமெலாம்
நத்துமுடற் பொய்யுறவை நம்பினைந்தாய் நெஞ்சகமே.
குரம்பையொடு மிப்புவனங் குதர்க்கங் களைந்தருளின் [மே.
வரம்பையுளங் கொண்டதுவாய் வாழ்வதென்றே நெஞ்சக
பொய்ப்பொருளின் புன்னசையாற் பொய்வேடங் காட்டி [யந்த
மெய்ப்பொருளி லன்பிலதாய் மெலிந்தனையே நெஞ்சகமே.
சற்குருவின் ருள்பணிந்தே சதுர்ப்பணிசெய் தின்னருளாற்
பொற்புறுசிற் பூரணத்தே பொலிந்தொளிர்வாய் நெஞ்சக
வழிகாட்டி யென்னுமவர் வாய்மலர்ந்த சூட்சியிரு [மே. உ0
விழிகோட்டி யுள்விழியால் விளங்கிலையே நெஞ்சகமே.
வேட்டுவத்தின் செய்கையதாய் விளக்குங் குருபரனர்
காட்டுங் கரமலர்க்கே கைகுவிப்பாய் நெஞ்சகமே.
ஆமையியல் போன்றவுளத் தையன் குருபரனு
லூமையெழுத் திற்பொலிந்தே யொண்பொருளோர் நெஞ்ச
தாய்ப்பறவை யாங்கருணை தயாநிதியாஞ் சற்குருவின் [கமே.
றாய்ப்பதுமை மென்கழலிற் றோய்ந்திலையே நெஞ்சகமே.
தெண்ணீர்க் கயமீனுய்த் திகழ்ந்தாண்ட சற்குருவின்
றண்ணீர்மை கொண்டவர்தாள் சார்ந்திலையே நெஞ்சகமே.
[உரு

தத்துவங்க ளாமழுக்கைத் தகைத்துசதா னந்தமெழும்
வத்துகலை யீந்தவண்ணன் மலரடியோர் நெஞ்சகமே.
பொன்னேயுரு வாக்கிமகிழ் புதுமையெனப் புன்மையறு
மென்னேயுரு வாக்குதட்டா னிணையடிசார் நெஞ்சகமே.
மயிர்வினைரு ணுய்வதிந்தே மாசொழித்தன் மானவென்புன்
செயிர்மடிக்கு நாவிதன்றுள் சேர்ந்திலையே நெஞ்சகமே.
பாதரட்சை செய்துதரும் செம்மான்போற் பண்பிலென்றுற்
(1)போதசிட்சை செய்குரவோன் பொற்கழலோர் நெஞ்சக
பவரோக சஞ்சீவி பான்மைமிகுஞ் சற்குருவே [மே.
சிவராஜ யோகமதிற் சேர்த்தருள்வான் நெஞ்சகமே. நo
பரம வவிழ்தமதைப் பண்பொடுவந் தேயருத்தி
பிரமவுரு வாக்கியருட் (2)பிஞகியையோர் நெஞ்சகமே.
சொல்லாமற் சொல்லியவோர் சொல்லையுள மேதுறித்து
நில்லாம னில்லெனவே நிகழ்த்திரு னெஞ்சகமே.
திருவாய் மலர்ந்தருளுஞ் சிற்குரவோன் றண்ணருளா
முருவாகி வெம்பிறவி யொழித்தாளிர்வாய் நெஞ்சகமே.
சங்கற்பத் தால்வளர்ந்த சனனமெனு நீள்வனத்தே
யிங்கற்ப வானரமா யிழிந்தனையே நெஞ்சகமே.
பாம்பின்வாய்த் தேரையதாப் பதைப்புற்றுய் பாரனைத்துந்
தாம்பினர வென்னவுன்னித் தவிர்க்கிலையே நெஞ்சகமே.நரு
ஆணவமாம் வெய்யபிணி யாரியன்பூந் தாட்பொடியைக்
காணவுமே நீறுகிக் காய்ந்தொழியும் நெஞ்சகமே.
ஜீவனுறும் புன்கரணச் சேட்டையொழித் தாரியன்றுட்
காவலொடு மன்பலரா மலங்கலணி நெஞ்சகமே.
வாக்காதி யைந்தொழிய மனோன்மணியாள் பூங்கழலை
நோக்காம னோக்கவெழும் நுண்ணுணர்வோர் நெஞ்சகமே.
ஐம்புலனும் புட்குலனை யருட்கூண்டி னுள்ளடைத்து
பைம்பொனெளிர் சிற்குடிலின் பதைப்பறவாழ் நெஞ்சகமே.

---

(1) போதசிட்சை=ஆணவமலநீக்கம். (2) பிஞகி=சிவன்.

ஆட்கொண்ட நங்குரவோ னருளுருவா மம்பிகைபூந்
தாட்கொண் டவலவினை தகைத்தெளிர்வாய் நெஞ்சகமே.
மறைப்புறுமைங் கோசமதை மாய்ப்பக் கருணையரு [சம்
ணிறைப்புறுஞ்சிற் பூரணத்தே நிலவியொளிர் நெஞ்சகமே.
பொறியைந்தும் வெந்தொழியப் போற்றிமெஞ்ஞா னச்
[சுடரை
பொறியாரும் பாம்பணியாள் பொற்கழலோர் நெஞ்சகமே.
வியாஞதி தத்துவமும் வீய்ந்திடவே நானிறந்த
மயாஞதி யாடல்கொளரும் மலர்க்கழலோர் நெஞ்சகமே.
பூதமைந்தும் பொன்றிவிழப் புங்கவியின் பூங்கமலப்
பாதமலர் போற்றியருட் பண்படைவாய் நெஞ்சகமே.
முக்குணமும் மும்மலமும் முடிந்தவருள் சாகரத்திற்
புக்கொளிர நிற்குணியின் பூங்கழலோர் நெஞ்சகமே. சரு
இருவினைப்புன் பாசமெலா மிரிந்தோட வெண்குணியி
னிருமலமாம் பூங்கழலே நிலவியொளிர் நெஞ்சகமே.
மூடலெனு மாவரண முழுவிட்சே பங்களற
ஆடல்கொளரு மம்பிகையா ளருளருந்தாய் நெஞ்சகமே.
அவித்தையொடு மாயையெலா மழிந்தோட வம்பலத்தே
நவிக்கரங்கொ ளம்மைபதம் நண்ணிமிளிர் நெஞ்சகமே.
சஞ்சிதவா காமியமுந் தாழ்த்தும்ப்ரா ரத்துவமும்
விஞ்சியளரு னத்தழலால் வீய்த்தெதாழிப்பாய் நெஞ்சகமே.
ஜீவனெனுங் கேவலனை சிற்சொருபத் தேதநிறுவி
யோவியம்போற் றண்ணருளா லொன்றிநிற்பாய் நெஞ்சக
எவ்வினையு மெப்பிணியு மெப்பகையு மாய்ந்தறவே [மே.நு
செவ்வியநம் மம்மைபதஞ் சேர்ந்தெளிர்வாய் நெஞ்சகமே.
ஓங்கார மண்டபத்தே யுயர்ந்தவொரு வேதிகையிற்
பங்கா யவிர்ந்தவன்னை பதம்பணிவாய் நெஞ்சகமே.
ஆங்கார மாய்ந்தவிடத் தறிவுருவ மாகியெனுள்
ரீங்கார மானவடா ளிணைந்துருகாய் நெஞ்சகமே.

இரவு பகலொழிந்த விதையாம் பரந்தனீலே
நிரதிசயா னந்தமெய்தி நேர்பெறுவாய் நெஞ்சகமே.
நினைப்பு மறப்பொழித்தே நிராலம்ப மாகிமினி
ரனைத்துலகு மீன்றவளுக் காட்படுவாய் நெஞ்சகமே. நந

தத்துவமெ லாங்கடந்தே ததாகார மாயிலங்கும்
வத்துவெனு மம்மையின்ரூள் வழிப்படுவாய் நெஞ்சகமே.
ஆசைக் கடலகடார்ந் தழுந்தா தகோசரமீ
தோசைச் சிலம்பொலியை யோர்ந்துய்வாய் நெஞ்சகமே.
நிராசை யெனும்நிதியை நிற்குணமாஞ் சிற்கனகத்
தராசி லமைத்தருளால் சார்ந்துய்வாய் நெஞ்சகமே.
நகாரமீ தார்ந்துமிரு நாதவிந்திற் ரோய்ந்தெழுசட்
விகாரமா மெய்த்தொடர்பை வீய்த்திலேய நெஞ்சகமே.
மகாரமெனுஞ் மாயா மயக்கொழித்தே மண்ணுலகின்
விகாரமெலாம் விட்டமல வீடடைவாய் நெஞ்சகமே. கூ0

யகாரமெனுஞ் ஜீவநிலே யடையா தருளுருவாம்
வகாரமெனு மம்மைபதம் வாழ்த்தாயென் னெஞ்சகமே.
சிகாரமெனுஞ் செந்தழலோன் சினகரத்துள் ளேதிகழ்ந்தே
அகாரமெனும் பிர்மநதி யாடுவையே நெஞ்சகமே.
வாக்கா தியவிறந்த மனுதீத மாளிகையை
நோக்காது நோக்கியரு ணுகர்வாயென் னெஞ்சகமே.
மோன மனோநாப்பண் மூவுருவே யோருருவா
யானபொரு ளின்னதென வறிந்திலேயே நெஞ்சகமே.
எப்பொருளு மப்பொருளா யேய்ந்துமினிர் சிற்பொருளைத்
தப்பிதமி லாதறிந்தே சார்ந்துய்வாய் நெஞ்சகமே. கூரு

நிட்கா மியமோடு நிமலபணி யாற்றியன்பின்
உட்கா மியநீத்தே யொளிர்பெறுவாய் நெஞ்சகமே.
அட்டதிசை யுங்கடந்தே யனுதியாய் நின்ரூளிருஞ்
சுட்டழிந்த பூரணத்தே சுகித்திருப்பாய் நெஞ்சகமே.
சொரூப மிறந்தருளால் சுகோதயமாந் தூவெளியி
னரூப நிலையறிந்தே யாட்படுவாய் நெஞ்சகமே.

அஞ்ஞான நித்திரையி லாளுமன மாதியர்கள்
மெஞ்ஞானங் கொள்ளைகொள மெலிந்தனையோ நெஞ்சகமே.
ஆறுசுவை வேட்டே யம்புவியி லேயலைந்து
வீறு பெறுங்கருணை மேவுகிலாய் நெஞ்சகமே. எ

பூசணனற் கூறையொடும் புகலுமட்ட போகமெலாம்
பாசணம்போ லுன்னியதன் பற்றழிவாய் நெஞ்சகமே.
உற்ற துணைவரொடு முயர்தமரும் வான்புவியு
மற்றெவையும் பொன்றிலுடன் வருமோசொல் நெஞ்சகமே.
நானெனுமோர் வல்விலங்கை ஞானவா ளாற்சிதைத்தே
வானிலெளிக் குள்ளொளியாய் மகிழ்ந்திலங்காய் நெஞ்சக
மதுவுண்டார் நஞ்சுண்டார் மானுமெனு மாமறையின் [மே.
முதுமொழியோர் தூயறிஞர் மொய்கழலோர் நெஞ்சகமே.
உயிர்செகுத்து னுண்ணுமிழி யுலுத்தருற வோராதே
செயிர்செகுத்தே சிவோகமதாய்த் தேர்ந்துய்வாய் நெஞ்சக
[மே. எந்

இகமுகங்கொண் டேயிறுமாந் தெழுநிரையத் தெய்தாமே
யகமுகங்கொண் டன்புருவோ டருளுருவோர் நெஞ்சகமே.
ஆரோப மாதியதா லழுங்குமந்த பிராந்தியெலாஞ்
சீராயென் னம்மைபதஞ் சேர்ந்தொழிப்பாய் நெஞ்சகமே.
எண்பத்தி நான்குலட்ச மென்றபல ஜீவனிலு
மொண்பத்தி யார்மனுட வுடலுயர்வாம் நெஞ்சகமே.
மக்கட் குரம்பைபெற்றும் மதேரகித மோனநிலை
புக்கொளிரா தூர்விலங்காய் பொலிந்தனையே நெஞ்சகமே.
இத்தநுவு மொக்கணமோ விறந்தொழியு மென்றறியாப்
பெத்தநிலை பெற்றிழிந்தே பேதமுற்றாய் நெஞ்சகமே. அ
இன்றிருப்போர் நாளை யிருப்பதும்பொய் யென்றவுரை
குன்றின் விளக்கெனவே கொள்வாயென் னெஞ்சகமே.
தேகநிலை யல்லவெனத் தேர்ந்தே வுபேட்சையதா
யோகநிலை பெற்றுயர்ந்தே வுணர்வுருவார் நெஞ்சகமே.

இக்காயம் பொன்றிடினே யினிவருங்கா யம்மெதுவோ
நக்கன்ப தாம்புயத்தே நண்ணியுய்வாய் நெஞ்சகமே.
பிறவி யெழுவகைத்தாம் பெருங்கடலி னற்புணையா
யறனெயெற்றும் பொற்கழலே யார்ந்துய்வாய் நெஞ்சகமே.
இக்குச் சிலையனங்க னெறிந்தகணை பட்டுழன்றே
யக்குச் சடிலன்ரு ளடைந்திலையோ நெஞ்சகமே. அரு
மறையோன் மலர்க்கரத்தான் மலங்கி யழுங்கியந்தே தா
யிறையோ னெழிலடியை யேய்ந்திலையோ நெஞ்சகமே.
ஏமன்வலைக் குள்ளாகி யேக்குண்ட பிராந்தியினல்
வாமன் மலர்க்கழலே மறந்தனையோ நெஞ்சகமே.
ஊனக்கண் காட்சியொன்றி யுலப்பவினைக் குள்ளாகி
ஞானக்கண் காட்சியினை நண்ணுகிலாய் நெஞ்சகமே.
உடலாதி பொய்யெனவே யுய்த்துணர்வி லோராதே
கடலார் திரைமானக் கலக்கமுற்றுய் நெஞ்சகமே.
கண்டனவெ லாம்பரமன் கருணையுரு வாயுளத்தே
கொண்டிறைஞ்சிக் கைதொழுதே குறையொழிப்பாய் நெஞ்
[சகமே. கூ
தத்துவப்பேய் வந்தெதிர்த்துத் தலைவிரித்திங் காடாதே
நித்தனரு ளார்கழலி னிலவுகவென் னெஞ்சகமே.
காமன்மல ரோனிருதி யாதி கருதாமே
வாமன் பதத்துணையை மன்னியொளிர் நெஞ்சகமே.
அல்லும் பகலுமுறு வருளா ரதகோசரத்துச்
சொல்லும் பொருளிழந்தே சுகிப்பாயென் னெஞ்சகமே.
அன்புருவா யேய்ந்திலகு மானந்த சாகரத்தே
யென்புருக வாடியருள் ளின்பமுறுய் நெஞ்சகமே.
இப்பியினின் வெள்ளியென யியங்குஜக மாதியெலாங்
கப்பிதமென் றுன்னிபரன் கருணையில்வாழ் நெஞ்சகமே. கூரு
மாய மயக்கொழிந்தே மனுதீத வான்கருணைத்
தூயவருட் சோதியினுட் டோய்ந்துமிளிர் நெஞ்சகமே.

எல்லாஞ்செய் வல்லசித்த னெம்மிறைவ னெண்குணமார்
வல்லா னருள்வனஞ்சார் வளம்பெறுவாய் நெஞ்சகமே.
வான்கருணை யாரமுதம் வாய்மடுத்தே யின்புருவாய்
ஞானிறந்த பூரணத்தே நண்ணியொளிர் நெஞ்சகமே.
வானமுதை யைந்தருவார் வண்கனிபல் பாகைவெலு
மோனவமு துண்டருளார் முத்தியின்வாழ் நெஞ்சகமே.
அன்பாய்க் கசிந்துகசிந் தருள்வெள்ள மோங்கவதி
லின்பாய்ப் பெருக்கெடுப்ப தென்றேறுவென் னெஞ்சகமே.
பொய்யாடு நெஞ்சினஞ்சுப் புன்மைவிழை வேட்கையுறு [கஂ
மெய்யாடுந் தெய்வவருண் மேவியொளிர் நெஞ்சகமே.
வாழி பரங்கருணை வள்ளல் கடையல்பிரான்
வாழி யவன்மரபின் வளர்ஞான தேசிகனார்
வாழியிப வானனத்தே தான் வாழியயில் வேற்குமரன்
வாழியரு ளம்பிகையாள் வாழிரா ஜேஸ்பரியாள்
வாழிமங்க ளேஸ்பரியாள் வாழியெழில் வெண்மலராள்
வாழிசிர மாலிகையான் வாழியருள் மால்விடைகள்
வாழியுல குண்டபிரான் வாழிதிசை மாமுகவன்
வாழிசர்வ சாக்ஷிநிலை வாழிசம யங்களெலாம் கஂரு
வாழியருண் மாதவர்கள் வாழிதமிழ் மாமறைகள்
வாழிவிசும் பார்ந்தபுனல் வாழிசுர ரானினங்கள்
வாழிமவு ணக்கரசீர் வாழிபஞ் சாக்கரங்கள்
வாழிமகா வாக்கியங்கள் வாழிசைவ தூயவருள்
வாழியுயி ரின்றிரள்கள் வாழி யுலகனைத்தும்
வாழிமன்னர் கோன்முறைகள் வாழியறி நெஞ்சகமே. கஂஅ

மொத்தம் கூடியது. அஉஉ

முற்றிற்று.

எஞ்சாவருளினை நெஞ்சேயிறைஞ்சுக.
சர்வம் சிந்மயம்.

ஓம்

தத்ஸத்

ஸ்ரீ சற்குரூப்யோ நம:

நெடியமாநகரின்கண் ணெழுந்தருளியிராநின்ற

ஸ்ரீ அப்பரானந்த ஞானதேசிக சுவாமிகள் மீது

ஊத்துமலை வித்வான்

திருவாளர்: S. கிருஷ்ண ஆச்சாரியவர்கள்

இயற்றிய

திருப்பொன்னூசற் பதிகம்.

அருளுருவ சிவமயமா யருளானந்தத்
ததிமணமே நவமணியே யாடூசல்.
இருவினைமும் மலப்பிறவி யறுத்தேயன்ப
ரிதயமதி னடம்புரிவா யாடூசல்.
கருவிகர ணாதிகளைந் ததீதமாகிக்
கலந்துநின்ற பழம்பொருளே யாடூசல்.
அருணிறைந்த வடியவர்கட் காகவேய்ந்தே
யப்பரா னந்தமகிழ்ந் தாடூசல். க

மன்னியசாக் கிரமதனி லறுநான்காகி
மருவியசொற் பனதலத்திற் பதினன்காகிப்
பன்னுசுழுத் தியிற்கருவி நாலதாகிப்
பகரரிய துரியதலத் திரண்டதாகிச்
சொன்னயஞ்சேர் துரியாதீ தத்திலேக
சுகானந்தச் சுடரொளியாய்த் துலங்கிநின்றே
அன்னநடை யிருளகற்றி யம்மையோடு
மப்பரா னந்தமகிழ்ந் தாடூசல். உ

திருப்பொன்னூசற் பதிகம்

கயிலைமக மேரிரண்டுங் கால்களாக
கனகமணி மந்த்ரகிரி விட்டமாக
வியல்பெருகு பூமிமணிப் பலகையாக
வெழில்வேத மொருநான்குங் கயிறதாக
பெயுமழைபோற் பொழியுமருண் மாலைகாற்றி
பிரியமுட னலங்கரித்த வூஞ்சலேய்ந்து
அயில்விழியம் பிகையுமைபங் சமிபங்காள
னருளப்ப ரானந்த வாடூரூசல். ங

இடையொடுபிங் கலையிரண்டுங் கால்களாக
வினங்கிநின்ற சுழுமுனையில் விட்டம்போட்டங்
கடைவுடனே ஓங்காரப் பலகைசேர்த்தே
யணிபெறநாற் காணமெனுங் கயிறுபூட்டி
சடமிகழுங் கன்னியர்கள் வடந்தாட்டாட்ட
ஜயஜயவென் றிருடரங்குஞ் சீடர்போற்ற
அடலரவிற் றுயின்மாலே யாடூரூச
லப்பரா னந்தமகிழ்ந் தாடூரூசல். ச

பொன்னுலவு திருமகளோர் பக்கமாக
புகழரிய நிலமகளோர் பக்கமாக
மன்னுமறை முனிவரெலாம் வணங்கியேத்த
வகார அகார உகாரமானஜோதி
யின்னிலடன் னுயிரனைத்தும் புரக்கவேண்டி
யிதுநிலையென் றிதுபொருளென் றியல்பாய்க்கூறிப்
பன்னுதமிழ் நெட்டூரம் பதியின்மேலாம்
பரமவப்ப ரானந்த வாடூரூசல். ஞ

அந்தமா கியவாணைப் பந்தலாக
வரியநட்சத் திரங்களெலாம் விதானமாகச்
சந்ததமுஞ் சித்ரகதி முரசமார்ப்ப
சமயமிவை யீராறும் விருதுகூற

வீந்திரன்வா னவர்முனிவோர் வணங்கியேத்த
விந்த்ராணி திலோத்தமையுங் கவரிவீச
மந்திரமா மலையுமையாள் பக்கமாக
வளரப்ப ரானந்த வாழ்ரூசல். சூ

இருள்பகலில் லாததுவே யடியதாகி
(1) யெனைவிழுங்குந் தூவெளியே முகமதாகி
யருள்வெளியை விழுங்குமின்பே முடியதாகி
யகண்டிதா காரமேத யுடலதாகி
கருதரிய பிரணவசிற் சத்தியோடுங்
கதிர்மதியாய் செழுஞ்சுடராய்க் கலந்துநின்ற
பரபிரம வானந்த சொரூபமான
பரமவப்ப ரானந்த வாழ்ரூசல். எ

(2) தனஞ்சயநா மப்பெயராம் பெரியஜோதி
சந்திரமண் டலத்தலத்தைத் தணந்துபுன்மை
யினஞ்செறிந்த காளவிட மெனவேநாளு
மிருணிறைந்த நரகினிடை யெனைத்தள்ளாதே
யனந்தகதி ரருள்வடிவா யிலங்குவன்னி
யதிதவெளி வீட்டையன்பாய் நல்கிநாளு
மனமகிழ்ந்து குருவடிவா யென்முற்றேன்றி
வருமப்ப ரானந்த வாழ்ரூசல் அ

வீரவுமருட் கதிர்செறியா தித்தன்றேன்றி
விளங்கியபோ தருவுருவாய் வெளியினின்றே
(3) யுரவுமிது யானெனவுள் ளன்புகூர்ந்தே
(4) யுப்புறவுள் ளடங்கிநின்ற வுண்மையோங்கி
யிரவுபக லிரண்டற்றத் துவிதமேவ
யிகபரசா தனமவிழ்ந்த வின்பைநல்கும்

---

(1) எனை=தற்போதம் (2) தனஞ்சயன்=ஒளி
(3) உரவு=அறிவு. (4) உப்புற=நிரம்ப.

திருபோன்னூசற் பதிகம்

பரவடிவே யப்பரா னந்தமேதேவே
பரப்பிரம ஜோதிமகிழ்ந் தாடூரூசல். கூ

பச்சைமர கதமதனற் கால்கள்நாட்டிப்
பளிங்குவயி டூரியத்தால் விட்டம்போட்டு
இச்சையுடன் சொர்னச்சங் கிலிகள்பூட்டி
யிழைத்தநவ ரத்தினத்தாற் பலகைசேர்த்து
கச்சணிந்த வனமடவார் கவரிவீச
கலைபயில்பா டகவணங்கார் வடந்தொட்டாட்ட
உச்சிதமாய் குழந்தைமுத்தா னந்தரோடும்
உயரப்ப ரானந்த வாடூரூசல் கo

முற்றிற்று.

திருப்பொன் னூசலை விருப்புட னேத்துக.

சர்வம் சிந்மயம்.

ஓம்

கதஸ்தத்

ஸ்ரீ சற்குரூப்யோ நம:

சைவசமய விளக்கம்.

சைவமஞ்சரி.

சைவத்தின் மேற்சம யம்வே
றிலேபதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு
நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவார
மூந்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொற்
ரூளெம் முயிர்த்துணே யே.

க

தாயுமானர்.

சைவ சமய மேசமயஞ்
சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளிக்
காட்டு மிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் தழலுஞ் சமயநெறி
புகுத வேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேர வாருஞ் செகத்தீரே.

உ

சிவஞான சித்தியார்.

யாதொரு தெய்வங் கொண்டீ
ரத்தெய்வ மாகியாங்கே
மாதொரு பாக ரூர்தாம்
வருவர்.

திருவெண்ணீற்று மகிமை.

திருமந்திரம்.

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூச மகிழ்வீரே யாமாகிற்
றங்கா வினைகளுந் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வீரே. ங

சிவப்பிரகாசர் சோணசயிலமாலை.

வெண்டிரு நீறு புனையுமா தவர்க்கு
விருந்துசெய் துறும்பெறு மிடியுங்
கொண்டநல் விரதத் திளைத்தயாக் கையுமிக்
கொடியனேற் கருளுநா ளுளதோ
வண்டுழுங் குவளை மலர்த்தடஞ் சுனைவாய்
மற்றை வானவர்க் குரித்தன்றித்
தண்டியுண் மகிழக் கொளப்புகுஞ் சோண
சயிலனே கயிலைநா யகனே. ச

பட்டினத்தடிகள்.

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் சொருகி யறிவழிந்து
மெய்யும்பொய் யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்
செய்யுந் திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக் [யான்
கையுந் தொழப்பண்ணி யைங்தெழுத் தோதவுங் கற்பியுமே.
[ரு

தேவாரம்.

வேதத்தி லுள்ளது நீறு, வெந்துயர் தீர்ப்பது நீறு,
போதந் தருவது நீறு, புன்மை தவிர்ப்பது நீறு,
ஓதத் தகுவது நீறு, வுண்மையி லுள்ளது நீறு,
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவாலவா யான்றிரு நீறே. சூ

சடகோபர் திருவாய் மொழி.

கரிய மேனிமிசை வெளியதீறுகிறி தேயிடும்
பெரிய கோலத் தடங்கண்ணன்.

உபதேச காண்டம்.

யாது பாதகம் புரிந்தன ராயினு மிகழும்
பாத கங்களிற் பஞ்சமா பாதக மெனினும்
ஓதி போற்றிடிற் செல்வரா யுலகெலாம் போற்றத்
தீது தீர்ந்தனர் பவுத்திர ராகியே திகழ்வார். எ

சீகாளத்தி புராணம்.

புழுகுசெஞ் சாந்திவை புனைந்து புன்மல
மொழுகுமொன் பான்றுளை யுடம்பை யென்றுநீ
யழகுசெய் திடின்மல மகலு மோபரன்
முழுகுவெண் ணீறிடின் முற்று மாயுமே. அ

உருத்திராக்ஷ மகிமை.

சிதம்பர சுவாமிகள்

உபதேசவுண்மை.

அக்கு மாமணி யணிபவ ரடியிணை பணிவோ
ரெக்கு லத்தவ ராயினு மவர்களைச் சிவமாய்த்
திக்கு நோக்கிநின் றேத்திடாத் தீமைய ரெல்லாம்
நக்கு நாயினுங் கடையெனப் புகலுநான் மறையே. கூ

பிரமோத்திர காண்டம்.

அரனி டத்திலன் பற்றவ ரவனக்க மணியுந்
திருவெண் ணீறுமெய் தரிக்கிலாப் பாதகச் சிதட
ருரிய வஞ்செழுத் துணர்கிலா நீசர்பே ருலகிற்
காமெ னக்குரை ஞமலிதா னெனப்பவங் கழிப்பார். கo

திருநெல்வேலித் தலபுராணம்.

தீமை யெத்தனை செய்திடு தீங்கின ரேனு
மாய்கை யுற்றிறு காலையி லக்கமா மணியை
நேய மாயடை வோடுமுட் கொண்டிட நீங்குங்
காய வெந்துயர் நீங்கியே கயிலையி லிருப்பார். கக

உபதேச காண்டம்.

சென்மித்த நாண்முதலாய்த் தீநெறிக்கட் சென்றுசென்று
வன்மித்த நெஞ்சராய்க் கொன்றுண்ட வன்கணரும்
நின்மித் தரனருள் நீண்மணியி லொன்றணிந்தா
லென்மற் றவர்பெரும்பே றெம்மனோர்க் கெய்துவதே. கஉ

யாது தவமிழைத்தா ராலு மிம்மணியோர்
போது தரித்திலரே லத்தவமும் பொய்மையே
யூதி யுலோக முருக்கியவர் சிந்தூரத்
தாது கொடுத்திலரே லென்னுமத் தன்மையதே. கங

சீகாளத்தி புராணம்.

ஆயிரங் கலனுடம் பனைத்துந் தாங்கினு
மாயிரும் பொறையலால் வருவ துண்டுகொல்
நாயகன் விழிமணி யொன்றொர் நாளுடன்
மீயணிந் திடில்வினை யாவும் வீயுமே. கச

ஏகாக்ஷர மகிமை.

திருமந்திரம்.

ஓங்காரி யென்பா ளவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை யுடையவ
ளாங்காரி யாகியே யைவரைப் பெற்றிட்டு
நீங்காரத் துள்ளே யினிதிருந் தாளே. கரு

ஊமை யெழுத்தொடு பேசு மெழுத்துறில்
ஆமை யகத்தினி லஞ்சு மடங்கிடும்
ஓமய முற்றது வுள்ளொளி பெற்றது
நாமய மற்றது நாமறி யோமே. கசு

திரு அருட்பா.

ஓங்கார மேடையின்மேல் யானிருந்த தருணம்
வுவந்தெனது மணவாளர் சிவந்த வடிவகன்றே
றீங்காரப் பளிக்குவடி வெடுத்ததிரோ நின்று
ரிருந்தருள்க வெனவெழுந்தே னெழுந்திருப்ப தென்னீ
ஆங்கார மொழியென்று சொழிந்திருந்தே னப்போ
தவர்நாமே நானவரோ வறிந்திலன்முன் குறிப்பை
ஊங்கார மிரண்டுருவு மொன்றுமே மாங்கே [கள
வுறைந்தவனு பவந்தாழீ நிறைந்த பெருவெளியே.

பட்டினத்தடிகள்.

ஓங்கார மாய்நின்ற வத்துவி லேயொரு வித்துவந்துப்
பாங்காய் முளைத்த பயனறிந் தாற்பதி னுலுலகும்
நீங்காமல் நீங்கி நிறைவாய் நிறைந்து நிறையுருவா
யாங்கார மானவர்க் கெட்டாக் கனிவந் தமர்ந்திடுமே. கஅ

பாடுதுறை.

ஓங்காரத் துட்புகுந் துச்சி யேறி
யொன்பது துவாரத்தி னுட்பு குந்து
தூங்காமை தூங்கிநின் முடாய் பாம்பே
தொந்தந் கடந்தோதாமென் முடாய் பாம்பே. ககூ

துவிதாக்ஷர மகிமை.

திருமந்திரம்.

சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே. ௨0

சிவப் பிரகாசர்.

வேத மாகமம் வேறும் பலப்பல
வோதி நாளு முளந்தடு மாறன்மின்
சோதி காணிருள் போலத் தொலைந்திடுந்
தீதெ லாமுஞ் சிவசிவ வென்மினே. ௨௧

எண்ணி நெஞ்சிற் சிவசிவ வென்பவர்
வண்ண மென்பதங் கிட்டி வணங்கவு
முண்ண டுங்குவ ரெண்டிறற் கூற்றுவன்
றிண்ண மீது சிவசிவ வென்மினே. ௨௨

விருத்தாசலப் புராணம்.

திருத்தமா யொருத்தன் செவிப்புலன் கேட்கச்
சிவசிவ வென்றிடிற் பிணமே
லிரித்திடு மிடிபோ லெரித்திடும் பாவ
மிறப்பொடு பிறப்பெலா மிரியு
மொருத்தன்வா யாரச் சிவவென முக்கா
லுரைத்திடி லோருரை யதற்குக்
கருத்தன்வாழ் பதத்தி லிருத்திடு மிரண்டுங்
கடவுண்மேற் கடன்களாய் நிற்கும். ௨௩

சிவஞான வள்ளலார்.

பாசமாகிய விரண்டையும் படிறெனத் தள்ளி
நேசமாகிய விரண்டையு நெஞ்சிடை யழுத்தி
காசநீங்கிய கண்ணென முத்தியைக் காண்பா
யாசைநீக்கிய நிலையிது விதற்கிலை யையம். உச

கல்லா லமர்ந்தாரைக் கண்மூன் றுடையாரைச்
சொல்லாமற் சொல்லவந்த தூயாரைப்—பல்காலுஞ்
சிந்தி சிவோகஞ் சிவோகஞ் சிவோகமென
வந்தி பிறப்பறு மாறு. உரு

பாடுதுறை.

அளவிறந்தது அருள்சிவ சிவசிவ
அகநிறைந்தது அடியிணை சிவசிவ
வுளமிறந்துயி ருணர்வொடு பரமற
வொளிருகின்றது சிவசிவ சிவசிவ
களவுதுன்றிய கனகலை னுளநிறை
கழல்கொளன்பது கையிலை சிவசிவ
தெளிவினன்குறு தெளிதரு மனுபவ
திதிதிகழ்ந்தது சிவசிவ சிவசிவ. உசு

பஞ்சாக்ஷர மகிமை.

திருவாசகம்.

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
தேனுயின் னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனுருகும் முயிர்வாழ்க்கை யொறுத்தன்றே வெறுத்திடவே.

[உள

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர்த் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே வுய்யுமா றென்றென் றெண்ணி
யைங்கதழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே. உஅ

தேவாரம்.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. உக

பட்டினத் தடிகள்.

அஞ்சக் கரமெனுங் கோடாலி
கொண்டிந்த வைம்புலனும்
வஞ்சப் புலக்கட்டை வேரற
வெட்டி வளங்கள் செய்து
விஞ்சத் திருத்தி சதாசிவ
மென்கின்ற வித்தை யிட்டுப்
புஞ்சக் களைபறித் தேதன்வளர்த்
தேன்சிவ போகத்தையே கூ

உபதேச காண்டம்.

அஞ்செ ழுத்தெனு மருமறை மந்திர மதனை
நெஞ்ச ழுத்தவர் முழுமுதற் றேவனை நிகர்ப்பார்
பஞ்ச பாதகர் மீதுமற் றவர்நிழற் படினுஞ்
செஞ்ச லேயவர் காண்கினும் பவந்தொலை செல்லும். கக

ஔவையார்.

சிவாய நமவென்று சிந்தித் திருபபோர்க்
கவாய மொருநாளு மில்லை—உபாய
மிதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும். நஉ

அஞ்சக் கரத்தி னரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தி னிலையறி வித்து. நந

சிவஞான வள்ளலார்.

நகர மாகிய சேரியை நஞ்சென வெறுத்து
மகர மாகிய மயலெலாம் வேரறக் களைந்து
வகர மாகிய வனத்திடை யிருந்திளைப் பாறிச்
சிகர மாகிய நகரினை யடைந்தன ஜீவன். நச

கடம்பவன புராணம்.

அஞ்செ ழுத்தினு ளோரெழுத் தின்பய னளவைக்
கஞ்ச நாண்மலர்க் கண்ணனுங் கண்ணனுங் காணர்
செஞ்ச வேபிர ணவத்தெதாடுஞ் சேர்த்தியுச் சரிக்கிற்
பஞ்ச பாதக ராயினும் பரனெனப் படுவார். நரு

தாயுமானர்.

அஞ்செழுத்தி னுண்மை யதுவான வப்பொருளை
நெஞ்செழுத்தி யொன்றுகி நிற்குநா ளெந்நாளோ. நசு

அருணகிரியந்தாதி.

இருந்துநினைப் பார்த மிருவினையை நீக்கும்
பொருந்துமிடி யிம்மையிலே போக்கு—மருந்தன்றே
தம்பிரா னெவ்வுயிர்க்குந் தாணு வருணகிரி
எம்பிரா னோரஞ் செழுத்து. நஎ

அறிஞர் நெறி.

திரு அருட்பா.

பரமேது வினைசெயும் பயனேது பதியேது
பசுவேது பாசமேது
பத்தியே தடைகின்ற முத்தியே தருளேது
பாவபுண் ணியங்க ளேது
வரமேது தவமேது விரதமே தொன்றுமிலை
மனம்விரும் புணவுண்டுநல்
வத்திர மணிந்துமட மாதர்தமை நாடிநறு
மலர்சூடி விளையாடி மேற்
கரமேவ விட்டுமுலை தொட்டுவாழ்ந் தவரொடு
கலந்துமகிழ் கின்ற சுகமே
கண்கண்ட சுகமிதே கைகண்ட பலனெனுங்
கயவரைக் கூடாதருள்
தரமேவு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. கஅ

உமாபதி சிவாச்சாரியார்.

உற்றதிரு நீறுஞ் சிவாலயமு முள்ளத்துச்
செற்ற புலையர்பாற் செல்லாதே—நற்றவஞ்சேர்
வேடமுடன் பூசையருண் மெய்ஞ்ஞான மில்லாத
மூடருடன் கூடி முயங்காதே—நீட
வழித்துப் பிறப்ப தறியா தரனைப்
பழித்துத் திரிபவரைப் பாராதே. சக

காசியாத்திரை.

வானமெல்லா மாளினுமிவ் வையம் புரக்கினுமெய்ஞ்
ஞானமில்லா ரேனழயன்றே நட்பே பராஞ்சோதீ. சஉ

சிவஞான மில்லாத செல்வ வழியெல்லா
மவஞான மென்றகன்றே ளளாய் பராஞ்சோதீ. சஙு

சிவஞான சித்தியார்.

ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராண
நல்லவா கமஞ்சொல்ல வல்லவா மென்னு
மூனத்தா ரென்கடவ ரஞ்ஞா னத்தா
லுறுவதுதான் பந்தமுயர் மெய்ஞ்ஞா னந்தா
ஞனத்தா லதுபோவ தலர்க்கதிர்முன் னிருள்போ
லஞ்ஞானம் விடப்பந்த மறுமுத்தி யாகு
மீனத்தார் ஞானங்க ளல்லா ஞான
மிறைவனடி ஞானமே ஞானமென்பார். சச

தேவாரம்.

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போன்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியா
னுறவு கோனட் டுணர்வு கயிற்றினன்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே. சருி

திருவாசகம்.

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளே னினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் றிருவரு ளாலே யிருக்கப் பெரினிறைவா
வுள்ளேன் பிறதெய்வ முன்னையல்லா தெங்க ளுத்தமனே.
சசூ

ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்
கன்பிலை யென்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிணைநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ ரலறிலை
செய்வதான் றறியேனே. சள

உற்றுரை யான்வேண்டே னூர்வேண்டேன் பேர்வேண்
கற்றுரை யான்வேண்டேன் கற்பனவு மினியமையுங்[டேன்
குற்றுலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றுவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே. சஅ

தாயுமானார்.

தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்டமிதிலோ
சந்தேத கமில்லைமணி மாடமா ளிகைமேடை
சதுரங்க சேனையுடனே
வந்தேதார் வாழ்வுமோ ரிந்த்ரஜா லக்கோலம்
வஞ்சனை பொறுமை லோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வாஞ்சனையி லாதகனவே
யெந்தநா ளுஞ்சரியெ னத்தேர்ந்து தேர்ந்துமே
யிரவுபக லில்லாவிடத்
தேகமாய் நின்றநின் னருள்வெள்ள மீதிலே
யானென்ப தறவுழ்ந்கிச்
சிந்தைதான் தெளியாது சுழலும்வகை யென்கொலோ
தேடரிய சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானந் தமே. சக

இறப்பும் பிறப்பும் பொருந்த—எனக்
கெவ்வண்ணம் வந்ததிதன் றெண்ணியான்
மறப்பு நினைப்புமாய் நின்ற—வஞ்ச [பார்க்கின்
மாயா மனத்தால் வளர்ந்தது தோழீ. ரும

சினமிறக்கக் கற்றலுஞ் சித்தியெல்லாம் பெற்றலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே. ருக

அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே. ருஉ

கந்தரநுபூதி.

வளைபட் டகைமாதொடு மக்களெனுந்
தளைபட் டழியத்தகு மோதகுமோ
கிளைபட் டெழுசூருற முங்கிரியுந்
தொளைபட் டுருவத்தொடு வேலவனே. ருங

செம்மான் மகளைத திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விரு சொல்லற வென்றலுமே
அம்மா பொரு ளொன்று மறிந்திலனே. ருச

சிவஞான வள்ளலார்.

காமமா திகளை நீத்துக் கருணைவா தனைகடந்து
காமது வெனுஞ்சம் பந்த ஞானமே ஞானமாகி
ஓமொழிப் பொருளைத் தேதறியுணர்வுண ராமை
[போக்கி
யாமைமோ லைந்தடக்கி நிற்பதே யமலயோகம். ருரு

திருநந்திதேவர் விண்ணப்பம்.

மறைக ணிந்தனை சைவநிந் தனைபொரு மனமும்
தறுக ணம்புலன் களுக்கேவல் செய்துறுச் சதருரும்
பிறவி தீதெறுப் பேதையர் தம்மொடு பிணக்கும்
உறுதி நல்லறஞ் செய்பவர் தங்களோ டுறவும். ருசு

யாது நல்லன்பர் கேட்கினு முதவுறு மியல்பும்
மாத வத்திறை சொறுப்பினும் வணங்கிடு மகிழ்வும்
ஓது நல்லுப தேசமெய் யுறுதியு மன்பர்
தீது செய்யினுஞ் சிவச்செய லெனக்கொளுந் தெளிவும். நுஎ
மனமும் வாக்குநின் னன்பர்பா லொருப்படு செயலும்
கனவி லும்முன தன்பருக் கடிமையாங் கருத்தும்
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்
புனித நின்புகழ் நாடொறு முரைத்திடும் பொலிவும். நுஅ

தீமையாம் புறச் சமயங்க ளொழித்திடுந் திறனும்
வாய்மை யாகவே பிறர்பொருள் விழைவுறு வளனும்
ஏழை யும்பர தாரநச் சிடாதநன் னெறியும்
தூய்மை நெஞ்சின்யா னெனதெனுஞ் செருக்குறுத் துற
[வும். நுக
துறக்கமீ துறையினு நரகிற் றுயினும்
இறக்கினும் பிறக்கினு மின்பந் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணிசடைப் பெரும விவ்வரம்
மறுத்திடா தெனக்குநீ வழங்கல் வேண்டுமால். கூ

அறிஞர் மாட்சி.

சூத சங்கிதை.

நடந்தாலு மிருந்தாலு நவின்றாலுந் துயில்கொண்டு
கிடந்தாலும் விழித்தாலுங் கிளர்முடிமன் னவர்முதலோர்
தொடர்ந்தாலுந் தொழுதாலுந் துதித்தாலு மவமதித்துக்
கடந்தாலு மெய்ஞ்ஞானி கமலவிலைப் புனல்போல்வான். கூக

திருமந்திரம்.

ஈச னடியா ரிதயங் கலங்கிட
தேசமு நாடுஞ் சிறப்பு மழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமு
நாசம தாகுமீ மநந்தி யாணையே. கூஉ

அகர மாயிர மந்தணர்க் கீயிலென்
சிகர மாயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரிலை யென்பது நிச்சயந் தானே. கூஉ

பெரிய புராணம்.

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலா ரடியார்தமை யழுதுசெய் வித்தல்
கண்ணி னுலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனி னுலகர்முன் வருகென வுரைப்பார். கூச

திருக்குறள்.

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று. கூரு

ஐந்தவித்தா னுற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி. கூசு

பாராயண சிந்தாமணி.

ஞால முண்டவன் தலைமிசை சுமப்பன்மெய்ஞ்
ஞானிவேண் டுவதெல்லாம்
ஆல முண்டவன் அவன்பின்னே திரிகுவன்
அவனடி துகட்கன்றே
சிலமன்னரு மற்றுள தேவருந்
திசைதிசை பணிந்தேத்தக்
காலி ரண்டையுந் தலைமிசை வையெனக்
கழறுவன் கமலத்தோன். கூள

ரிபுகீதை.

திடஞானி தெரிசனமே தீர்த்தமாடல்
திடஞானி தெரிசனமே தேவபூசை
திடஞானி தெரிசனமே ஜெபதபங்கள்
திடஞானி தெரிசனமே செயுமறங்கள்

திடஞானி தெரிசனமே சிவத்தைதக்காணல்
திடஞானி தெரிசனமே சிவத்தின்சேவை
திடஞானி தெரிசனமே மேவுதற்குத்
திரிவிதமா முலகத்து மரிதாமியார்க்கும். சுஅ

பதிபசு பாச விளக்கம்.

எந்தக் குலத்திற் பிறந்தாலு
மீச னடியார்க் கிழுக்கில்லை
நிந்தை செய்தோர் நரகுறுவார்
நித்த ஞணை யையமில்லை
மைந்த ரோடு மனையோடு
மாளா திருந்த நிதியோடு
மெந்தை யடியார் மனங்கலங்கி
லீரே முலகுங் கலங்காவே. சுசு

சசிவன்ன போதம்.

புணர்ந்த பாவமெ லாம்பரி பூரண
முணர்ந்த ஞாநி விழிபட வோடுமே. எ०

மங்களம். மங்களம். மங்களம்.

சைவசமய விளக்கம்.

சம்பூரணம்.

சைவ சமயத் தெய்வத் திணைபணி.
சர்வம் சிந்மயம்.

ஹிலால் பிரஸ், வடக்கு ரத வீதி, திருநெல்வேலி.

ஓம்:
தத்ஸத்.
ஸ்ரீசற்குரூப்யோ நம:

பிழைதிருத்த அட்டவணை.

பக்கம்	பாட்டு	வரி	பிழை	திருத்தம்
ii	...	கஙூ	மூத்தம்மையாரைத	மூத்தம்மையாரைத்
iii	...	ஙு	குறைவாச்	குறைவறச்
iv	...	கள	தமைக்கை	தமக்கை
...	...	உஙு	யிரானின்ற	யிராநின்ற
xii	...	ககூ	விச்ரக	விக்ரக
கஉ	ஙக	உக	நோக்கின்	நோக்குறு
கச	கூஙூ	உஙு	நிரீஇ	நிறீஇ
கஙு	கூள	ச	றருளான்	றருளால்
கஅ	சo	ககூ	யருமபிணி	யரும்பிணி
உக	உஉ	உகூ	பணை	புணை
உச	ஙஙூ	க	அபயனின்	அபயநின்
ஙக	கூ	கஉ	சூ	கூ
...	கo	கஅ	தொருக்கல்	தொறுக்கல்
சo	உ	ங	கொளலுங்	கொளவுங்
சள	க	கஙூ	புரழ	புரள
...	உ	உக	ஞவினுலு	ஞவினிலு
ஙுக	அ	ககூ	விண்ணதிற	விண்ணதிர
ஙுஉ	கூ	ங	தோராடும்	தோறுடும்
ஙுஙு	உஙூ	உகூ	தொருக்கும்	தொறுக்கும்
ஙுஅ	கூஉ	கச	பார்த்தாட்	பார்த்தாள்
கூச	கள	எ	பழுத	பழுத்
கூகூ	உகூ	உகூ	னைந்து	நைந்து
எo	ங	கஙூ	குறோத	குரோத
எஙு	கக	க	திழைக்கு	திளக்கு
அக	கள	கக	னைந்து	நைந்து
...	ககூ	உஙூ	யேய்திடுங்	யேய்ந்திடுங்
கூஉ	...	உஙு	காரணவுடல	காரணவுடல்
கூஅ	க	உ	பாணனின்	பாணனனின்
கoஙு	கoச	எ	திழைத்து	திளத்து
கoள	க	உ	வெழிற	வெழிற்
ககக	கூo	கஙூ	மெணுஞ்	மெணு
ககச	அஉஙூ	உஙு	அஉஉ	அஉங
கஉள	ஙஉ	க	திருப	திருப்
கஉகூ	சகூ	கூ	பெரி	பெறி
கஙக	ஙச	கஙூ	மகளத	மகளத்
...	ஙஙு	உo	யோகம	யோகம்